வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபாலாநிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
# SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 மார்கழி திங்கள் 15-ம் நாள் (30—12—1962) ஞாயிற்றுக்கிழமை சஃபான் 2 | இதழ் 31

# யு. என். பி.-எதிர்ப்பு முன்னணி

## உருவாக்க சில எம். பி.கள் முயற்சி

### கொழும்பு முனிசிபல் தேர்தலில் தோல்வி அடைந்ததின் எதிரொலி

கொழும்பு முனிசிபல் தேர்தலில் பட்ட அடியில் அரசாங்க எம். பிகள் கதி கலங்கியுள்ளனர். யு. என். பி யை முறியடிக்க ஓர் யு. என். பி. எதிர்ப்பு முன்னணியை நிறுவ முயற்சிகள் நடைபெறுகின்றன. சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளைக் கொண்ட ஒரு முன்னணியை அமைக்க வேண்டுமென்ற தீர்மான மொன்று அரசாங்கப் பாராளுமன்றக் குழு கூட்டத்தில் பிரேரிக்கப்படுமென அறியப்படுகிறது.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலிலே ஐக்கிய தேசிய கட்சி பெற்ற வெற்றி அரசாங்க எம். பிக்களிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதர நகராட்சி மன்றத் தேர்தல்களிலும் ஐ. தே. கட்சி கணிசமான அளவு வெற்றி பெற்றிருப்பதும், வாரியபொல உபதேர்தலில் அரசாங்க கட்சியின் பெரும்பான்மை வாக்குகள் படுமோசமான அளவுக்குக் குறைந்துவிட்டதும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினுள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

#### பெருங்கவலை

கொழும்பு தேர்தல் முடிவு நாடு முழுவதும் எதிரொலிப்பதால் அவர்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

இந்த நிலை நீடிக்குமாயின் அடுத்த பொதுத் தேர்தலில் யு. என். பி. ஆட்சியைக் கைப்பற்றி விடுமென்று அரசாங்க எம். பிக்கள் அநேகர் அஞ்சுகின்றனர்.

ஆகவே யு. என். பிக்கு எதிரான அனைவரும் ஒன்று சேர்ந்து யு. என். பியை முறியடிக்க வேண்டுமென்ற கருத்து அரசாங்கக் கட்சிக்குள் பலமடைந்துவருகிறது.

சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்டுக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய நான்கு கட்சிளும் ஒன்று சேர்ந்து ஒரு பலம் பொருந்திய முன்னணியை அமைகக வேண்டும் என்று சில அரசாங்க எம். பிக்கள் ஏற்கனவே வற்புறுத்தத் தொடங்கி விட்டனர்.

அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலே இத்தகைய முன்னணி அமைப்பதற்கான ஒரு தீர்மானம் கொண்டு வரப்படுமென்று அறியப்படுகிறது.

நாரளை எம். பி. திரு. விலியம் பர்ளுந்து, பண்டாரவளை எம். பி. திரு. குணசேகரா முதலியோர் இவ் விஷயத்தில் தீவிரமாக இருக்கின்றனராம்.

(9-ம் பக்கம் பார்க்க)

* கட்டுரைகள்
* கதைகள்
* கவிதைகள்
* வர்ண முகப்பு

முதலியவற்றுடன்
புதுப் பொலிவுடன் பொங்கலன்று
உங்கள் கரங்களிலே தவழும்

**சுதந்திரன்**
**பொங்கல் இதழ்**

## பிரதம மந்திரி முதலில் பீகிங் சென்றதேன்?

### கொழும்பு மகாநாட்டு யோசனைகளை திருத்தும்படி இந்தியா கோருமா?

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சீனாவுக்கும் இந்தியாவுக்கும் தூது சென்றுள்ளார். அவர் முதலில் புதுடில்லிக்குச் சென்று பின்னர் பீக்கிங் செல்வதாகவே முதலில் திட்டமிடப்பட்டது. பின்னர் அத்திட்டத்தை மாற்றி பீக்கிங்குச் சென்று பின்னர் புதுடில்லிக்குச் செல்வதாக ஏற்பாடாயிற்று. காரணம் என்ன?

கொழும்பு மகாநாட்டின் சமரச யோசனைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள இந்தியா தயாராக இல்லையென்று தெரிகிறது. லடாக் பிரதேசம் சம்பந்தமாக மகாநாட்டின் யோசனை ஒரு தலைப்பட்சமான தென்றும் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டால் இந்தியா தன் 43 காவல் நிலையங்களை இழக்கவேண்டிய நிலை ஏற்படுமென்றும் எனவே மகாநாட்டின் யோசனைகளைத் திருத்தியமைக்கும்படி நேருஜி கோருவார் என்பதில் ஐயமில்லையென்றும் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஆதலின் முதலில் பீகிங் சென்று இந்தியாவின் கோரிக்கைகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு முடிவெடுத்து, பின்னர் புதுடில்லி வந்து நேருஜியுடன் பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கத்துடன்தான் பிரதமர் தனது பிரயாணத் திட்டத்தை மாற்றியிருக்கலாம்.

கொழும்பு மகாநாட்டின் யோசனைகளுக்கு பீகிங்கில் பலத்த வரவேற்பு கிடைத்துள்ளதாம். பிகிங்கில் நடைபெற்ற விருந்துபசாரமொன்றில் சீன வெளி விவகார மந்திரி ஜெனரல் சென்-யீ பேசுகையில் கொழும்பு மகா நாட்டின் யோசனைகளையும், இலங்கைப் பிரதமர் தூது செல்வதையும் வானளாவ வாயாரப் புகழ்ந்தார் என்று ஒரு செய்தி கூறுகிறது.

ஆனால் இந்தியப்பத்திரிகைகள் அனைத்தும் அந்தயோசனைகளை வன்மையாகக்கண்டிக்கின்றன. எனவே மகாநாட்டு யோசனையில் பெரும் மாற்றங்கள் செய்யப்படாவிட்டால் இந்தியா அவற்றை ஏற்றுக்கொள்ளாதென்றே தெரிகிறது.

## 'சேருவாவில, தீகவாபி' காணிகளில் தமிழர்கள் குடியேறியுள்ளனராம்

### ஸ்தலத்தில் விசாரணை செய்ய ஆறு எம். பி.களை நியமிக்க பிரதமர் முடிவு

சேருவாவில, தீகவாபி பௌத்தாலயங்களை யொட்டிய காணிகளில் தமிழர்களைப் பலவந்தமாகக் குடியேற்றும் ஒரு தமிழர் இயக்கத்தைப் பற்றி ஸ்தலத்திலேயே விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு அரசாங்க எம். பிகள் ஆறு பேர்களைக் கொண்ட விசாரணைக் குழுவொன்றை நியமிக்க பிரதம மந்திரி முடிவு செய்துள்ளார் என்று ஒரு செய்தி கூறுகிறது.

இந்த விசாரணைக் குழுவில் நாரளை, கொலன்னுவ எம்.பிகளும் இடம் பெறுவார்களாம்.

இந்தக் காணிகளில் சிங்கள பௌத்தர்களைக் குடியேற்றுவதென்ற கொள்கையை அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறதாம். அந்த முயற்சியை முறியடிக்கவே தமிழர்கள் பலாத்காரமாக அங்கே குடியேறுகிறார்களென்று பிரதமருக்குப் புகார் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நாரளை எம். பி. திரு. விலியம் பர்ளுந்து பிரதமரைச் சந்தித்து இது விஷயமாக விவாதித்த பின்னரே பிரதமர் மேற்கண்ட முடிவைச் செய்தாராம்.

சேருவாவில பௌத்தாலயத்தை யொட்டிய 47,000 ஏக்கர் காணிகளில் பௌத்தரல்லாதோர் குடியேற்றப்பட்டிருப்பதாக பௌத்தாலய பிரதம குரு பிரதமருக்குப் புகார்செய்துள்ளார் என்று அறியப்படுகிறது.

இவ்விஷயத்தில் காணி மந்திரி திரு. சி. பி. டி. சில்வா மீதும் புகார் கூறப்பட்டுள்ளது. பௌத்தர்களின் கோரிக்கைகளுக்கு அவர் செவிசாய்க்கவில்லை யென்றும், மேற்கண்ட இரு பௌத்தாலயக் காணிகளில் பௌத்தரல்லாதோரைக் குடியேற்ற அவர் அனுமதித்தாரென்றும், பௌத்தர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு பிரதமர் அவருக்கு உத்தரவிட்டும் பயன் கிடைக்கவில்லையென்றும் கூறப்படுகிறது ஆகையால்தான் பிரதம மந்திரி தனியாக ஒரு விசாரணை குழு நியமிக்கத் தீர்மானித்தாராம்.

**பேர்ஸ் டயறிகள் [PURSE DIARIES] 1963**

| | |
|---|---|
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 5)<br>(இரண்டு பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-10 |
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 4)<br>(ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 2)<br>(ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 1)<br>(ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-10 |
| பிஸ்னஸ் பேர்ஸ் டயறி (Business)<br>(ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-85 |
| டெஸ்க் பிளாஸ்டிக் டயறி (பெரியது)<br>(மூன்று பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-95 |
| டேபிள் பிளாஸ்டிக் டயறி (பெரியது)<br>(ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 4-35 |
| புள்ஸ்காப் டயறி (கலிகோ பைண்ட்)<br>(ஒரு பக்கத்திற்கு ஒரு நாள். வர்த்தகர்கள் கணக்குப் புத்தகமாகப் பாவிக்கக் கூடியது) | 13-50 |
| வலற் (Wallet) டயறி<br>(2-50 பெறுமதியான வலர் பேர்ஸ் கொண்டது) | 4-85 |
| டேபிள் கலண்டர் (Table Calender)<br>(பிளாஸ்டிக் ஸ்டான்டுடைய மேசைக் கலண்டர்) | 4-75 |

குறிப்பு: விரும்பும் டயறியின் விலையையும், டயறி ஒன்றுக்கு 35சதம் தபாற் செலவும் அனுப்பினால் பார்சலில் அனுப்பப்படும்.

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை,**
161, செட்டியார் தெரு, கொழும்பு.

இலங்கை வாழ் தமிழ் [illegible] உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கீட்டு அரிசியைப் பறித்து பட்டினி போடும் முயற்சி

## 3 லட்சம் பேர் படும் துயரம்

**தமிழ் பேசும் மக்களின் பலத்தைக் குறைக்க, நாடற்றவர் என்ற பட்டத்தைச் சூட்டி ஒரு குறிப்பிட்ட தொகையினரை இந்நாட்டை விட்டு அப்புறப்படுத்த முயன்றனர் ஆட்சியினர். அம் முயற்சி பலனளிக்காது போகவே, அவர்களுக்குப் பங்கீட்டு அரிசி வழங்காமல், கூப்பன் கொடுக்காமல் பட்டினி போட்டுக் கொல்லப் பார்க்கின்றனர். 3 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் இதனல் அரைப்பட்டினி கிடக்கவேண்டியேற்பட்டுள்ளது.**

**தெரனியகலேயைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளி சங்கப்பிள்ளை என்பவர் பங்கீட்டரிசி வழங்கப்படாததனல் பட்டினி கிடந்த செய்தி 16-12-62 சுதந்திரனில் பிரசுரமாகியிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.**

பெயரைக் கொண்டே 3 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களுக்குப் பங்கீட்டுப் புத்தகங்கள் (அரிசிக் கூப்பன்கள்) மறுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஒரு தமிழர் இந்தியப் பிரஜையாக இருக்கலாமென்ற சந்தேகம் ஏற்பட்டாலும் சரி, படாவிட்டாலும் சரி, அப்படிச் சந்தேகம் ஏற்பட்டதாகக் காட்டிக்கொண்டு உடனடியாகவே அவருக்கு கூப்பன் மறுக்கப்படுகிறதாம்.

பிறப்புச் சாட்சிப் பத்திரமோ, வேறு எந்த தஸ்தாவேஜுகளோ காண்பிக்கப்பட்டாலுங்கூட அவைகள் முற்றுக நிராகரிக்கப்படுகின்றனவாம். பிறப்புப் பத்திரம் தமிழில் எழுதப்பட்டிருந்தாலோ வந்தது ஆபத்து! தமிழ் பிறப்புப் பத்திரங்களை கையில் தொடக்கூட மறுக்கிருர்களாம், கொழும்பு தலைமை உணவுப் பங்கீடு காரியாலய அதிகாரிகள்.

ஏறத்தாழ 3 லட்சத்துக்கும் அதிகமானேர் இந்தக் கெடுபிடியால் பாதிக்கப்பட்டுள்ள செய்தி நமக்குக் கிடைத்துள்ளது.

நாடற்றவர்கள் எனக்கூறி அவர்களை இந்நாட்டைவிட்டோட்ட, முன்னர் எடுத்த முயற்சிகள் தோல்வி அடையவே, இப்பொழுது பல தந்திரோபாயங்களையும் அரசினர் கையாளுகின்றனர் போலும். தொடர்ந்து தோட்டங்களில் பல ஆண்டுகளாகத் தொழில் புரிந்து வந்தவர்களுக்கு தொழில் மறுப்பதும் இம்முயற்சிகளில் ஒன்றாகும். தொழில் மறுக்கப்பட்டதும், அடுத்த நடவடிக்கை பங்கீட்டு அரிசி வழங்க மறுப்பது தான் என்று கூறப்படுகிறது.

அரிசிக் கூப்பன்களைக் கொடுக்க மறுத்து அவர்களைப் பட்டினிபோட்டுச் சாகடித்தேனும் நாடற்றவர் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்று கருதுகிறார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

தெரனியாகலையைச் சேர்ந்த லினியாகலைத் தோட்டத் தொழிலாளியான 50 வயதுடைய சங்கப்பிள்ளை என்பவர் பங்கீட்டரிசி வழங்கப்படாததனலும், தொழில் மறுக்கப்பட்டமையினலும் பட்டினிகிடந்து பரிதாபகரமாகச் செத்த செய்தியை 16-12-62 சுதந்திரனில் வெளியிட்டிருந்தோம்.

தமிழ் பேசும் மக்களின் பலத்தைக் குறைக்க அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளில் பட்டினி போட்டுச் சாகடிப்பதும் ஒரு வழியாக அமைந்திருக்கிறதோ என்று நம்பத் தோன்றுகின்றது.

# சீன-இந்திய எல்லைப் போரில் ஈழத் தமிழர் வீர மரணம்

**சீன--பாரத எல்லைப் போரில், ஈழத்தைச் சேர்ந்தவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் இ. மு. வி. நாகநாதனின் மைத்துனனுமான மேஜர். டபிள்யூ. என். சி; ஹென்ஸ்மன் வீர மரணம் எய்தியுள்ளார்.**

சென்னை மாவட்ட இராணுவ ரெஜிமென்டைச் சேர்ந்த மேஜர். ஹென்ஸ்மன் நேபாவிலுள்ள சீன கணவாயருகே நடைபெற்ற யுத்தத்தில் வீரத்துடன் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கையில் மரணமடைந்துள்ளார் என்றும், இவ்வணியைச் சேர்ந்த எவரும் எதிரிகள் வசம் சிக்கவில்லையென்றும் அறியப்படுகிறது.

மேஜர் ஹென்ஸ்மனின் மனைவியும், இருபெண்பிள்ளைகளும் தென்னிந்தியாவிலேயே உளர்.




பணக்காரன் முதல்



பாட்டாளி வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தந்தி தாமரை

தொலைபேசி


# வருமானவரிப் பாரங்களை தமிழிலும் அச்சிடுக!

## கொமிஷனருக்கு தமிழரசுத் தந்தையின் யோசனை

**வருமான வரி விபரங்களைத் தமிழிலேயே அனுப்பலாமெனத் தங்கள் இலாகா உரிமை அளித்துள்ளது. ஆகவே, சில பாரங்களையும், தமிழில் அச்சிட உடனடி நடவடிக்கை எடுப்பதுடன், குறிப்பிடப்பட்ட தலைமை ஆசிரியரைப் படிப்பற்றவராக்க முயலாமல், அவர் தாய் மொழியிலேயே அவருக்கு இத்தகைய பாரம் ஒன்றை அனுப்பி வைக்கும்படியும் உங்களுக்கு யோசனை கூற விரும்புகிறேன்.**

இவ்வாறு, பளையிலுள்ள சொறன்பற்று கணேச வித்தியாலயத்தலைமை ஆசிரியரைத் தனக்குத் தெரியாத ஒரு மொழியில், வருமான வரி இலாகாவின் இல. 2 கொண்ட பாரத்தை நிரப்பி அனுப்பும்படி கேட்டுள்ள வருமான வரி இலாகாவின் செயல்பற்றி கொமிஷனருக்குத் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் கொமிஷனருக்கு எழுதியனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிடுவதாவது:

'பளையிலுள்ள சொறன்பற்று கணேச வித்தியாசாலையின் தலைமை ஆசிரியரை, வருமான வரி இலாகாவின் 3 பி. பிரிவின் கணக்காளர், இல. 2 கொண்ட பாரத்தை நிரப்பி அனுப்பும்படி கேட்டுள்ளதாக எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இல. 2ம் பாரம் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மாத்திரமே அச்சிடப்பட்டுள்ளது. இதைச் சுட்டிக்காட்டி, தனக்குத் தமிழில் அச்சிடப்பட்ட பாரம் ஒன்றைத் தரும்படி கேட்ட தலைமை ஆசிரியரிடம், அந்தப் பாரத்துக்கு தமிழ் மொழி பெயர்ப்பு இல்லை

(13-ம் பக்கம் பார்க்க)

தமிழ் அரசாங்க ஊழியர்களே!

# எதுவரினும் சிங்களம் கற்காதீர்

## கொக்குவில் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை

**சிங்களம் கற்கும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் தமிழ் பேசும் இனத்தின் நலத்திற்கு மட்டுமின்றி, எதுவரினும் சிங்களம் கற்பதில்லை என்றிருக்கும் தமது சகோதர ஊழியர்களுக்கும் தீங்கிழைப்பவர்களாகிருர்கள். எல்லாத் தமிழ் அரசாங்க ஊழியர்களும் சிங்களம் கற்பதற்கு ஒரே முகமாக மறுத்து இருந்தால், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு எத்தகைய தீங்கும ஏற்பட்டிருக்காது. அல்லாமலும் சிங்களம் மட்டும் கொள்கை தானகவே மடிந்து விட்டிருக்கும். ஆகவே இவ் விஷயத்தில் தமது கஷ்டம் எதையும் பொருட்படுத்தாமல் தமிழ் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் ஒரு முகமாக ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தந்தை திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம்கடந்தவாரம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொக்குவில்-கோண்டாவில் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

மேலும் அவர் கூறியதாவது: இன்று அரசாங்கம் மிக மோசமான ஒரு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. சிங்களம் மட்டும் கொள்கையால் எழுந்த மற்றும் பல பிரச்சினைகள் காத்திருக்கின்றன. ஆகவே இந்தச் சிக்கலிலிருந்து தன்னைக் காப்பாற்ற ஆட்சிபீடம் அதன் கொள்கையைப் புனராலோசனை செய்யத் தொடங்கியுள்ளது. இச் சூழ் நிலையில் தமிழராயுள்ள அரசாங்க ஊழியர்கள் சிங்களம் கற்பதும், சிங்களப் பரீட்சைகளுக்குத் தோன்றுவதும் நல்லதல்ல.

### தீர்மானங்கள்

கூட்டத்தில் நிறைவெய்திய தீர்மானங்கள்வருமாறு:

மன்னாரில் நடைபெற்ற கட்சியின் தேசிய மாநாட்டில் நிறைவெய்திய தீர்மானங்களைக் காலதாமதமின்றிச் செயல் படுத்தும்படி தலைமைப் பீடத்தை வேண்டுவதுடன், வரப்போகும் போராட்டத்தில் எமது பரிபூரண ஒத்துழைப்பைக் கொடுத்தல்.

தமிழ்ப் பிரதேசங்களுக்கு அமைச்சர்கள் வரும் பொழுது, கட்சி எதிர்ப்புக் காட்ட வேண்டுமென்று கட்சியை நமது கிளை வேண்டிக் கொள்கிறது.

அரசாங்க ஊழியர்கள் அனைவரும் எக் காரணத்தை முன்னிட்டும் சிங்களம் கற்கக் கூடாது என்றும், இன்னல் ஏற்படும் பொழுது போராட்டத்தில் குதிக்கத் தயாராக இருக்கும்படியும் அவர்களைக் கட்சித் தலைமைப் பீடம் வற்புறுத்த வேண்டும்.

கொக்குவில் கோண்டாவில் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கக் கூடாது என்பதை மீண்டும் ஆட்சி பீடத்திற்கு வலியுறுத்தல்.

கீழ்க் காணுவோர் புது வருட நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்: தலைவர் திரு. அ. சுப்பிரமணியம், செயலாளர் திரு. ச. யோகராசா, பொருளாளர் திரு.க. செல்வராசா. திருவாளர்கள் சி. பொன்னம்பலம், வேலாயுதம் பிள்ளை, த. நடராசா, வ. பரமலிங்கம், ச. சண்முகநாதன், சி. பொ. வேலாயுதபிள்ளை ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# சீன வானெலியில் இந்தி பேசும் பெண்?

சீனவிலிருந்து வரும் வானெலிச் செய்திகளில், இந்தி மொழியில் பேசும் அழகான பெண் குரலிலும் செய்திகள் வருவதைக் கேட்டு இந்தியர்கள் திடுக்கிட்டனர்.

'இந்தியில் இவ்வளவு அழகாகப் பேசும் பெண் யார்?' என்ற கேள்வி, லோக் சபையில் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கையில், இந்தியப் பிரதமர் நேரு, அப்பெண் சீனவில் குடியேறியுள்ள இந்தியப் பெண்ணு, அல்லது இந்தி மொழியில் நன்கு தேர்ச்சி பெற்ற சீனப் பெண்ணு என்று அறிய, விசாரணைகள் நடாத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எப்படி இருக்கிறது சீனவின் வானெலிப் பிரசாரம்?

# உடுப்பிட்டித் தொகுதியில் தமிழ் அரசுக் கிளைகள்

மன்னர் மகாநாட்டுத் தீர்மானத்தின் படி உடுப்பிட்டித் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் கிளைகள் துரிதமாக நிறுவப்பட்டு வருகின்றன. ஏற்கனவே வந்த செய்தியின் படி உடுப்பிட்டிக் கிராமத்திலும், கரணவாய்தெற்கிலும், கரணவாய் வடக்கிலும் கிளைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. கிளைகளின் உத்தியோகத்தர்களின் விபரங்கள் பின்வருமாறு:-

### உடுப்பிட்டி

தலைவர் திரு.மு. காங்கேசு, செயலாளர் திரு. க. நற்குணம், தனதிகாரி திரு. தி. துரைசாமி, நிர்வாகசபை: திரு. யோ. ச. சுந்தரம்.

### கரணவாய் தெற்கு

தலைவர் திரு. கி. மயில்வாகனம், செயலாளர் திரு. கு, சிவசம்பு, தனதிகாரி திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, நிர்வாக சபை: திருவாளர்கள் க. இராமலிங்கம், க. பொன்னுச்சாமி.

### கரணவாய் வடக்கு

தலைவர் திரு. வ. இனையதம்பி, செயலாளர் திரு. க. கந்தவனம், தனதிகாரி திரு. நா. சுப்பிரமணியம், நிர்வாக சபை: திருவாளர்கள் க. ஜெயக்கொடி, செ. நாகரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சேகப்புள்ளா, பெரியகிண்ணியா.

கே: மூதூர் 2-வது எம். பி. மகாவெலிகங்கையைத் திருப்பித் தருவதாகத் தேர்தல் கூட்டங்களில் கூறினுரே, ஏன் அதைச் செய்யவில்லை?

ப: பாவம்! அவர் என்ன செய்வார்? திருப்பினுர், திருப்பினுர், அது திரும்பவில்லை. எனவே ஒரு கங்கையைக் கொணடுவரும் படி பகீரதனுக்கு இப்பொழுது மனுப்போட்டிருக்கிருராம்!

ஃ

ச. பாலகுருசாமி, ஏழாலை மடம்.

இந்தியாவிலே சீன ஆக்கிரமிப்பைத் தடுக்க மகாநாடு கூட்டும் இலங்கைப் பிரதமர் எம் நாட்டுச் சிங்கள ஆக்கிரமிப்பாளரை அடக்க முற்படாத காரணமென்ன?

ப: நீங்கள் கூறுவது தவறு. சீன ஆக்கிரமிப்பை ஆக்கிரமிப்பு என்று அவர் கூறியது கிடையாது. சிங்கள ஆக்கிரமிப்புக்குத் தலைமை தாங்குபவரே அவர் ஆதலால்தான் சீன ஆக்கிரமிப்பும் ஆக்கிரமிப்பாக அவர் கண்களில்படுவதில்லை.

ஃ

"சிந்தனைச் செல்வி"
ஏழாலை மேற்கு.

கே: "இந்தியா தாய் நாடு இலங்கை சேய் நாடு தந்தை நாடு பிரிட்டனு அமெரிக்காவா?" என்று மகுடமிட்டு ஒரு முற்போக்கு வாரப் பத்திரிகை எழுதியுள்ளதே! அப்படியானுல் பிகிங்கில் தமிழ் ஒலிபரப்புவதற்குச் சென்றிருக்கும் கந்தா...சாமீயிற்கும் சீனுவிற்கும் உறவு முறை என்ன? என்பதை அறிய விரும்புகிறேன். கூறுவீர்களா?

ப: அந்தத் துரோக சாமிக்கும் சீனுவுக்குமுள்ள உறவு முறை அடிமைக்கும் அடிமை எஜமானனுக்குமுள்ள உறவு முறைதான்.

ஃ

லோகநாதன், புங்குடுதீவு.

கே: தாங்கள் எந்தக் கட்சியை சேர்ந்தவர்?

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

ப: மக்கள் எந்தக் கட்சியோ அந்தக் கட்சி தான் நான்.

ஃ

மணிவேந்தன், திருமலை.

கே: இந்து சமயத்தவர்கள் திருமணம் செய்யும் போது மஞ்சள் கயிற்றில் மூன்று முடிச்சு போடுவதின் காரணம் என்ன?

ப; சுலபமாக அவிழ்ந்து போகாமலிருப்பதற்காக மூன்றுமுடிச்சுகள் போடுகின்றனர். பல்லாண்டு காலம் நிலைத்திருக்க வேண்டிய முடிச்சல்லவா?

ஃ

ஆனந்தராசா, மாதகல்.

கே: நீங்கள் சிரித்துக்கொண்டு இருப்பதன் நோக்கம் என்ன?

ப: உங்களது அசட்டுக் கேள்விகளைக் கேட்டு சிரிக்கிறேன் என்று நினைத்தீர்களா? இல்லை... சிரிப்பது என் இலட்சியம். அதன் மூலம் உங்களனைவரையும் சிரிப்பில் மூழ்கடிப்பது என் நோக்கம்.

ஃ

கணேசன், நீர்வேலி.

கே: ஒரு பெண் எதை எப்போ மறக்கிருள்? எதை எப்போ வெறுக்கிருள்?

ப: இன்பத்தில் துன்பத்தை மறக்கிருள். அத் துன்பத்தை அனுபவிக்கும் போது அதற்கு ஆதாரமாயிருந்த இன்பத்தை வெறுக்கிருள்.

ஃ

"வள்ளல்" கொச்சிக்கடை.

கே; படித்தால் மட்டும் போதுமா?

ப: போதாது, எழுதவும் தெரிய வேண்டும்.

ஃ

மா. தங்கராசா, மண்டூர்.

கே: குயுக்தியாரே, மார்கண்டேயரைப் போல் நீங்கள் சாகா வரம் பெற்றிருப்பதாக அறிந்தேன். உணமைதானு?

ப: நல்லவேளை, அனுமாரைப் போல் என்று கூருமல் விட்டீரே!

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: பெண்களிடம் ஒரு கேள்வி கேட்டால் பதில் வரத் தாமதமாகிறதே காரணம்?

ப: பெண்கள் கேள்வி கேட்டால் உடனே பதிலளித்து விடுவார்கள். ஆண்கள் கேட்டால், பதிலளிக்கத் தாமதமாகும்—கேள்வியின் உள் நோக்கத்தைப் புரிந்து கொள்ள அவகாசம் வேண்டாமா?

ஃ

கா. நவரத்தினம், நீர்கொழும்பு.

கே: நான் ஒரு வாரப்பத்திரிகை பிரசுரிக்கப் போகிறேன் அதில் கேள்விகளுக்குப் பதிலளிக்க நீர் உடனே "சுதந்திரனை" விட்டு விட்டு ஓடி வருவீரோ?

ப: அசல் குயுக்தியார் சுதந்திரனுக்கு உரியவர். நீர் சந்தையில் தேடிப்பார்த்தால் சில போலிகள் வேண்டுமானுல் கிடைக்கலாம்.

ஃ

இதயசூரியன், இறக்குவான.

கே: விண் வெளியில் கூடிய எட்டு கிரக சேர்க்கைக்கும்; கொழும்பில் கூடிய ஆறு நாடுகளின் சேர்க்கைக்கும் ஏதாவது ஒற்றுமை உண்டோ?

ப: உண்டு என்கிருர்கள் அரசியல் சோதிடர்கள் எட்டு கிரக சேர்க்கையின் விளைவு தானும் சீன-இந்திய யுத்தம். அந்த யுத்தத்தின் விளைவு தான் ஆறு நாடுகளின் சேர்க்கை.

ஃ

மு. கருணநிதி, ஏழாலை மேற்கு.

கே: மூன்ருவது உலக மகா யுத்தம் மூளுமா, மூளாதா?

ப: கியூபா தகராறில் உலக யுத்தம் ஏற்படுமென எதிர்பார்த்தனர். அதிர்ஷ்டவசமாக அது தவிர்க்கப்பட்டது. உலக யுத்தம் மூளுமென எதிர்பார்த்த [illegible] ஏமாந்தது. சீன-இந்திய போரா [illegible] கடைபிடிப்பென முறையில் தொடங்கினுலன்றி உலக யுத்தம் ஏறபட ஏதுவில்லை.

ஃ

"மான்போ நோவேலே"
ஏழாலை மேற்கு.

கே: நேருஜீக்கு "மங்குஸ்தான்" அன்பளிப்பு அனுப்பிய சிறிமாவோ பாரதப் போருக்கு நிதியுதவி அனுப்ப அனுமதி வழங்க மறுப்பதேன்?

ப: வகுப்புக்கலவர சமயத்தில் இங்கு தமிழன் அடித்து நொறுக்கப்படும்போது "அது உள்நாட்டுப் பிரச்னை" என்று நேரு கூறினுர். அந்த நன்றிக்காக அவருக்கு மங்குஸ்தான் அனுப்பினுர் சிறிமாவோ, இன்று யுத்த நிதி உதவி அனுப்ப அனுமதி மறுப்பதின் காரணம் அம்மையார் சீன ஸ்தானத்தை ஆதரிப்பதுதான் என்பது பகிரங்க இரகசியம்.

ஃ

குமாரச் செல்வன், ஏழாலை.

கே: கொழும்பு மாநகரசபைத் தேர்தல் முடிவுகள் எதைக் காட்டுகின்றன.

ப: சீன-இந்திய யுத்தத்தில் நகர மக்கள இந்தியாவை ஆதரிக்கிருர்களென்பதைக் காட்டுகின்றன. இத் தேர்தலிலே யு. என். பி. சீன-இந்திய யுத்தத்தை முக்கிய பிரச்னையாக மக்கள் முன் வைத்தது, வெற்றியீட்டியது. இடதுசாரிகள் சீன ஆதரவாளராதலின் தோல்வியுற்றனர்.

ஃ

க. நடராசமணி, மாவிட்டபுரம்.

கே: வட மாகாணத்தில் பௌத்தர்களாக மாற்றப்பட்ட சிறுபான்மைத் தமிழர் சிங்கள நாட்டில் சென்று சிங்கள பூமியில் குடியேற சிங்கள மக்கள் அனுமதிப்பார்களா?

ப: சிங்களவர்கள் தமிழர்களைப் பௌத்தர்களாக மாற்றுவதின் நோக்கங்களிலொன்று தமிழ் மண்ணை ஆக்கிரமிப்பதாகும். எனவே சிங்கள மண்ணை ஆக்கிரமிக்க தமிழ் பௌத்தர்களை அனுமதிப்பார்களா, என்ன?

# நமக்கினி உரிமை வேண்டும்

—ப. இராசகுரு—

காட்டினை அழித்தோம் அன்று
    கழனிகள் ஆக்கி ஞேமே
மேட்டினை சமனுய் செய்து
    மேவிய தென்னை றப்பர்
நாட்டியே நலனும் தந்தோம்
    நமக்கினி உரிமை வேண்டும்
தோட்டியாய் வாழ மாட்டோம்
    சுதந்திரம் தாரும் ஐயா.

சொற்றிறம் படைத்த வீரர்
    சுதந்திரம் தருவோ மென்ருர்
கற்றவர் சொல்லை நம்பி
    கலங்கினேம் ஐயா இன்று
நற்றிறம் படைத்த செல்வ
    நாயகன் தலைமை ஏற்போம்
அற்பமும் ஐயம் வேண்டாம்
    அமைத்திடல் தமிழர் நாடே

பீடுறச் செய்தோம் நாட்டை
    பேடியாய் வாழ மாட்டோம்
நாடுவோம் தமிழர் வேந்தை
    நமக்கினி பயமே இல்லை
கூடுவோம் தமிழ ரெல்லாம்
    கொள்கையால் பிரிய மாட்டோம்
விடுவோம் போரி லென்று
    விளம்புவோ மவற்கு நாமே.

மஞ்சுலாம் மலைகள் மீது
    மாண்புடன் வேலை செய்தோம்
கெஞ்சினேம் நாட்டில் வாழ
    கெழுமிய உரிமை யென்று
துஞ்சினே மில்லை நாங்கள்
    தொடருவோம் போரை யென்றும்
அஞ்சிடோ முந்த னுட்சி
    அமர்க்களம் சேர்வோ மையா

அறமதே வெல்லு மென்று
    அறிஞரும் சாற்றிச் சென்ருர்
முறமதால் புலியை யோட்டும்
    மொய்ம்புடை மாதர் வாழ்ந்த
திறமது பெற்ற வெம்மை
    சிதைப்பது தகுதி யில்லை
மறமது போல நாமும்
    கடுகியே போரைச் செய்வோம்

# கிழக்கிலங்கை தமிழரசு வாலிப முன்னணி

## மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டது

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு அயராது உழைக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழி நின்று உழைத்து, கட்சியின் விடுதலைப் போராட்டங்கள் அனைத்துக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து, கிழக்கிலங்கை அழிவுபடும் இச் சந்தர்ப்பத்தில் அதன் சேமுமையை அகத்தே கொண்டு செயற்படுதல் ஆகிய முக்கிய நோக்கங்களுடன், கிழக்கிலங்கைத்தமிழரசு வாலிப முன்னணி என்னும் இயக்கமொன்று தற்போது மட்டக்களப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வியக்கத்தில் சேர விரும்புவோர் கீழ் காணும் தகமை உடையவர்களாக இருக்க வேண்டும். கிழக்கிலங்கையில் வாழுபவர்களாகவும், இயக்கத்தின் தலைமைப் பீடக் கட்டளையைச், சிரத்திலேற்றிச் செயல்படக் கூடியவர்களாகவும், இனம், மொழி, நாடு இம் மூன்றின் வளர்ச்சியிலும் நாட்டங்கொண்ட சேவை உணர்ச்சி மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும். இவர்கள் இயங்கும் அங்கத்தவர், சாதாரண அங்கத்தவர் என இரு பிரிவாகச் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.


அங்கத்துவம் பெற விரும்புவோர், மேற்கூறிய தகமைகள் உண்டாயின் தங்கள் மனுப்பத்திரங்களை பெயர், வயது, முகவரி ஆகிய முழு விபரங்களுடன், கிழக்கிலங்கை தமிழரசு வாலிப முன்னணி, தமிழரசுக் கட்சி அலுவலகம், 58., அர்ச். அந்தோனியார் தெரு, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### நிர்வாக உறுப்பினர்

கிழக்கிலங்கை தமிழரசு வாலிப முன்னணி நிர்வாக உறுப்பினராக, கீழ்க் காணுவோர் கடந்த 13-12-62 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(14-ம் பக்கம் பார்க்க)

தொலைபேசி 693. HIRATA தந்தி "சேகரன்"
உறுதியான
நைலோன், தறுலோன்
நூல்களும்,
வலைகளும்



கிடைக்குமிடம்:
சேகரம் &சன்ஸ்
74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

தனிப்பட்ட முதலாளிகள் பஸ் கம்பெனிகளை நிர்வகித்த போது, தங்கள் நலத்துக்கே அதிக பணத்தை எடுத்துக்கொண்டார்கள் என்ற பெருங்குற்றச் சாட்டு வலுத்திருந்தது. பொன் முட்டை இடும் வாத்துக்களெனக் கருதப்பட்ட பஸ் கம்பெனிகள் யாவும் தேசிய உடமையாக்கப்பட்டு ஆண்டுகள் பலவாகின்றன ஆனால் எப்பொழுதும் நட்டம் நட்டமேதான்.

தனிப்பட்டோர் நிர்வாகத்திலிருக்கும்போது, முதலாளிமார்கள் ஏராளமான பணம் சேர்த்தனர். வீடு வாசல்கள் மாட மாளிகை கூட கோபுரங்களாயின என்பது என்னமோ உண்மைதான். அதே வேளையில் வரியாக எத்தனையோ லட்சம் ரூபாய்கள் அரசாங்கத்துக்குச் செலுத்தி வந்தார்கள்?

இறக்குமதி செய்யப்படும் பஸ் வண்டிகளின் பேராலும், உறுப்புக்கள் பேராலும், சுங்கவரி கிடைத்தது. பாவிக்கும் பெட்ரோல், எண்ணை முதலியவற்ருலும் வரி கிடைத்தது. வருமான வரி பெருவாரியாகக் கிடைத்தது. குறிப்பிட்ட தொகையினருக்குமேல் ஒருவரைத்தானும் அதிகமாக பஸ்ஸில் ஏற்றிஞல் வழக்குப் போடப்படுவதன் மூலம் அபராதம் விதிக்கப்பட்டு அதன் மூலமும் அரசாங்கத்துக்கு பணம் கிடைத்தது. லைசென்ஸ் வழங்குவதிலும் வருடா வருடம் ஏராளமான தொகை அரசாங்கத்துக்குக் கிடைத்தது.

இத்தகைய வருமானமுடைய ஒரு தொழிலை அரசாங்கம் தானே எடுத்து நிர்வகிக்க முனைந்தது—வரவேற்ருேம். ஆனுல் தொடர்ந்து பல வருடங்களாக நட்டம்-நட்டம்-என்ற கீதம் பாடுகிறதே...அதையும் வரவேற்க முடியுமா?

தினசரி பல லட்ச ரூபாய் வருமானம் வரக்கூடிய ஒரு ஸ்தாபனத்தில் தொடர்ந்து நட்டம் ஏற்படக் காரணம் என்ன? எங்கேயோ ஒரு இடத்திலோ, அல்லது பல இடங்களிலோ ஒட்டைகள், உடைசல்கள் இருக்கின்றன என்பதுதானே பொருள். அந்த ஒட்டை உடைசல்கள் பலருடைய கண்களுக்குத் தென்பட்ட போதிலும், அவை மூடப்படவில்லை. காரணம்.........!

★

போக்கு வரத்து சபையின் தலைவராக விருந்தவர் திடீரெனத் தமது ராஜினுமாவைச் சமர்ப்பித்துள்ளார். அதே இடத்தை நிரப்புவதற்கு ஆள் தேடும் படலம் ஆரம்பிக்கவில்லையென்ற போதிலும், பலர் அந்த இடத்தைக் கைப்பற்ற காவடி எடுத்து வருகின்ருர்களாம்.

'அகப்பை பிடிப்பவன் நம் ஆளாஞல், அடிப் பந்தி யென்ன? நுனிப் பந்தி என்ன?' என்ற பழமொழிக்கமைய நமது அம்மானுக்கு ஒரு விடயம் அம்பலமாகியுள்ளது.

போக்கு வரத்து சபையில் ஒரு பொறுப்பான பதவிக்கு, பொறுப்போ, போதிய திறமையோ இல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டாராம். வலு வேகமாக அவருடைய பதவியின் முக்கியத்துவம் மேலோங்கி வந்தது, பலருடைய கவனத்தையும் பெரிதும் ஈர்த்ததாம்.

கடைசியாக, அந்தப் பதவியிலிருப்பவர் யார்? இவ்வளவு விரைவாக பதவி உயர்வு கிடைப்பதன் காரணம் என்ன? என்பவற்றுக்கெல்லாம் தெளிவான விடை கிடைத்ததாம்.

அவர் ஒரு மந்திரியின் நெருங்கிய உறவினர் என்ற உண்மை வெளியில் தெரிய வந்ததும், ஆச்சரியப்பட்டவர்கள் தங்கள் ஆச்சரியம் அவசியமற்றது என்பதை உணர்ந்தார்களாம்.

போக்குவரத்துச்சபையின் தலைவர் பதவியும் அவருக்கே அளிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையல்லவா?.

★

கிழக்கு மாகாணத்தில் இயங்கி வரும் ஒரு அரசினர் மத்திய கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்று வந்துள்ள ஒருவர், அப்பகுதியில் மக்கிமடிந்து போன ஒரு மூடத்தனத்துக்கு மீண்டும் புத்துயிரளித்துப் புது மெருகூட்டும் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துள்ள கேவல நிலைபற்றிய செய்தி அம்மானுக்குக் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தமிழ் மகன் ஒருவன் ஏனைய பகுதித்தமிழ் மக்களிலும் பார்க்க மேலானவன் என்று மதிப்பிட்டுக் கணக்கிட்டு, ஏனையோரைக் கீழ்மைப் படுத்தி வந்த ஒரு காலம்இருந்திருக்கலாம். அத்தகைய துவேஷ மனப்பான்மை தமிழரசுக் கட்சியின் உதயத்தைக்கண்டு அஸ்தமித்தோடிப் போய் ஆண்டுகள் பலவாகிவிட்டன. மாற்ருன் நம்மை முறியடிக்க முனைந்துள்ள இக்கட்டான நிலைமையில், மென்மேலும் இப்பேதமை வளர இடம்தரலாகாது என்ற தோரணையில் தமிழரசுக் கட்சி உழைத்த போது மேற்படி சிறுமை நம்மைவிட்டு அகன்றது.

அத்தகைய சிறுமையை மீண்டும் நம்மினத்துள் தூண்டிவிட, குள்ளமதி படைத்தோர் சிலர் முயன்றும் தோல்வியே கண்டனர். ஆனுல் அதே பாதையில் தாமும் செல்லலாம் என்ற எண்ணத்துடன்,மேற்படி கல்லூரி அதிபர் முயன்று வருவது தான் வேதனை ஊட்டுகிறது.

யாழ்ப்பாணத் தமிழருக்கே விசேட மதிப்புஅளிப்பேன்; அல்லாதாருக்கு நான் மதிப்பளிக்கவோ வேறு சலுகைகள் அளிக்கவோ மாட்டேன் என்றுநேருக்குநேராக மார்தட்டிப் பேசி வருகிருராம் இந்த அதிபர். மாணவர்களிடம் தகாதமுறையில் பணம் வசூலிப்பதும், பெற்ருேர் ஆசிரிய சங்கப் பணத்தில் மோசடி செய்வதும் இவருடைய திருவிளையாடல்களில் சில என்றும் தகவல் கிடைத்துள்ளது.

அரசியல் வானில் உயரிய தாரகையாகிச் சுடர்விட்டுப் பிரகாசித்து, தற்போது தனது அரசியல் வாழ்வையும், பொது வாழ்வையும், தனது நடத்தையால் அஸ்தமிக்கவிட்டு விட்ட ஒருவருடைய பெயரை இதே கல்லூரிக்குச் சூட்டுவதற்கும் பல முயற்சிகள் நடைபெறுகிறதாம்.

★

கிழக்கு மாகாணத்தில் இயங்கும்இன்னும்ஒரு கலாசாலையில் பல்லாண்டு காலம் தமிழ் விரிவுரையாளராகக்கடமை பார்த்து வந்த ஒருவர் ஓய்வு பெற்றுவிட்டார். அவர் வகித்து வந்த பதவிக்கு வேருேர் கல்லூரியில் கடமை பார்த்து வந்த ஒருவரை 'மின்னுமல் முழங்காமல்' கல்வி இலாகா நியமனம் செய்தது பற்றி மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக அம்மான் கூறினுர். இது பற்றி பல அந்தரங்கங்கள் உலவுவதாகவும், அவை விரைவில் சந்திக்கு வரலாம் என்றும் அம்மான் கூறியுள்ளார்!

★

கொம்யூனிஸ்ட் பிற்போக்குவாதிகள் இருவர் யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள ஒரு கல்லூரியில் சிங்களம் ஒரு பாடமாகவாவது போதிக்கப்படவேண்டுமென்று பகீரதப் பிரயத்தனம் செய்தனர். அதன் காரணமாக சிங்கள வகுப்புகளும் நடைபெற ஆரம்பித்தனவாம்.

ஆசிரியர்களாகக் கடமை பார்ப்பவர்கள் இனிமேல் அரசியற் கட்சிகளுடன் தொடர்பு கொள்ளுதல் கூடாது என்று பாடசாலைகளைத் தேசிய மயமாக்கியதும் அரசாங்கம் கட்டளை பிறப்பித்ததல்லவா? இதற்காக மேற்படி கல்லூரியில் ஆசிரியராகக் கடமை பார்த்து, அதே வேளையில் ஆட்சியாளர்களின் முற்போக்கு வர்ணம் தீட்டப்படும் பிற்போக்கு வேலைகளுக்கு முழு உதவியுமளித்த ஒருவர் தனிப்பட்ட ஸ்தாபனத்தாரால் இயக்கப்படும் கல்லூரி [illegible]

## இவ்வாரம்........

- ★ இ. போ. ச. பெரும் பதவி யாருக்கு?
- ★ பேதமை வளர்க்கும் கல்லூரிப் போதகர்
- ★ பிற்போக்காய்ப்போன கொம்யூனிஸ்டுகள்
- ★ மலையகக் கூட்டத்தை முறியடிக்கச் சதி

# கவிதைப் பூங்கா

## புத்தாண்டே வருக!

''வன்னியூர்க் கவிராயர்''

மங்களப்புத் தாண்டே வருக!உந்த னின்வரவு
நல்வரவா யாகுக!வா! நல்வருட மாயிரத்துத்
தொள்ளா யிரத்தறுபத் துமூன்றே—எல்லோரும்
வாழ்வாங்கு வாழ வழிவகுத்து மாந்தர்களின்
வாழ்வைச்சீ ராக்கியே வாழியநீ—நீள்புவியில்
வல்லரசுக் கள்தமது மண்ணுசை போக்கியுத்தத்
தொல்லை தொலைத்துநட்பைத் தோன்றவைத்தே
—நல்லுரிமை
சீராய் வளர்த்துச் சிறந்தஜன நாயகத்தை
நேராய்ப் புவியில் நிலைநிறுத்து—சாந்திகொன்று
ஆட்சிதனைப் பற்றும் அதிகாரக் கும்பலின்கீழ்
மீட்சியின்றி யென்றும் அடிமைகளாய்—இட்டம்
இருந்தாலும் இல்லாது போனுலும் ஆள்வோர்
ஒருசொற் பணித்திடுகி லீசன்—திருவாக்காய்க்
கொண்டு தலைவணையே கும்பிட் டவன்போற்றும்
மண்டுகளை நல்லோர் எனப்போற்றிக் —கொண்டாடி
அன்னேன் இகழ்வோரை யாமும் இகழ்ந்துரைத்து
சொன்னபடி யாடும் சொரணையற்ற —இன்னல்நிலை,
வாக்குரிமை பேச்செழுத்து மற்றும் உரிமையின்றி
ஏக்கமுடன் வாடும் இழிந்தநிலை—பூக்காமல்
ஆசியதே சத்தைமக்கள் ஆருயிராய்க் காப்பதற்கு
தேசிய பக்தியெழச் சேவைபுரி—காசினியில்
தொல்புகழ்சேர் நாடு சுடர்பூத்தை வேழத்தை
நெல்மணியை யன்றுபிற நாடுகட்கு நல்முறையில்
வாணிபஞ்செய் நாடு வளமார் விவசாயம்
பேணி வளர்த்த பெருநாடு—வல்லமைசேர்
ஏர்த்தொழில்மே லோங்கமற்று மெத்தொழிலு
மேசிறக்க
நேர்மை,புண்மை, நீதிநிலைத் தேயோங்க
—செந்தமிழிங்(கு)
ஆட்சிமொழி யாகி அரியணைமீ தேவாழ
மாட்சிமையாய் நம்நாட்டுக் கேற்றவொரு
—ஆட்சிமுறை
இட்டமாய்ப் பூத்தலைது என்றும் நிலைத்துநிற்க,
சட்டத்தில் சமஉரிமை சந்ததமும்—நிட்டமுடன்
வாழ்ந்திடவும், நாடற்ற மக்களாக் கப்பட்டே
தாழ்ந்துரிமை யின்றியே வாடுபவர் வீழ்ந்த
உரிமையனைத் தும்மீட் டுயர்வாழ்வு வாழ
உரிமையுணர் வன்னேர்க்கு ஊட்டு—அன்புநிறை
தன்மான வீரர் தலைவர்தமிழ்த் தந்தை 'செல்வர்'
நன்னயமார் கட்சிநல மாய்வளர—இந்நிலத்திற்
தொண்டாற்றி யெங்கும் சுபீட்சங் கொழிக்கச்செய்
மண்டலத்துன் ஞட்சியிலே வாகாய்!

## விரைகுவீர் வணங்குவோமே

மண்டூர் ந. டே. குணரத்தினம்

பெத்தலை நகரில் தோன்றி
பெற்றவள் மடியில் யேசு
வித்தகன் தூங்கு கின்ருன்
விரைகுவீர் இறஞ்சு வோமே.

இப்புவி வாழும் மாந்தர்
இழுக்குகள் யாவும் நீங்க
அப்பனுய் பிறந்தார்ன் யேசு
அறிகுவீர் உலகத் தோரே.

தன்னுயிர் பிறருக் காகத்
தந்துமே உலகை மீட்க
மன்னவன் தோன்றி விட்டான்
வாழ்த்துவீர் உலகத் தோரே.

உன்னொரு கன்னந் தன்னில்
உறைக்கவே பிறர் அறைந்தால்
இன்னொரு கன்னங் காட்டென்(று)
இயம்பியோன் தோற்றி னனே.

வாருங்கள் உலகின் மக்காள்
வந்துமே யேசைப் போற்ற
சேருங்கள் இறையோன் அண்டை
சென்றுநாம் இறஞ்சு வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலித் தலைவர்களுக்கு இனி இடமில்லை

## பாட்டாளி மக்கள் யாவரும் பகுத்துணரும் அறிவு பெறவேண்டும்

பாட்டாளி மக்களுக்காகப் புதுப் பாதை வகுக்கிறோம் என்று கூறிக்கொண்டு சுயநலத்திலாழ்ந்து தேசஞ் சுற்றி தலைவர் எனப் பட்டங்கட்டிக் கொண்டு பவனிவரும் படையை வீழ்த்த, தொழிலாளி ஒவ்வொருவனும் எது நல்லது எது கெட்டது என்பதை அறியும் ஆற்றலைப் பெற, படிப்பு அவசியம். காலத்தை வீணாக்காது கற்று, ஞாலத்தைப் பொன்னாக்குங்கள்.

கவலையற்று அமைதியுடன் வாழ்வதே வாழ்வு! ஆம்! எம் மலை நாட்டில் நிறைந்த தேயிலையை—ரப்பரை நிலையான செல்வமாக பிறர் போற்ற நிலை நிறுத்திய தமிழ்க் குடிகளின் வாழ்க்கை ஓரளவு அமைதியானதுதான்.

மலைநாட்டில் குடி வாழும் தமிழ்ப்பெரு மக்களின் நிலையை ஆராய்ந்தால் ஓரளவிற்கு உயர்வானதுதான். பெறும் சம்பளம் என்னமோ சொற்பமென்றாலும் பெருவாழ்வு வாழ்கிறார்கள்.

மலை நாட்டில் ஒரு குடும்பத்தில் தாய், தகப்பன், பிள்ளைகள் முதற்கொண்டு உழைக்கிறார்கள். "பென்சன்" என்ற பெயரில் அந்திகால செலவுக்குக் கூட ஓரளவு பணம் வழங்கி அவனது உயிர் உடலை விட்டுப் பிரியும்வரை பாதுகாக்கிறது.

தனது பிள்ளைகளுக்கு படித்தால்தான் வேலை என்ற நியதி இல்லாததால், பிள்ளை படித்தாலும் படியாவிட்டாலும் கவனங் கொள்ளாது பெற்றவர்கள் குழந்தைகளின் கல்வி விஷயத்தில் மாத்திரம் அக்கறையின்றி அலட்சியத்துடன் வாழ்கிறார்கள்.

இந்தச் சீர்கேடான சிறு மனப்பான்மையால் அவர்களின் எதிர்கால வாழ்வு சீரழிகிறது. கற்றுத் தேறாததால் கண்டவன் சொன்னதே பொன்மொழியாக நினைக்கவேண்டிய நிலை உருவாகிறது.

நல்லறிவூட்டும் நூல்களைக் கற்று நாட்டிற்கு நற்பணி புரிய முடியா விட்டாலும்—தனது வாழ்க்கையில் ஏமாறாமலிருக்கவாவது கற்றுத் தேறவேண்டியதவசியமாகும்.

தந்தை புல்வெட்டிப் பிள்ளையை வளர்த்து ஆளாக்கி, பின் திரும்பவும் அவனை தந்தை செய்யும் தொழிலைச் செய்யத் தூண்டுவது போன்ற அறியாமைக் கொள்கைகள் மலை நாட்டில் நிலவுவதால் அறிவுப் பஞ்சம் ஏற்படுகிறது.

இன்றுள்ள மலை நாட்டு இளைஞர்கள் இதை மாற்றி, அறியாமைக் கொள்கையை அறவே நீக்கி, அச்சம் அகற்றி, அறிவு பெற்றவர்களாய் பிறர் கூறுவது "சரியா தப்பா" என்று அறியும் அறிவாற்றல் மிக்கவர்களாய், தினமும் நாட்டில் நடக்கும் விஷயங்களைப் பத்திரிகைகளை வாங்கிப் படித்து உணரக் கூடியவர்களாய்விளங்க, கல்வியை அசட்டை செய்யாது—பருவத்தை வீணாக்காது படித்து உயர வேண்டும்.

உழைத்து உழைத்து உடலையே உருக்குலைத்துக் களைத்துப்போன பெற்றவர்கள், மனம் களிப்படைய இளைஞனாகிய ஒவ்வொருவரும் படித்து தொழில் செய்ய வேண்டும்—பரம்பரையாய் 'கான் வெட்டும்' தொழிலையே கருத்தில் கொள்ளாது, ஒவ்வொரு படி உயரப் பாருங்கள்.

பிறர் தன்னைப் பார்த்து 'கல்லாத மூடன்' என்று கூறுமளவிற்கு இன்று மலை நாட்டிலுள்ள ஒவ்வொரு இளைஞர்களதும் கல்வித்தரம் உயராது இருப்பதால் தான், உரிமைபெற்றுத்தருவதாகச் சொல்லி தொழிற் சங்கம் அமைத்து வெளி நாடு சுற்றி மாநாடு நடத்தி வந்தார்கள் சில நபர்கள்—'மலை நாட்டான் அறியமாட்டான் நாலு பேர் ஏகமனதாய் சொன்னால் போதும் ஆழமறியாமலேயே காலை விடுவான்' என்ற வரட்டுக் கொள்கையை வைத்துக் கொண்டு, மலை நாட்டவரை ஏமாற்றுகிறார்கள்—இது போன்றதரமற்றநிலை நீளாமலிருக்க இளைஞர்களே! நல்லது கெட்டதை அறியுமளவிற்குப் படியுங்கள். பத்திரிகை வாசியுங்கள்.

### 'தமிழ்ப் பித்தன்'

நாட்டிற்கு நற்பணியாற்றுவதாக நாலாபக்கமும் பறையடித்து, நாளெல்லாம் வீர கோஷம் முழங்கும் ஒவ்வொரு சங்கமும், உங்களது சந்தா தொகையில் தான் தங்கியிருக்கிறது. இன்று சந்தா தொகையை நீங்கள் தராவிட்டால், நாளை சங்கம், வீர முழக்கம், வெளி நாடு சுற்றல், தலைவர் பவனி, அத்தனையும் மறைந்துவிடும்—நல்லதை செய்பவருக்கு நல்லாதரவு தந்து நாளெல்லாம் போற்றுங்கள்-உங்கள் நல்வாழ்வு எதில் தங்கியிருக்கிறதோ அதுவே உங்கள் வாழ்க்கைப் பாதைக்கு ●●வியாயிருக்கும்.

"உன்னையே நீ அறிந்து கொள்! எதையும் ஏன்-எப்படி-எதற்காக என்று கேள்! அப்படிக் கேட்டதால்தான் சிலை வடிக்கும் சிற்பி, சிந்தனை சிற்பியாக மாறினான்! அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம்! எவர் சொன்னாலும் அதனை உந்தன் இய●பான பகுத்தறிவால் எண்ணிப் பார்" என்றார் ஓர் அறிஞர்.

தன் மனதிற்கு சரி என்றுபட, தனது பகுத்த●வை பயன்படுத்தினால் தான் மனமும் அதை மகிழ்வுடன் ஏற்கும்-அப்போது தான் இலட்சியம் உருவாகும்-உறுதி நிலை பெற்று-ஊக்கம் உண்டாகும்.

பணம் தேட பல சங்கம் உருவாகும்—வெளி நாடு சுற்ற வெவ்வேறு கொள்கைகளாக மாற்றியமைத்து சந்தா கேட்பார்கள்—உடலை வளைத்து உழைக்க முடியாதவரின் உயிரற்ற கொள்கைக்கு உடன்படாதீர்கள். காலத்தை வீணாக்காது கற்று ஞாலத்தை பொன்னாக்குங்கள்.

## கல்வி நிலை உயர்ந்தால் குறைகள் பல நீங்கும்

மலையகத்திலே குறிப்பாக தோட்டப் பகுதிகளிலே கல்வி நிலை சீர்கெட்டுக் கிடக்கிறது. இதற்குக் காரணங்கள் எத்தனை எத்தனையோ.

இக் கல்வித்துறை வளமற்று கிடப்பதால், மலை நாட்டு மக்கள் அறிவு ஆற்றலின்றி மிருகத்திலும் கேவலமாக வாழ்கிறார்கள். அதனால் மலையகத்து மக்கள் மூ●தியிலே மயங்கிக் கிடக்கும் மடமைகள் எத்தனை. தொட்டால் தோசம், கோடங்கி அடித்தால் நோய் தீ●ம், இப்படி இன்னும் எ●த்தனையோ.

கல்வி அறிவு இன்றிக் கிடப்பதால், தோட்டத்து பாட்டாளிப் பெருமக்கள் தமக்கு வரும் கடிதங்களையும், மற்ற விடயங்களையும் படிக்க முடியாது தவிக்கிறார்கள். பஸ் வண்டிகளிலும் புகையிரதங்களிலும் அவர்கள் படும் அவதிகள் எத்தனை. மற்றவர்கள் கூறும் கூற்றுக்களை, ஆராய்ச்சி இன்றி நம்பி ஏமாறுதல். இப்படி மலை நாட்டுத் தமிழ்ப் பாட்டாளிகள் படும்துன்பங்கள் எத்தனை எத்தனையோ.

இப்படிப்பட்ட கல்வி நிலையே குடியுரிமையற்று கிடப்பதற்கும் காரணம் எனவும் கூறலாம். குடியுரிமை பெறச் சென்றவர்கள் குடியுரிமை வழங்கும் இடத்தில் கேட்கும் கேள்விகளுக்கு,பதில் அளிக்க முடியாது திரும்புவதைப் பார்த்தால் தெரியும், அவர்களிடத்தில் எந்த அளவு கல்வி வளர்ச்சி அடைந்திருக்கிறதென்பது.

எனவே மலைநாட்டு கல்வி நிலை நாளுக்கு நாள் மோசமடைவதற்குப் பல காரணங்கள் உண்டு.

தோட்டப் பள்ளியில் கொஞ்சம் சிரமப்பட்டு படித்தவர்கள் பட்டினத்துப் பள்ளியில் சேருவதைக் கவனித்தால் மிகவும் கவலைக்குரிய விடயமாகத் தான் இருக்கிறது. முதலில் சேர விண்ணப்பிப்பவர்களுக்கு கிடைக்கும் பதில் இடமில்லை என்பதுதான். எனவே பெற்

**சிரா. மலைச் செல்வன்**

றோர் தம் பிள்ளைகளை சிறு வயதிலேயே வேலை செய்ய அனுப்பிவிடுகிறார்கள். இதனால் இவர்களது கல்வி வளர்ச்சி தடைபட்டு விடுகிறது.

இப்படி எத்தனையோ குறைபாடுகளால், மலையகத்துக் கல்விநிலை பாழ்பட்டு கிடக்கிறது. இக் குறைபாடுகள் நீங்கினால் அன்றி, மலை நாட்டில், கல்வி வளர்ச்சி அடையாது. அறிவு பெற்று அர்த்தமற்ற கற்பனைகளும், அறியாமைகளும் அழிந்துவிட முடியாது. அறிவு வளர்ந்தால் தான் நாம் இருக்கும் நிலை புரியும். அன்னியரின் கோரப்பிடியில் சிக்குண்டு கிடப்பது தெரியும்; நாடாண்ட தமிழன் நாடற்று கிடப்பது விளங்கும்.

எனவே மேலே குறிப்பிட்ட குறைபாடுகள் நீங்கி மலை நாட்டிற்கு நல்ல கல்வி வசதியளிக்கப்பட வேண்டும்.


ஆங்கிலம்
ENGLISH
ஆங்கிலப் பாஷையைச்
சிறப்பாக
* பேச
* வாசிக்க
* எழுத
மிகக் குறுகிய காலத்துள் கற்றுக்கொள்ள இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.
அற்லஸ் ஹோல்,
723, மருதானை றோட்,
கொழும்பு-10.





## துயரக் கடலில் தவிப்போருக்கு தமிழரசே வழிகாட்டும்

மலையக தமிழ் மக்கள் இரவென்றும், பகல் என்றும் பாராது, வெய்யிலையும் மழையையும் பொருட்படுத்தாது, கல்லும் முள்ளும் நிறைந்த மலை நாட்டை, கண்டோர் கண் வைக்கும் வண்ணம் செழுஞ் சோலைகளாக மாற்றினார்கள்; பற்றைகள் நிறைந்த காடுகளை வெட்டித் திருத்தி, தேயிலையும், ரப்பரும், கொக்கோவும் செழித்து வளரும் பூமியாக்கினார்கள்; புதர் மண்கிடந்த நிலங்களையெல்லாம் பொன் விளையும் பூமியாக்கினார்கள்; இப்படியாக ஈழத்தின் பொருளாதாரத்தை உயர்த்திக் கொண்டு சென்ற பாட்டாளி தன் நலனில் அக்கறை கொள்ளவில்லை. என்றும் நாம் மலை நாட்டிலே மன மகிழ்வுடன் வாழலாம் என்றே எண்ணியிருந்தான். பாடுபடும் பாட்டாளியின் பிழைப்பில் மண்ணைத் தூவும் மக்களும் இருக்கிறார்கள் என்பதை அவன் சிந்திக்கவில்லை. அதனால்தான் இன்று மலை நாட்டில் வாழ்கின்ற இந்திய மக்கள் துயரக் கடலில் அமிழ்ந்து தவிக்கின்றனர்.

ஈழத்தை வளம் படுத்திய தமிழ்த் தொழிலாளர்களைத் துயரக் கடலில் இருந்து கரை சேர்க்க திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் போன்ற பெரியார்கள் தங்கள் உடல் பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்க முன் வந்திருக்கின்றனர்.

வகுப்புவாத வெறியைத் தூண்டி விடும் பல சிங்களவர்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் காத்திருக்கின்றனர். நாய்க்காகப் பன்

**எஸ். டி. ராஜன்**

னிரண்டாயிரம் ரூபாய் செலவில் வீடு கட்டிய பிரதமர், மலைநாட்டு மக்களின் வசிப்பிடங்களைப் பற்றிச் சிந்தித்திருக்கவும் மாட்டார்கள்

உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, வாக்குரிமை இல்லை, குடியுரிமையில்லை, மொழியுரிமையில்லை, கல்வி உரிமையில்லை, வேலை வசதி இல்லை, இருக்க இடமில்லை, இன்னும் பல பிரச்சினைகளுக்குள் சிக்குப்பட்டுத்தவிக்கின்றனர் மலைநாட்டு மக்கள்.

தாய் மொழியைக்கூட கற்க முடியாத கஷ்ட நிலையில் இருக்கும் பாட்டாளித் தோழர்களின் பிள்ளைகளுக்கு சிங்கள மொழியையும் படிக்கச் சொல்லி வற்புறுத்துகின்றனர்,

காடாக் கிடந்த நிலங்களை வளம் கொழிக்கும் நாடாக்கியவனை 'நாடற்றவன்','கள்ளத்தோணி' என்று கூறி நாடு கடத்த எத்தனித்து வருகிறது அரசாங்கம்.

பல சமயங்களில் வேலைகள் கிடைக்காததினால் பட்டினியால் வாடுகின்றது பாட்டாளியின் குடும்பம். இது மட்டுமா? இன்னும் எத்தனை, எத்தனையோ துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் மலையக மக்கள்.

மலைநாட்டு மக்களின் நல்வாழ்விற்காக, தன்னலம் கருதாத தமிழ் மக்கள் பலர் முயன்று வருகின்றார்கள், அவர்களுடன் நாமும் ஒத்துழைத்து மலை நாட்டில் வாழும் தமிழர்களின் இன்னல்களைத் துடைப்போம்.


பொதுஅறிவுக் களஞ்சியம்
சித்திரக் கலண்டர்
ரூபா 1-75 மட்டுமே
லீலா தினக் குறிப்பு
1-50

லீலா பஞ்சாங்க


சித்திரக்

கலண்டரில் கண்டறியுங்கள்
லீலா ஸ்டோர்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரீந்தும் மானத்தைக் காப்பவனே உத்தமன்

## சோறு பெரிதென நினைப்பவன் நாட்டுப்பற்றே இல்லாதவன்

### பச்சையப்பன் கல்லூரியில் நாவலர் நெடுஞ்செழியன்

**மானமல்ல; சோறுதான் பெரிது என்று வாதாடும் சிலர் இருக்கிறார்கள், இவர்கள் மான உணர்ச்சி அற்றவர்கள்-உள்ள உரமில்லாதவர்கள். அவர்களுக்குக் கிஞ்சிற்றும் நாட்டுப் பற்றுக்கிடையாது. தன் நிலைமை தாழாது காப்பவனே உண்மை வீரனுவான். உயிரைக் கொடுத்தாவது மானத்தைக் காப்பவனே உத்தமனுவான்.**

**மறம், மானம், மாண்ட வழிச் செலவு, தேற்றம் ஆகிய குண நலப் பண்புகளைக் கொண்டால் தான் நாம் எடுத்த கருமத்தை எளிதில் நிறைவேற்ற முடிடிம், என்று நாவலர் கூறுகிறார்.**

“பால் மணம் மாருப் பாலகனை அழைத்து “செருமுனை செல்வாய் மகனே” என அனுப்பிய வீரத்தமிழ்த் தாயை நாம் தமிழ் இலக்கியத்திலே படித்திருக்கிறோம். நம்முடைய முன்னோர்களது வீரம் ஆண்மையை நிலை நாட்டியது, நேர்மையை நிலைக்க வைத்தது! மானத்தைப் பேணி உரிமைகளைக் காத்தது”, என்று நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., எம். எல். ஏ. அவர்கள் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். கல்லூரி முதல்வர் திரு. இராசேசுவரன் தலைமை வகித்தார். நாவலர் மேலும் கூறியதாவது:-

உலகப்பெரும் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் காதலும்வீரமும்நீக்கமற நிறைந்திருக்கின்றன. நம்முடைய பொற்காலமாகிய சங்ககால இலக்கியங்கள்,ஒருபாதிகாதலாகவும் மறுபாதி வீரமாகவும் பரவிக் கிடக்கின்றன. இன்று இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில், வீரத்தைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

#### பண்டைக் காலத்து வீரம்

பண்டைக்காலத்திலே நம்மிடம் வீரம் இருந்தது. எதிரிகளைப் புறங்கண்டோடச் செய்யும் ஆற்றல் நம்மிடம் இருந்தது. படைகொண்டு வந்தான் வேற்று நாட்டான் என்பதையறிந்து வீட்டுக்கொரு வீரர் செருமுனை நோக்கிச் சென்றது நாம் அறியாததல்ல. அத்தகைய வீரம் நம்மிடம் உறங்கிக் கிடக்கிறது.

நாம் எந்தக் காரியத்தைச் செய்யப்புகினும் அதற்கு வீரம் முதலாவதாகத் தேவை. நேர்மையான நீதியான நியாயமான செயல்களுக்கு வீரம் கட்டாய தேவையாகும்.

வீரம் ஏற்படவேண்டுமானல் முதலில் உள்ளத்தில் திண்ணம் ஏற்படவேண்டும். பின்னர் தெளிவு வேண்டும். அதற்கடுத்து துணிவு வேண்டும். அப்போதுதான் வீரம் உண்டாகும்.

இன்று நாட்டிலே ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையில் உற்பத்தி பெருசுகவும் மக்களுக்கு ஏற்படும் மனமாச்சரியங்களைப் போக்கவும், அறிவுப் படை தேவை; ஆற்றல் படை தேவை!

#### வள்ளுவன் சொல்லும் வீரம்

ஒரு படைக்கு இருக்க வேண்டிய நற்குணப் பண்புகள் பற்றி வள்ளுவர் அழகாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்.

“மறம் மானம் மாண்டவழிச்
செலவு இந்நான்கும்
ஏமம் படைக்கு”

மறம் என்பது என்ன? உள்ளத்தில் உறுதிதேவை என்பதுதான் அதன் பொருள். “வினைத்திட்பம் என்பது மனத்திட்பம்” என வள்ளுவரே விளக்கம் கூறியிருக்கிறார்.

ஒருவன் எவ்வளவுதான் உயர்ந்து தடித்து வளர்ந்தவனுயிருப்பினும், அவன் உள்ளம் கோழைத்தனமாக இருக்குமானல் அவனால் எந்தக்காரியமும் செய்ய முடியாது—இன்னெருவன் பலங்குன்றிய வனுயிருந்தாலும், உள்ள உரங் கொண்டவனுனல், அவனுல், எளிதில் எக்காரியத்தையும் செய்ய முடியும்.

ஒரு படை வீரனுக்கு மிக முக்கியமானது என்ன? மான உணர்ச்சி என்கிறார் வள்ளுவர்! மானமிருக்குமிடத்தில் தான் வீரம் பிறக்கும்! உயிர் போனலும் மானத்தைக் காக்கும் உள்ளம் பெற வேண்டும். இந்த நாட்டிலே மானமல்ல; சோறுதான் பெரிது என்பர்கள் சிலர் இருக்கிறார்கள்! இந்தியாவை ரஷ்யாவிற்கோ அன்றி அமெரிக்காவுக்கோ கொடுத்துவிட்டு, எங்களுக்கு மூன்று வேளை சோறு போடு என்ருல் அவர்கள் போட மாட்டார்களா? சோறு பெரிதென எண்ணுவார்கள் மான உணர்ச்சி இல்லாதவர்கள் உள்ள உரமில்லாதவர்கள்.

#### தன்மான உணர்ச்சி வேண்டும்

மான உணர்ச்சி இல்லாதவர்களுக்கு கிஞ்சிற்றும் நாட்டுப் பற்று இருக்க முடியாது! மான உணர்ச்சிதான் செயலற்றவனையும் தட்டி எழுப்புகிறது. தூங்குபவனையும் தட்டி எழுப்புகிறது. தன் நிலையில் தாழாமை, தாழ்ந்தால் உயிர் வாழாமை என்ற உணர்ச்சிதான் வீரர்களுக்கு ஏற்படும். தன் நிலைமை எப்போதும் எவராலும்தாழ்ந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உயிரை விட்டாவது மானத்தைக் காப்பவனே வீரனுவான்.

அடுத்ததாக ‘மாண்ட வழிச் செலவு’ என்ருல் மாண்பு பொருந்திய முன்னேர்களின் வீரவரலாறு ஆகும். முன்னேர்கள் ஆற்றிய பெருமை தரக்கூடிய பூரிப்புத் தரக்கூடிய காட்சிகளை நினைவுறுத்தி வீர உணர்ச்சி பெறுதலாகும்.

#### வீர இலக்கியம்

நம்முடைய உரிமைகளைப் பாதுகாக்கவும் புகழைப் பெறுவதற்கும் வீரம் செறிந்த இலக்கியங்களை நாம் படிக்க வேண்டும்.

இமயத்திலே வில்லையும் கயலையும் பொறித்து மீண்ட வரலாறுகள், இமயத்தின் முன்புறத்தில் மட்டுமல்ல பின் புறத்திலும் எனது இலச்சினையைப் பொறித்து வருவேன் எனச் சூளுரைத்து சென்று அங்கே புலிக்கொடி பறக்க விட்டு வந்த கரிகால் பெருவளத்தான் வரலாறும், நம் நினைவுக்குக் கொண்டு வந்து வீர உணர்ச்சி உண்டாக்கும் இலக்கியங்களாகும்.

தன்னை ஈன்றெடுத்ததாய் கங்கையின் அழகைக் காண விருப்பிய காரணத்தினுல், வட நாட்டுக்குபடையெடுத்துச்சென்று, வென்று, தூய கங்கையில் நீராடி மகிழ வைத்து மீண்ட சேரன்செங்குட்டுவன் வரலாறு இமயத்தில் வீர உணர்ச்சியை ஏற்படுத்தும் வரலாருகும்.

#### வெற்றிக்கு வேண்டியவை

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை வடநாட்டு மன்னர்கள் இகழ்ந்தனர் என்பதறிந்து துடித்தெழுந்து சென்று இமயத்தை வெற்றி

(14-ம் பக்கம் பார்க்க)

### திருவாசக விழா

ஈழத்து சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பாக திருவாசக விழாவும், திருவாசக சாதனைகளும் இம் முறை திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்றுள்ளது. விழா இம் மாதம் 31திகதி ஆரம்பமாகி 9-1-63ல் முடிவடைகிறது. திருக்கேதீஸ்வரத்தில் இதே போது திருவெம்பாவைப் பூசையும் விசேட சிறப்புகளுடன் நடைபெறுமெனத் தெரிகிறது.

ஜனவரி 4, 5, 6ம் திகதிகளில்இதே விழாவில் சென்னை ‘கலைமகள்’ ஆசிரியர் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், திரு. பி. எஸ். இராசசேகரன், ஆகியோர் தமிழகத்திலிருந்து பங்குபற்றுவார்கள்.

இத்துடன் உள்ளூர் கலைஞர்களின் கதாப்பிரசங்கம், இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும். வண்ணை மணிபாகவதர், திரு. த. குமாரசாமிப் பிள்ளை, திரு. ப. க. இராசலிங்கம், திரு. சி. விஞசித்தம்பி ஆகியோர்கள் இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்கள்.

## “ஆசை என்னைத் தூண்டுதடி அல்லி நீயும் சொல்லிவிடு!”

—ஆர். எஸ். மணி, எட்டியாந்தோட்டை—

கிராமிய இலக்கியம்

அந்திவேளையாகையினுல் சற்று வெய்யிலின் வேட்கையில் இருந்து தப்பித்துக் கொண்டு உழவர்களும் ஆறுதலாகக் காடுவெட்டிக் கொண்டிருந்தார்கள். அவ் வேளையிலே மாடுகளைத் துரத்திக் கொண்டு அழகி அல்லி அந்தக் காட்டின் ஊடே வந்து கொண்டிருந்தாள். அல்லியின் அழகிய அன்னநடை அடுத்த நிலத்தில் அமர்ந்திருந்த கட்டிளம் காளையான அங்கையனின் கண்ணுக்கு மெருகு ஊட்டுவது போலத் தென்பட்டது. அல்லி தன் கையில் கரும்பு வைத்திருந்தாள்; கறுப்பு வளையல் அணிந்திருந்தாள். அவளின் சுருண்ட தலைமயிர் காற்றுக்கு ஆடி அசைந்து கொண்டேயிருந்தது. அங்கையனின் உள்ளம் அல்லியைச் சுற்றியே வட்டமிடலானது. அவள் அழகிலே அவன் மயங்கி விட்டான். தன்னை அறியாமல் வாய் விட்டுப் பாடினன்:

“கறுப்பு வளையல் காரி
கை நிறைய கரும்புக் காரி
கண்ணை சிமிட்டுறன் நான்
கனிவுடனே வந்து விடு!”

திரும்பிப் பார்த்தாள் அல்லி! முகத்தைச் சுளித்துக் கொண்டே வேகமாகச் சென்ருள். ஆனல், அவள் துரத்தி வந்த மாடுகளில் ஒன்று அங்கையனின் காட்டினருகே நின்று விட்டது. அல்லி திரும்பி வந்தாள். அவள் வருவதைக் கண்டதும் அங்கையனின் அகம் மகிழ்வால் துள்ளியது. புதிய கற்பனையும் பிறந்தது,

“வா மயிலே வா மயிலே
வண்ணமுள்ள என் மயிலே
வந்து என்னைத் தொட்டிடடி
வாரியணைக்க நானிருக்
கேன்!”

என்று பாடினன்.

உடனே மாட்டருகே வந்து நின்ற அல்லி:

“ஆசையைப் பாரு, ஆசையைப்
பாரு
அடுத்த நிலக்காரருக்கு!
‘அல்லி’ என்னைக் கட்டிக்கிட
அதிஷ்டக்காரர் வேணு
மடி!”

எனப் பாடினன். ஆமாம், அல்லியின் அழகிலே பங்கெடுக்க— இன்பம் அனுபவிக்க— அதிர்ஷ்டக்காரன் தான் வேண்டும். அங்கையனிடம் அழகிருக்கிறது......... அதிர்ஷ்டம்?

“அதிர்ஷ்டம் இருக்குதடி
அடுத்த நிலககாரனுக்கு
‘அல்லி’ உன்னைக் கட்டிக்கிட
அடுத்த கணம் வந்திடு
றேன்!”

அங்கையன் இப்படி அழகாகப் பாடி முடித்தான்! அல்லி நாணத்தால் ஓடியே விட்டாள். அல்லி—அங்கையனின் காதல் அந்த ஒரு நாள் மட்டுமே இருந்தது. அவள் தாய்- தந்தையரின் சம்மதம் கேட்டாகி விட்டது. அவனே தாய் தந்தையில்லாதவன். அல்லி- அங்கையன் திருமணம் வெகு ஜோராக அடுத்த நாள் முகூர்த்தத்திலே நடைபெறலானது. முதல் இரவன்று மகிழ்வால் பொங்கிய அல்லியின் கணவன்:

“அதிர்ஷ்டக்காரன் நானே
தான்
அல்லி உன்னை அணைத்தி
டவா?
ஆசை என்னைத் தூண்டுதடி
அல்லி நீயும் சொல்லி
விடு!”

எனக் கூறினன்.


அவளால் மறுப்புத் தெரிவிக்கவா முடியும்? மெல்லப் புன்சிரிப்புச் சிரித்தான். அவள் இதழ்கள் விரிவதைக் கண்டதும் அங்கையனுக்கு புது உலகம் போவது போன்ற உணர்வு! ‘சரி’ என்பதற்குப் பதிலாக நாணிக் கோணி மெல்லத் தலையை ஆட்டினள் அல்லி.


**சுதந்திரன் சந்தா விபரம்**

இலங்கை—இந்தியா உட்பட

**வருடச் சந்தா ரூபா.10-00**

இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!



**ரிஷி**
**அஜமாமிச லேகியம்**

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதை பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்து விடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
” ½ ” ரூபா 22/50

[தபாற் செலவு 95 சதம்]

ஆயுர்வேத டாக்டர்:
**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**
**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்:

# இரு நோக்குடைய இனியவள் இவள்!

— தேனீ —

இதுகாறும், வள்ளுவனின் இன்பப் பெட்டகமாம் இன்பவியலில், களவு என்ற பகுதியின் கீழ், தலைவனைத் தலைவி பலவகையாலும் வருத்துவதைக் கண்ணுற்ருேம்.

அவன் படும் பாட்டைக் கண்டு மனம் இரங்கினேம்.

அவனுடைய இன்ப வருத்தத்தில் நாமும் பங்கு பற்றினேம்.

இப்பொழுது.........

'குறிப்பறிதல்' என்ற அதிகாரத்திற்கு வருகிருேம்.

இங்கு, தலைவி, தோழி ஆகியோரின் குறிப்பினைத் தலைவனும், தலைவன், தலைவி குறிப்பினைத் தோழியும் ஒருவர்க்கொருவர் அறிந்து கொள்கின்றனர்.

முதற் குறளிலேயே, தலைவி தலைவனுக்கு அளிக்கும் பார்வையின் பெற்றியை அழகாக வள்ளுவன் எமக்குத் தந்து மகிழ்கிருர்.

தலைவியின் பார்வை இருமுனைக் கத்தி போன்றது-அப்பார்வைக்கு இரண்டு நோக்கங்கள் உண்டு.

முதலாவது நோக்கம், தலைவனுக்கு இன்ப வருத்தம் அளிப்பது.

தனது காமக் குறிப்பினைத் தன் அழகிய விழிகளின் மூலமாகத் தலைவனுக்குத் தெரிவிக்கிருள் தலைவி.

அழகான, ஆசையூட்டும் பார்வை!

இதமான, இதயங்குளிரும் பார்வை!

இன்பமான, இனிமை தரும் பார்வை!

தலைவன் தாங்கொணுத வருத்தத்தை—இன்பமாவ வருத்தம்தான்—அனுபவிக்கிருன்.

'என்ன? பழைய கதை தானே?' என்று கேட்கிறீர்களா?

அது தானே இல்லை!

இங்கு, வருத்தத்திற்கு மருந்தையும் கொடுக்கத் தவறவில்லைத் தலைவி!

'உங்களால் நான் படும் பட்டைப் பாருங்களேன்!' என்று முதலில் தனது காமக்கிளர்ச்சியை வெளிப்படுத்திய தலைவியின் பார்வையில்.........

'அதைத் தீர்க்கவும் உங்களால்தான் முடியும், என் அன்பே! வாருங்கள் அருகில்!' என்று வரவழைக்கும் வாத்சல்யத்தையும் புகுத்தி விடுகிருள் தலைவி!

ஆகவே, முதற் பார்வையால் திணறித் திண்டாடிய தலைவன், இரண்டாவது அன்புப் பார்வையில் அகமகிழ்ந்து குளிக்கிருன்!

அந்த மகிழ்ச்சியில் தோய்ந்து வெளிவரும் வார்த்தைகள் தான் இவை:

இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து

# போர்முரசு கேட்டதும் களம் செல்லத் துடிதுடிக்கும் வேளத்தின் வீரம்!

## முத்தொள்ளாயிரக் கவிச்சோலையில் முறுவலிக்கும் காட்சி

**பண்டைத் தமிழனிடம் மட்டும் வீரம் இருக்கவில்லை. அவனுடன் போர்க்களங்களைக் கண்ட வேளத்திடமும் வீரம் இருந்திருக்கின்றது என்பதை இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. போர் முரசு கேட்டதும், பொங்கி எழுந்து களம் பாயத் துடி துடிக்கும் வேளத்தின் வீரத்தை முத்தொள்ளாயிரம் காட்டுகிறது.**

**வீரமிழந்து, வீட்டிலே முடங்கிக் கிடக்கும், கால் பிடித்துக் கஞ்சிக்கு வழி தேடவும் முயலும் இன்றையத் தமிழனுக்கு வேளத்தின் வீரமாவது புத்தி புகட்டுமா?**

முடியுடை மூவேந்தர் கொடிகட்டி ஆண்ட காலம்! முத்தமிழில் வித்தையெல்லாம் முறுவல் செய்த காலம்! மறத்தமிழர் மாண்பு புறநானூற்றிற் பொறிபட்ட காலம்! வீரமும் காதலும் விளைநிலத்துப் பயிர் போலக் கண்ணிலும் மேலாகக் கட்டிக் காக்கப்பட்ட காலம்! உலகில் தமிழனின் புகழ் உச்சநிலையையடைந்த காலம்! இதோ நம் கண்முன் காட்சிதரும் முத்தொள்ளாயிரக் கவிச் சோலையில் முறுவலிக்கின்றது. அண்டித் தான் பார்ப்போமே!

சோறுடைத்தான சோழவள நாட்டுச் சொர்க்க பூமியில் நாம் நிற்கிருேம். காவிரியாறு கரைபுரண்டோடுகிறது. காதலரும் கன்னியரும் புதுப்புனலாடிப் பூரிக்கின்றனர். செந்நெலும் கரும்பும் செழித்துக் காணப்படுகிறது. கன்னல் மொழி மாதர்; களைபறித்தும், காளையர் கவிபாடியும் குதூகலிக்கின்றனர். ஏர் சுமந்து உழவும் கார்நிறக் காளைக்கூட்டமும், மேன்மைதரும் மேதிக் கூட்டமும்கழனிக்கரைகளில் களைப்பாறுகின்றன. செந்நெற் கழனிகளின் பொன் மணிக் கதிர்களைத் தென்றல் தாலாட்டித் தூங்க வைக்கிறது. வானுயர் தென்னஞ் சோலை மகிழ்ச்சியில் ஆரவாரிக்கின்றது

இத்தனை செல்வத்திற்கும் தலையாய சொந்தக்காரன் தான் யார்?

வேறுயாருமல்ல. அவன் தான் வளவனின் வழித்தோன்றல். கரிகாலனுக்கு இளையவன், சோழர் குலச் செம்மல் 'கிள்ளி' மன்னன், அவனது புகழ்தான் என்னே! புறம் போற்றும் வீரம்தான் என்னே! கன்னியரைத் துன்புறுத்தும் கட்டழகுதான்

### பாண்டியூரன்

என்னே! பரந்த சோழ மண்டலத்திற்கே நிரந்தர பேரரசன் கிள்ளி. சிற்றரசுகள் சிரந்தாழ்த்திக் கப்பம்கட்ட அரசுக் கட்டில் வீற்றிருக்கின்ருன் கிள்ளி. கப்பம் கட்ட வேண்டிய காலம் கடந்து விட்டது. கர்வம் பிடித்த சிற்றரசர் சிலர் கப்பம்கட்டாது கடத்திவிட்டனர். கிள்ளிக் கோமானுக்குக் கோபம் குமுறியது. பகைவர் மீது படையெடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்து விட்டது. போர்ப் பறை முழங்கிற்று. கிள்ளி மன்னன் தன் பட்டத்து யானை முன் செல்கிருன். மன்னனைக் கண்ட வேளம் மகிழ்ச்சியில் துதிக்கையைத் தூக்கித் தலைவனுக்கு வணக்கம் செலுத்தியது.

போர்ப் பறை கேட்ட வேளம் வீராவேசம் கொண்டது. அதன் கால்கள் வீர நடை போடத் துடித்துக் கொண்டிருந்தன. வேற்றரசனின் விலா எலும்புகளைக் குத்திமுறிக்கக் கொம்புகள் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றன. கிள்ளிக்கோமானின் கொற்றத்திற்குக் கிடைத்த செல்வம் அந்த வேளம். போர் என்ருல் போதும் அதற்கு. பொங்கியெழும் வேகத்தில் மதிற் சுவர்கள் பொரியாகும்! கோட்டை கொத்தளங்கள் குட்டிச் சுவராகி விடும்.

அத்தகைய வேளம் கால் தூக்கும் பாணியிலேயே கிள்ளிக்குக் கதை சொல்கிறது, வீரக்கதை—வெற்றிக் கதை.

"கீர்த்திமிக்க கிள்ளிக் கோமானே! இதோ புறப்படட்டுமா? களத்திலே குருதி வெள்ளத்தைக் கலக்கிப் பழக்கப்பட்ட என் கால்கள் துடிக்கின்றன. இதோ காஞ்சியில் வைத்தகால் களிப்படைகிறது! தஞ்சையை வீழ்த்திய கால் தவிக்கின்றது! மங்களத் தமிழரின் மாண்புக்காகச்சிங்களவரின் சிறுமதியடக்க ஈழத்தை மிதித்தகால் என்னையும் அறியாமல் இன்பம் துய்க்கிறது. எஞ்சிய கால் உறையூர்க் கோமாளுகிய தங்களின் உல்லாசவாசி நான் என்று உவகை பூக்கிறது. தாமதிக்காதீர்கள்! தாவியேறுங்கள் என் மீது!"

ஆஹா! என்னே அந்த வேளத்தின் வீராவேசம். சோழ நாட்டுச் சுந்தர பூமியிலே பிறந்த பண்பே போலும்! எதிரியின் கோட்டைச் சுவரை முட்டியதால் கொம்பின் நுனி குறுகிவிட்டதேயென்பதால் வெட்கித் தன்பிடியின் முன் செல்ல மறுத்த வேளமல்லவா அது! சுத்தவீரனுக்குரிய சேவையனைத்தும்அதனிடம் இல்லாமலா போகும்!

மனிதன் மட்டும் மறக்குலத்திற் பிறக்கவில்லை. வனவிலங்கான வேளத்திற்குக் கூட வீரப் பண்புகள் இருக்கின்றன என்பதை இங்கு நாம் காண்கிருேம். தமிழனோடு பழகும் தடிகள்கூட அவனது பண்பில் அன்று திளைத்தன.

இன்றைய தமிழனே வீரம் இழந்து வீட்டில் முடங்கிக் கிடக்கிருன். கால் பிடித்துக் கஞ்சிக்கு வழி தேடுகிருன். கோழையாகிக் குந்தித் திரி

(15-ம் பக்கம் பார்க்க)

# உள்ளத்தைத் தொடும் கலித்தொகை உணர்ச்சி ததும்பி நிற்கின்றது

## படிக்கப் படிக்கத் தெவிட்டாத இனிமையை அளிக்கின்றது

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கலித்தொகைப் பாடல்கள் உள்ளத்தைத் தொடுகின்றன, உணர்ச்சிகளை அள்ளி அள்ளிச் சொரிகின்றன. இல்லை—நம்மையெல்லாம் எங்கோ இழுத்துச் செல்கின்றன.

அத்தகைய சக்தி படைத்தவை, உயிருள்ளவை கலித்தொகைப் பாடல்கள். வயோதிபரையும் வாலிபராக்கும் ஆற்றல் அவற்றிற்கு உண்டு.

ஒவ்வொரு பாடலையும் படிக்குங்கால், அதில் நாமும் தலைவனுகவோ அன்றித் தலைவியாகவோ மாறுகிருேம் —இல்லை — மாற்றப்படுகிருேம்.

பாலைக் கலியைப் படிக்கும் போது நெஞ்சு கலங்குகிறது. பிரிவை எண்ணுகிருேம். சங்க காலம் அப்படியே நம் கண் முன் காட்சியளிப்பது போன்ற பிரமை.

பாலைக் கலியைப் பாடியவர் சேரமான் பெருங் கடுங்கோ. இவர் சேர மன்னர் மரபினர். சிறந்த கொடை வள்ளல்; செந்தமிழ்ப் புலவர்; பாலைக்கலியைவிட இன்னும் அகத்துறைப் பாடல்கள் பல பாடியுள்ளார். நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை ஆகியவற்றிலும் இவர் பாடல்கள் உள.

தமிழர்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்து அவற்றிற்கு உரிய நிகழ்ச்சிகளையும் கூறிப் போந்துள்ளார்கள்.

"போக்கெல்லாம் பாலை
புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சே ரூட லணி மருதம்
—நோக்குங்கால்
இல்லிடுக்கை முல்லை இரங்கல்
நறு நெய்தல்
சொல்லிருக்கு மைப்பாற்
றெகை"

என்னும் செய்யுள் மூலம் நாம் இதனை அறியலாம்.

இயற்கையின் சீற்றத்திற்குள்ளாகி உருக்குலையப் பெற்ற இடமே பாலை. சுருங்கக் கூறின் சுரமும், சுரஞ் சார்ந்த இடமும் பாலை எனப்படும். என்ருலும் பாலையென்ற தனி இடத்தைக் காண்பது அரிது.

பாலைக்கலி பிரிவு பற்றிய நிகழ்ச்சிகளையே நமக்குக் கூறுகிறது.

காதலர் பிரிகிருர்கள்.

பிரிவு எதற்காக?

பொருள் தேடுவதற்காக. போர் காரணமாக, தூது செல்வதற்காகப் பிரிவதும் உண்டு.

பிரிவு என்று சொன்னல், நாம் இன்று பார்ப்பதுபோல காதலன் கைவிட்டான், காதலி தற்கொலை— அப்படிப்பட்ட பிரிவு அல்ல!

மேற் சொன்ன காரணங்களுக்காகச் சில காலம் பிரிவது தான் பழந் தமிழ்க் காதலரின் பிரிவு.

அப்படியாயின் இன்று கணவன் ஓரிடம், மனைவி ஓரிடம் என்று வருடக் கணக்காக வாழ்கிருர்களே.

ஆம்! இன்றைய சமுதாய அமைப்பு அவ்வாறு அமைந்து விட்டது.

'உன்னை நினைத்தேன்' என்று தலைவன் கூறியதும் தலைவி அழுகிருள். காரணம் கேட்டால், 'என்னை மறந்திருக்க நேரிட்டபடியால் தானே நினைக்க வேண்டி வந்தது' என்று கூறுகிருள் தலைவி.

கணவன் என்ருல், சதா தன் நினைவாக இருக்க வேண்டும் என்று விரும்பினுள் அன்றைய தமிழ்ப் பெண்.

'கருத்து ஒருமித்த காதலர்' உள்ளத்தாலும் உணர்வாலும் ஒன்றுபட்டவர்கள் அல்லவா?

இவற்றை யெல்லாம் பகர்வது பாலைக் கலி.

அடுத்து, குறிஞ்சி கூறுவதைப் பார்ப்போம்.

குறிஞ்சிக் கலியைப் படிக்கும் போது நாம் எல்லோரும் காதலன் ஆகிருேம்; காதலி ஆகிருேம்— நமது உள்ளம் விபரிக்க முடியாத ஒரு குறுகுறுப்பை அடைகிறது. நம்மையெல்லாம் தினைப் புலத்துக்கு அழைத்துச் செல்கிறது குறிஞ்சிக் கலி. மலையும், மரமும் கண்முன் நிற்கின்றன. சுனையும், அருவியும் தோன்றுகின்றன. வேழமும் வேங்கையும் காட்சி தருகின்றன.

தேன் நிலவு கொண்டாடும் காதலர்க்கு இக் குறிஞ்சிக் கலி மதுவாக அமையும். [illegible] குறிஞ்சி எனப்படும்.

(15-ம் பக்கம் பார்க்க)

### புதுமைச் சிற்பி

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்ருகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

விலை ரூபா 1-25

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:
S. P. S. ஜெயம் கம்பெனி,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:
M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1962 டிசம்பர் மாதம் 30-ந் தேதி

194-ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# தலை நகரின் தீர்ப்பு

சென்ற வாரம் நடைபெற்ற கொழும்பு மாநகர சபைத் தேர்தல் நாட்டு மக்கள் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது.

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வாகை சூடியது. எதிர்க் கட்சிகள் சடசடவெனச் சரிந்தன. இடதுசாரி முன்னணி முறிந்து விழுந்தது. ஆளும் கட்சி அதள பாதாளத்தில் கவிழ்ந்தது. 47 ஸ்தானங்களில் ஆளும் கட்சிக்கு கிடைத்ததெல்லாம் ஒன்றேயொன்று தான். அதுவும் தப்பித்தவறிக் கிடைத்தது தான். பரிதாபகரமான வீழ்ச்சி—பெரும் அவமானமும் கூட. பாராளுமன்றத்திலே பெரும்பான்மை பலமுள்ள கட்சிக்குத் தலை நகர் ஆட்சி மன்றத்தில் ஒரேயொரு ஸ்தானம்—வெட்கக்கேடு அந்த அளவுக்கு ஆளும் கட்சியின் அந்தஸ்து அழிந்து விட்டதா?

ஐ. தே. கட்சி வெற்றி கண்டு நாடே ஆச்சரியத்தில் மூழ்கியது. இடது சாரிகளுக்குச் சுரம் கண்டது. ஆளும் கட்சி அதிர்ச்சியுற்றது.

ஐ. தே. கட்சியின் வெற்றிக்குக் காரணமென்ன? மக்களின் மனப்போக்கு மாறி விட்டதா? இன்றேல் வேறு நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்பட்டதா?

(1) சீன - இந்திய யுத்தத்தை முக்கிய தேர்தல் பிரச்சினையாக்கியது ஐ. தே. கட்சி. அதன் வெற்றியின் இரகசியமும் அது தான்.

தமிழ் பேசும் மக்கள் நூறு சத விகிதம் பாரதத்தை ஆதரிப்பவர்கள். சிங்கள மக்களும் சீன ஆக்கிரமிப்பைக் கண்டிக்கின்றனர். பாரதம் அழிந்தால் பௌத்தம் அழிந்து விடுமென்றனர் பிக்குகள்.

ஐ. தே. கட்சி பாரதத்துக்கு ஆதரவு நல்கியது. வாக்காளர் ஆதரவைப் பெற்றது. இடது சாரிகளோ சீனத்தை ஆதரித்தனர். மக்கள் ஆதரவை இழந்தனர். ஆளும் கட்சியும் சீனாவின் பக்கம் நின்றது, நடுநிலைமைப் போர்வையில். எனவே மக்களிடம் நன்றாக உதை வாங்கியது.

மக்கள் சீன ஆக்கிரமிப்பை ஆதரிக்கவில்லை என்பதே தலை நகரின் தீர்ப்பு. இத் தீர்ப்புக்கு ஆளும் கட்சி தலை வணங்குமா?

(2) விலைவாசிகள் ஏற்றம், அவசியப் பொருட்களின் தட்டுப்பாடு, அவசியமற்ற கட்டுப்பாடு, வேலையில்லாத் திண்டாட்டம், அரிசி வெட்டைப் பற்றிச் சதா வெட்டிப் பேச்சு, நிதி நெருக்கடி இத்தனையும் மக்கள் உள்ளத்தை மாற்றி விட்டன.

ஆட்சியாளரின் தான்தோன்றித் தர்பார் தமிழ் பேசும் மக்களைக் கொதிப்படையச் செய்துள்ளது. அதிருப்தி — வெறுப்பு; ஆட்சியாளர் மீது மட்டுமல்ல, இடது சாரிகள் மீதுந்தான். ஆளும் கட்சிக்கும் இடதுசாரிகட்கும் மோதல் என்பது உண்மையே. ஆனால் இரண்டையும் ஒரே முகாமில் தான் வைத்துள்ளனர் மக்கள். ஆகையால்தான் அரசாங்கத்தின் மீதுள்ள அதிருப்தியை இடதுசாரிகள் பயன்படுத்த முடியவில்லை.

அந்த அதிருப்தியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது ஐ. தே. கட்சி.

(3) இக் கட்சி இளைஞர்களின் வாக்குகளையும் தட்டிக் கொண்டு போய் விட்டது. இளைஞர்கள் தேசிய உணர்ச்சி மிகுந்தவர்கள், சுதந்திரக் கட்சியை என்றும் ஆதரிப்பார்கள் என்ற நப்பாசையிலே ஆளும் கட்சி அவர்கட்கு வாக்குரிமை வழங்கியது. ஆனால் வேலை வசதி வழங்கவில்லை. அதன் விளைவு அவர்களும் அதிருப்தி கொண்டதுதான். ஆட்சியாளர் மீது நம்பிக்கை இழந்தனர்.

வேலையின்றித் தவிக்கும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் ஐ. தே. கட்சி பக்கம் சாய்ந்தனர்.

வர்த்தக மந்தத்தால் பல வர்த்தகச் சிப்பந்திகள் வேலையிழந்தனர். அவர்களின் ஆதரவும் ஐ. தே. கட்சிக்குக் கிடைத்தது.

(4) திரு. டட்லியின் இலஞ்ச மசோதாவை ஆதரிக்க மறுத்தது ஆளும் கட்சி. அரசாங்கம் இலஞ்சத்தை எதிர்க்கவில்லையென்ற கருத்து எங்கும் பரவியது. அதனையும் பயன்படுத்தியது ஐ. தே. கட்சி.

(5) தேர்தல் வட்டாரங்களின் தொகையை 47--ஆக கூட்டியது ஆளும் கட்சி, நகராட்சி மன்றத்தைக் கைப்பற்றக் கையாண்ட குறுக்குவழி தான் இது. அதனால் பயனடைந்தவர்களும் ஐ. தே. கட்சியினர்தான். ஆளும்கட்சியின் மனக்கோட்டை இடிந்தது. அவர்களின் அறிவிழந்த செயல் ஐ. தே. கட்சியைப் பலப்படுத்தியது.

(6) சமசமாஜ, கொம்யூனிஸ்டுக் கட்சிகள் தேர்தல் முன்னணி அமைத்தன. விளைவோ நேர்மாறாயிற்று. முன்னணிக்குப் படுதோல்வி—நான்கு ஸ்தானங்களே கிடைத்தன. ஏன் இந்த அவல நிலை?

இடதுசாரி ஐக்கியத்தை மக்கள் விரும்பவில்லையா? முன்னணி அமைக்க வேண்டும், மக்களுக்குத் தேவையான போதுதான்; கட்சித் தலைவர்களுக்குத் தேவையான போதல்ல. கடந்த பொதுத் தேர்தலே அதற்குச் சான்று. சுதந்திரக் கட்சியும் இடதுசாரிகளும் ஓரணியிற் திரள வேண்டும் எனச் சிங்கள மக்கள் விரும்பினர். அன்று அத்தகைய முன்னணி தோன்றியதும் அமோக ஆதரவு அளித்தனர். தலை நகரத் தேர்தலிலே முன்னணி அவசியமென்று மக்கள் கருதவில்லை. எனவே இடதுசாரி முன்னணியை முற்றாக நிராகரித்தனர். "முன்னணி"க் கூச்சல் போடுவோருக்கு இது ஒரு படிப்பினை!

(7) தலைநகரத் தேர்தலிலே இம்முறை பணம் சற்று அதிகமாய்ப் பேசியது. வட்டாரங்களிலே வாக்காளர் தொகை குறுகியதால், பணத்தின் சக்தி வலுப்பெற்றது. விளைவு வாக்காளர் அநேகர் மனம் மாறியதுதான்.

(8) காற்று வலது பக்கம் வேகமாக வீசுகிறது என்பதை இதர நகராட்சி மன்றத் தேர்தல்களும் எடுத்துக் காட்டின. மக்களின் மனப் போக்கு வலது பக்கம் சாய்கிறது. அதன் பிரதிபலிப்புதான் ஐ. தே. கட்சியின் வெற்றி.

தலைநகரத் தேர்தலிலே அக்கறையில்லையென ஆளும் கட்சி அசட்டையாக இருக்கமுடியாது. காரணம், இத் தேர்தலின் விளைவு இன்று நாடு முழுவதும் எதிரொலிப்பதுதான்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், ஐ. தே. கட்சியும், சுதந்திரக் கட்சியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களே! யார் வென்றாலும் ஒன்றுதான், தோற்றாலும் ஒன்றுதான். அவர்களின் உரிமைப் பிரச்சினையில் முன்னையது கைவிரித்தது; பின்னையது ... யினர்களுக்கும் ... இருவரும் நயவஞ்சகர்கள். ... வெற்றியிலோ, சுதந்திரக் கட்சி வெற்றியிலோ தமிழ் பேசும் மக்களுக்கு மகிழ்ச்சி கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கும், கிழக்கும், மலையகமும் ஒன்றாய்ச் சேர வேண்டும்

# தமிழரசின் கருவினிலே உருவான எண்ணமிது

மலையகத்து மக்களை இலங்கையில் வாழும் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் தமிழரசுக் கட்சியின் கருவிலேயே உருவான எண்ணமாகும் இத்தனை நாட்களிலும் இல்லாத புதிய எண்ணம் இப்பொழுது மட்டும் ஏன் உண்டாக வேண்டும் என்ற கேள்வியை எழுப்பி விதண்டாவாதம் புரிகின்றனர் பலர்.

மலையகத்து மக்களுக்கு, குடியுரிமை, வாக்குரிமை வழங்குவதற்கு அன்றிருந்த ஆட்சி மறுக்க முனைந்ததே தமிழரசுக் கட்சியின் தோற்றத்துக்கு முழுமுதற் காரணமாக அமைந்தது என்பதை அரசியல் அவதானிகள் அனைவரும் நன்கு உணருவர்.

வாக்குரிமை, குடியுரிமை சட்டங்கள் வந்தபோதே தந்தை செல்வநாயகம் அவர்கள் 'இன்று மலையகத்து மக்களுக்கு விழும் அடி நாளை இந் நாட்டிலே வதியும் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்கும் விழும். ஆகவே தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுப் போரிட வேண்டும்' என்று கூறினார்.

கேலிக்கும் கிண்டலுக்கும் அந் நாளில் இலக்காகிய அவ் வாக்கியங்கள் இன்று நாட்டிலே நடைமுறைக்கு வந்ததை உணர்ந்த பின்னரே தந்தையின் தீர்க்கதரிசனத்தை ஒப்புக் கொண்டார்.

## சுயநல வேடதாரிகள்

மலையகத் தமிழர்களுக்கு உரிமைகள் பெற்றுக் கொடுப்பதாக வாக்களித்து அவர்களுடைய உழைப்பை உறிஞ்சிக் கொண்டு பல தொழிற் சங்கங்கள், அவர்களை அறியாமை என்னும் இருட்டறையினுள்ளே அடைத்து வைத்து விட்டு தங்கள் சுய எண்ண சித்திகளிலேயே காலங் கழித்துக் கொண்டு வாழுகின்றன. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைக்கு ஒப்ப மலையகத்து மக்களின் உரிமைகள் யாவும் தினசரி புதுப் புதுச் சட்டங்களின் துணையுடன், பிடுங்கப்பட்டே வருகின்றன. உரிமைகளைப் பறிகொடுத்து வாழும் அம் மக்களுக்கு அனுசரணையாக இருந்து, ஆறுதலளிக்கவோ, துயர் துடைக்கவோ இத் தொழிற் சங்கங்கள் இது வரை எந்த விதமான முயற்சியும் செய்ததாகத் தெரியவில்லை. பெயரளவில் மட்டும் மலையக மக்களின் நலனுக்காகவே வாழ்கிறோம் என்று வாயாரக் கூறுகின்றனர்.

ஒப்பற்ற ஒரு சக்தி ஒன்றுகத் திரட்டப்பட்டிருந்த போதிலும், அந்தச் சக்தியைப் பிரயோகித்தது. அதனால் இழந்து பட்டுப்போன உரிமைகளை மீட்டுக்கொள்ள முனையவில்லை.

## நம்பிக்கை மோசம்

தமிழ்மொழிபேசி, தமிழ்ப் பண்பாட்டில் ஊறி, தமிழ் கலை கலாச்சாரத்துடன் இணைக்கப்பட்ட ஒரே இனமக்களான வடகிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் ஒன்றாகச் சேர்ந்து வாழ வேண்டும்; இரு சாராரும் இழந்துவிட்ட உரிமைகள் அனைத்தையும் ஒன்றாகப் போராடிப்பெற வேண்டும்; இந்நாட்டில் ஏனைய மக்கள் அனுபவிக்கும் அத்தனை சலுகைகளையும் இரு திறத்தாரும் அனுபவிக்க வேண்டும் என்ற அபிலாசை தமிழரசுக் கட்சியிடம் தொன்று தொட்டே எழுந்திருந்தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசும், இலங்கை ஜனநாயகக் காங்கிரசும் தமிழரசுக் கட்சியினருடன் தோழமை கொண்டுறவாடி இருந்தனர். அவ்வேளையிலேயே ஒற்றுமை உருவாக வழிபிறக்கும், உரிமைக்காகப் போராட இவர்கள் பின்நிற்க மாட்டார்கள் என்று தமிழரசுக் கட்சி பெரிதும் நம்பியிருந்தது. தொழிலாளத் தோழர்களும் இவ்வண்ணமே நம்பியிருந்தனர்.

## உண்மையை உணர்ந்தனர்

புதுப்புது உருவங்களில், வெவ்வேறு தோற்றங்களில் சட்டங்கள் உருவாக்கப்பட்டு, உரிமைகள் பறிபோனதைக்கண்டும் காணாதுதலைவர்கள் கண்மூடி வாயடைத்து இருந்தனர். உரிமைகள் பறிபோகின்றனவே என்பதையிட்டு ஒரு குரல் கொடுக்கக்கூட முடியாது தவித்திடும் தலைவர்களின் உண்மை உள்ளக்கிடக்கையைத் தொழிலாளத் தோழன் அறிந்துகொண்டான். தனது துயர் துடைக்க தொண்டமானோ, அஸீசோ வரமாட்டார்கள். அவர்கள் முன்வந்தால் அவர்கள் அனுபவிக்கும் உரிமைகளையே ஆட்சியாளர்கள் பறித்துவிடுவார்களோ என்று பயப்படுகிறார்கள் என்ற உண்மையை உணர்ந்துவிட்டான். ஆகவே தான் தமிழரசுக் கட்சியை அறைகூவி அழைத்தான்.

தோட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் துயர்துடைக்க தமிழரசுக் கட்சி ஒன்றே தக்க வழிவகுக்கும் என்பதனை தொழிலாளத் தோழன் உணரத் தலைப்பட்டான். பொய்யாலும், புனைந்துரையாலும் பகட்டுக் காட்டிப் பணம் பறித்து, உல்லாசப் பவனிவரும் பெயரளவுத் தலைவர்களை நம்புவதைக் கைவிட்டான். உண்மைக்கும், உரிமைக்கும் உள்ளபடி பாடுபடும் பண்புடையோர் யாரென்பதை அறிந்துவிட்டான்.

## சூழ்ச்சிப் படலம்

தமிழரசாரின் குரல்கேட்டால் தங்கள் சொற்கேட்க யாரும் இருக்கமாட்டார்களே! தமது உண்மைச் சொரூபம் வெளிப்பட்டுவிடுமே! தமது சுயநல வேட்டைக்கு முற்றுப்புள்ளிவைக்கப்பட்டு விடுமே என்பதை உணர்ந்த தொழிற்சங்க வாதிகள் தமிழரசாரின் வருகையைத் தடுத்துவிடப் பலப்பல சூழ்ச்சிகளைக் கையாண்டுள்ளனர்.

சூழ்ச்சிகள் பல செய்தாவது தங்கள் சுயநலத் திட்டத்தை சரிவர நிறைவேற்றிக்கொள்ளும் திறமை படைத்தவர்களல்லவா அத் தலைவர்கள்?

தலைமைப்பதவி பறிபோய் விடுமே என்பதற்காக ஆற்று நீரை இறைப்பதுபோல் ஆயிரமாயிரமாகப் பணத்தை வாரியிறைத்து பதவியைக் காத்தவர்களல்லவா? உண்மை ஊழியன் உயர் பதவிக்கு வந்து விட்டால் பொய்யுரைத்து, வேடம் புனைந்து திரிந்து கொள்ளும் போலி வாழ்வின் சுய உருவம் கலைக்கப்பட்டு விடுமல்லவா! இதற்காகவே சாதிச் சனியனையும் வருந்தி அழைத்து தலைமைப் பதவியைக் கட்டிக் காத்தவர்களுக்கு தமிழரசுக்கட்சியுடன் மக்கள் தொடர்பு கொள்ளாது பாதுகாத்துக்கொள்ள இயலாதா என்ன?

அந்த இறுமாப்பிலே பல சூழ்ச்சித் திட்டங்களை வகுத்தனர்.

## தடுக்க முடியவில்லை

ஹட்டனில் தமிழரசுக்கட்சியின் பொதுக் கூட்டம் 23ம் தேதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு மலையகத் தமிழ் மக்கள் செல்லாதிருக்க வேண்டிய உபாயங்கள் பல உருவாக்கப்பட்டனவாம்.

ஹட்டனைச் சுற்றியுள்ள சில தோட்டங்களில் தோட்டத் துரைமார்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி அதே ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாகவிருந்தபோது கூட தொழிலாளர்களுக்கு அன்று தோட்டங்களில் வேலை வைத்தார்கள்.

இன்னும் சில தோட்டங்களில் தோட்டக் கமிட்டிகளும் திடீரென அன்றே கூட்டப்பட்டன. இதைவிட மேலாக ஹட்டனில் சுற்றுப்புறங்களில் வெவ்வேறு இடங்களில் காங்கிரஸ் கிளைகளால் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

எத்தனை எத்தனை பொய்யுரைத்தபோதும், எத்தனை தந்திரோபாயங்களைக் கையாண்டபோதும் உண்மைக்காகவும், உரிமைக்காகவும் போராடும் தமிழரசுக் கட்சியின் மலையக வருகையை எவருமே தடைசெய்ய முடியவில்லை.

# மலையகத் தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் பயில வேண்டுமாம்

## தொழிலாளர் கழகத்தின் மீது பாய்ச்சல்

### சிங்களத் தினசரியின் சீற்றம்

**“மலையகத்தில் தமிழ்த் தொழிலாளர்கள் சிங்களவருடன் வசிக்கின்றனர். தோட்டங்கள் சிங்களக் கிராமங்களால் சூழப்பட்டுள்ளன. இந்த மக்களை என்றும் ஒதுக்கிவைப்பது தேசிய ஒற்றுமைக்கு ஆபத்தை ஏற்படுத்தும். அந்த ஆபத்தைத் தவிர்க்கவே அவர்களுக்குச் சிங்களம் கற்பிக்க வேண்டுமெனத் தேசியக் கல்விக் கமிஷன் சிபார்சு செய்திருக்குமென்பதில் ஐயமில்லை” என்று “லங்காதீப்ப” என்னும் சிங்களத் தினசரி இம் மாதம் 27-ந் திகதி இதழில் தலையங்கம் தீட்டியுள்ளது’**

அட்டனில் நடைபெற்ற “இலங்கைத் தொழிலாளர் கழகம்” அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை நிகழ்த்திய சொற்பொழிவுக்குப் பதிலளிக்கு முகமாகவே இத் தலையங்கம் எழுதப் பட்டுள்ளது.

“லங்காதீப்ப” மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

“தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற் சங்கமொன்றைத் தமிழரசுக் கட்சி அட்டனில் நிறுவியுள்ளது.

தொழிலாளர் நலன் கருதி யாரும் தொழிற் சங்கம் நிறுவலாம். அது பற்றி புகார் செய்ய முடியாது. ஆயினும் தொழிற் சங்கத்தின் பெயரால் நாட்டிலே பிளவு ஏற்படுத்தவும், மக்களின் ஒரு பகுதியினரை மற்ெருரு பகுதியினருக்கு எதிராகத் தூண்டிவிடவும் இடமளித்துப் பார்த்து கொண்டிருக்க முடியாது அத்தகைய ஒன்றுதான் தமிழரசுத் தொழிற் சங்கம் என்பது தெளிவு.

இந்த நடவடிக்கை எடுத்ததற்கான இரு காரணங்களைத் தொழிற் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகம் சுட்டிக் காட்டியுள்ளார். இக் கூட்டத்தில் அவர் கூறியதாவது:—

“தோட்டத் தமிழ் தொழிலாளருக்குப் பதிலாக இலங்கைத் தொழிலாளர் என்று கூறப்படுபவர்களை வேலைக்கமர்த்த அரசாங்கம் முயற்சி செய்வது முதலாவது காரணமாகும். தமிழ்த் தொழிலாளரிடையே வேலையின்மை ஏற்பட்டுள்ளது. அவர்களின் தொழிலை வேறு நபர்களுக்கு கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்வதின் விளைவாக அவர்களின் வேலையில்லாத் திண்டாட்டமென்மேலும் அதிகரிக்கக் கூடும்.

இரண்டாவது காரணம் தமிழ்த் தொழிலாளரின் பிள்ளைகளுக்குச் சிங்களம் மூலம் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்று தேசியக் கல்விக் கமிஷன் சிபார்சு செய்திருப்பது தான். தாய் மொழி மூலம் கல்வி பயிலுவது ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.”

திரு. செல்வநாயகத்தின் இக்கூற்றிலிருந்து எதற்காகத்தமிழரசார் தொழிற் சங்கம் அமைக்கிருர்களென்பது தெளிவாகிறது.

தோட்டங்களில் இலங்கையருக்கு வேலை கொடுப்பதென அரசாங்கம் முடிவு செய்திருப்பது இந் நாட்டிலே பிறந்து இந் நாட்டிலே இறக்கப் போகும் இந்நாட்டு மக்களுக்கு நியாயம் வழங்குவதற்காகவேயன்றி, யாருக்கும் அநீதி இழைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனல்ல.

தோட்டங்களைப் பொறுத்த வரையில் இதுவரை இந்நாட்டு மக்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை. அவர்கள் பல்லாயிரக் கணக்கில் வேலையின்றிக் கஷ்டப்படும் போது, அவர்களுக்குரிய தோட்டத் தொழில்கள் இந்தியத் தமிழ்த் தொழிலாளருக்குக் கொடுக்கப்பட்டன.

இந்த அநீதியை அகற்றவே அரசாங்கம் முயற்சி செய்துள்ளது. அதனுல் தற்போது தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தீமை எதுவும் ஏற்படாது.

நாடற்ற மக்கள் சுமார் 10 லட்சம் பேர் தோட்டங்களில் இருக்கின்றனர். மலைநாட்டின் தொழில்களை அவர்கள்தான் சொந்தமாக்கிக் கொண்டுள்ளனர். அவர்கள் இலங்கையர் எனக் கருதப்படா விட்டாலும், இலங்கையருக்குள்ள சகல உரிமைகளும் (வாக்குரிமையைத் தவிர) அவர்களுக்கு உண்டு.

அரசாங்கம் செய்திருப்பதெல்லாம் அவர்கள் அனுபவிக்கும் உரிமைகளில் ஒன்றை மட்டும் இந்நாட்டு மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதுதான்.

அதனைத் தமிழரசுக் கட்சி எதிர்ப்பதால் அவர்கள் சுதேசிகளின் பிறப்புரிமைகளைக் காட்டிலும் வெளிநாட்டுத் தமிழர்களின் நன்மையைத்தான் பெரிதாகக் கருதுகிருர்கள் என்பது தெளிவாகிறது.

தோட்டங்களில் தமிழர்கள் சிங்களவர்களுடனேயே வசிக்கின்றனர். தோட்டங்களைச் சுற்றி சிங்களக் கிராமங்கள் உள்ளன. அவர்களை என்றும் ஒதுக்கி வைப்பது தேசிய ஐக்கியத்தை உருவாக்கும் முயற்சிக்கு ஆபத்தையேற்படுத்தும். அந்த ஆபத்தைத் தவிர்க்கவே தோட்டப் பிள்ளைகளுக்குச் சிங்களம் மூலம் கல்வி கற்பிக்க வேண்டுமென தேசியக் கல்விக் கமிஷன் சிபார்சு செய்துள்ளதென்பதில் ஐயமில்லை.

இந்த சிபார்சை அமுல் நடத்துவதால் தோட்டத் தொழிலாளரின் உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படாது.

இன பேதத்தைக் கிளறிவிட இச் சிபார்சு தடையாயிருப்பதால்தான் தமிழரசு அதனை எதிர்க்கிறது. இன பேதத்தைக்கிளறி நாட்டை நாசமாக்குவதைத் தவிர தொழிலாளருக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணம் தமிழரசுக் கட்சிக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே இனபேத இயக்கத்திற்கு உடனே தடை விதிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

## சந்திக்கு வந்தவை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு உடந்தையாக இருந்த இன்னுமொரு பிரகஸ்பதி வெளிநாடு ஒன்றில் விபீஷண வேலை பார்த்து வயிறு வளர்க்க வெளியேறி விட்டதாம்.

இச் செயல்களினுல் கொம்யூனிசப் பிற்போக்கின் முழு உருவமும் மக்களுக்கு வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

★

மலையகத்திற்கு தமிழரசுக் கட்சியினர் சென்று தொழிற் சங்கம் நிறுவப் போகின்றனர் என்பதை அறிந்ததும் இ. தொ. கா தலைவர்களும், ஐ. தொ. கா. தலைவர்களும், ஏனைய தொழில் ஸ்தாபனங்களும் துடித்தெழுந்து குதித்து விழுந்தனர். புண்ணில் தீபட்டது போல் வெதும்பினர்.

• கடந்த வாரம் ஹட்டனில் இலங்கைத் தொழிலாளர் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்படப் போகிறது என்பதை அறிந்ததும் அவர்களுடைய ஆவேசம் கரை புரண்டோடியது. அங்குரார்பணக் கூட்டத்துக்கு ப்பிரதிநிதிகள் செல்லாது தடுப்பதற்கான முயற்சிகளும் பெருவாரியாக நடைபெற்றதாம். ஆனுல் எதுவுமே பலியாதது கண்டு விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல் தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் — ஒப்புக் கொண்டனர்.

ஞாயிற்றுக் கிழமை ஹட்டனில் நடைபெற்ற பொது கூட்டத்திற்கும் மக்களைத் தடுத்து நிறுத்தும் வகையில் வேண்டுமென்றே, கூட்டம் நடைபெறும் இடத்துக்கு மிக நெருங்கிய பகுதிகளில் காங்கிரஸ் பொதுக் கூட்டங்களைக் கூட்டி [illegible] எந்தப் பாணத்தை [illegible] யோசித்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லையாம்.

## யு. என். பி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

தலை நகரில் ஆளும்கட்சி 47 ஸ்தானங்களில் 14 ஸ்தானங்கட்குப் போட்டியிட்டு ஒரேயொரு ஸ்தானத்தை மட்டும் கைப்பற்றியதால் கட்சியின் செல்வாக்கு, புகழ் அத்தனையும் மண்ணுகிவிட்டதாக அவர்கள் கூறுகின்றனராம்.

பிரதமர் திருமதி சிறிமாவோ நான்கு கட்சிகளைக் கொண்ட யு. என். பி. எதிர்ப்பு முன்னணி அமைக்க விரும்பினுல், தானும் அதற்குச் சாதகமாகவே இருப்பதாக நீதி மந்திரி தெரிவித்தாரென்று ஒரு செய்தி கூறுகிறது.

### இடது சாரிகள் ஆதரவு

ஆனுல் இடதுசாரி வட்டாரங்கள் இது பற்றி மாறுபட்ட கருத்துகள் தெரிவித்தன.

மக்களின் துயர்களைத் துடைப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு அளவற்ற கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்தி மக்களின் அதிருப்திக்கு ஆளாகியுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் முன்னணி அமைப்பதால் தங்களுக்குள்ள செல்வாக்கும் அழிந்து விடும் என்றும், அம்மாதிரியான முன்னணி தற்போது சாத்தியமில்லையென்றும் இடதுசாரி அரசியல் வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது.

இம் மாதிரியான முன்னணியால் தற்போது எதுவும் சாதித்து விட முடியாதென்றும், மக்கள் விரும்பினுல் தேர்தல் சமயத்தில் தேர்தல் முன்னணி அமைப்பதே சாத்தியமாயிருக்கலாமென்று [illegible] அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## தமிழில் முதலில் தோன்றிய மெய்கண்டான் நாள் காட்டி

இலங்கையில் முதன் முதலாக தமிழ் நாள்காட்டி (காலண்டர்) வெளியிட்டவர் திரு. கந்தையா அவர்களாவர். 1920ம் ஆண்டு மெய்கண்டான் அச்சகத்தில் இந் நாள் காட்டி பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அன்று தொடடு இன்று வரை மெய்கண்டான் நாள் காட்டிகள் வருடாந்தம் வெளியாகி வருகின்றன.

1963ம் ஆண்டு மெய்கண்டான் நாள் காட்டிகள் பிரம்ம ஸ்ரீ இராகுநாதையர் அவர்களின் சோதிடக் குறிப்புகளும், திருமறையாம் திருக்குறள் அடிகளும் அதற்கான விளக்கங்களுமுடையனவாக விளங்குகின்றன. விசேடமான நாட்களையும், விடுமுறை நாட்களையும் குறிப்பிடும் இந்த நாள் காட்டி அழகாகவும் தெளிவாகவும் அச்சிடப்பட்டுள்ளது.

தெய்வீகப் படங்கள், அழகிய காட்சிகள், தலைவர்களின் திருவுருவங்கள் உடைய அட்டைகளுடன் நாள்காட்டிகள் இணைக்கப் பட்டுள்ளன.

### தினக் குறிப்பு

தினக் குறிப்புகள் (டயறி) முன்பெல்லாம் வெளி நாடுகளிலிருந்தே தருவிக்கப்பட்டன. ஆனுல் அவற்றை விட மேலான முறையில் உள்ளூரிலேயே அழகிய தினக்குறிப்புகள் உற்பத்தியாகும் காலம் வந்துள்ளமை மகிழ்ச்சி ஊட்டும் விடயமாகும்.

மெய்கண்டான் தினக் குறிப்புகள் பல்வேறு உருவங்களில் திகழ்கின்றன. மும்மொழிகளிலும் வெளியாவதுடன் பல அளவுகளிலும் மெய்கண்டான் தினக் குறிப்புகளுள, கையடக்கமான பிளாஸ்டிக் கவர் கொண்ட சிறு தினக் குறிப்புகள்—விடுமுறை தினங்கள், தபால் தந்தி விடயங்கள், இலங்கை நாடு பற்றிய குறிப்புகள், சுபசொப்பனங்கள்; சகுனங்கள் முதலான பல முக்கிய தகவல்களை உடையதாக அமைந்துள்ளன.

மேசை தினக் குறிப்புகள் (டெஸ்க் டயறி) அலுவலக பாவிப்பிற்கு உதவுவதாக அமைந்துள்ளன, அளவை முறைகள் பற்றிய குறிப்புகள், பிற நாட்டு நாணய மாற்றங்களும், குறிப்புகளும் உள்ளன.

இதை விட ‘பேர்’சாகவும், தினக் குறிப்பாகவும் உதவக் கூடிய வலற்’ தினக் குறிப்புகள், பெரிய‘புள்ஸ்கப்’ தினக் குறிப்புகள் முதலாக பல வேறு விதமான பிளாஸ்டிக் தினக் குறிப்புகள் ஒவ்வொருவர் தேவைக்கும் உகந்ததாக உள்ளன. இத்தனை விதமான அழகிய தினக் குறிப்புகளை தயாரித்து அளிக்கும் மெய்கண்டான் அச்சக அதிபர் திரு. இரத்தின சபாபதி அவர்களைப் பாராட்டாமலிருக்க முடியாது.

கிடைக்குமிடம்:
மெய்கண்டான் அச்சகம்,
161, செட்டியார் தெரு,
கொழும்பு.

—மதி-

## முச்சபை ‘கரோல்’ நிகழ்ச்சி

மட்டக்களபபு வாழ் கத்தோலிக்க மதத்தவர்களும், மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்தவர்களும், அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்தவர்களும் ஒன்ருகச் சேர்ந்து கிறிஸ்தோதயத்தை முன்னிட்டு நத்தார் கீதங்களை (கரோல) இசைத்ததை முதன்முதலாக காணமுடிந்தது. மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மட்டக்களப்பு புளியடிக்குடா பஸ்டுக் குருவானவர் வணக்கத்திற்குரிய ஏ, செலர் தலைமை தாங்கிஞர்.

மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தரக் கல்விக் கழக உப அதிபர் செல்வி ஆர். எஸ். கனகரத்ன தான் இக்குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

ஆயிரக்கணக்கான மக்கள் இவ்விழாவில் பங்குபற்றினுர்கள்.

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்,
14, டாம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டிக் கதை 10

# மாலினி

—கொழும்புத் தேவன்—

விடிந்தால் திருமணம். வீட்டிலிருக்க வேண்டிய மணமக்கள் நடுச்சாம நேரத்தில் தெரு வோரக் கானில் யாழ்ப்பாணக் கச்சேரிமுன்…………

"வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ?" மாலினி எப்படி அதற்கு விதிவிலக்காக அமைய முடியும்.

"மானம் காக்க என் வயிற்றிலுதித்த வீர மைந்தனையா 'போரில் புறமுதுகு காட்டி ஓடினான்' என்று சொன்னாய் பேடி. என் கையில் வாளிருந்தால் இந்தக்கணமே உன் நாவைத் துண்டித்திருப்பேன். இல்லாததால் தப்பிப் பிழைத்தாய் போ. வீரப் பாலூண்டு வளர்ந்த என் மகன் முதுகிலே காயம் பட்டு மடிந்திருந்தால் அவனுக்கு பாலூட்டிய எனது இரு தனங்களையும் அறுத்தெறிந்து 'பாரடா மகனே பார் உன் கோழைத்தனத்தால் உனக்குப் பாலூட்டிய தனங்கள் என் மார்பிலே இருக்க வெட்கப்படுவதைப் பார்' என்று கூறி வெட்டி எறிவேன்" என்ற வண்ணம் மறக்களம் புகுந்த மறவர் குல மறத்தி யொருத்தியின் வீர வரலாற்றை ஞாபகப் படுத்திக் கொண்டிருந்தனர் மாதர்கள். தொன்று தொட்டுத் தொடர்ந்து வந்த வீரம் இல்லாமற் போய் விடவில்லை என்பதை உணர்த்திக் கொண்டிருந்தது மாதர் சத்தியாக்கிரகம்.

'கணீர்' என்றொரு வெண்கலக் குரல். பழக்கமான குரல், நடுச்சாம நேரம் அமைதியைக் கிழித்துக் கொண்டு கந்தையாவின் காதுகளில் ஊடுருவிப் பாய்ந்தது. அக் குரல் வந்த திசையில் பார்வையைச் செலுத்தினான். மயிர் சிலிர்த்தது; உடல் புல்லரித்தது; மகுடி ராகத்தைக்கேட்டு மயங்கிய நாகம் போல் தயங்கி நின்றான்.

"விடுதலை! விடுதலை! விடுதலை"

அமரகவி பாரதியின் அருமையான பாடல்.

அமைதியாகப் பாடிக் கொண்டிருந்தாள், கந்தையாவின் முறைப் பெண்ணான மாலினி. தொண்டரோடு தொண்டராக, மாதரோடு மாதராக, தியாகிகளோடு தியாகிகளாக, சத்தியாக்கிரகிகளோடு சத்தியாக்கிரகியாக ஈடுபட்டிருந்த மாலினி பாடிக் கொண்டே இருந்தாள்.

அவனது வருங்கால மனைவி சத்தியாக்கிரகத்தில் குதித்து விட்டாள், கேவலம் ஒரு பெண். அவனோ? ஒரு ஆண் மகன், வாலிபன். அரசாங்க உத்தியோகமென்ற சங்கிலியால் கைகளும் கால்களும் கட்டிப் போடப்பட்ட நிலையில் ஊமையற்றவனாக இருந்தும் பேசமுடியாதவனாக, உடல் வலிமை இருந்தும் உபயோகமற்றவனாக, உணர்ச்சியிருந்தும் உள்ளடக்கியவனாக, உன்மத்த நிலையில் நின்றான் நின்றான், இருந்தான், பின் நின்றான். அவனால் போர்க்களத்தில் செய்ய முடிந்ததெல்லாம் கண்ணீர், கண்ணீர், கண்ணீர்.

கதிர்காமக் கந்தன் முன் மாத்திரமல்லாமல் இன்னும் பல கோவில்களில் பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் பாடும் போது பக்தர்கள் மாத்திரமல்லாது கேட்டு நிற்பவர்களும் கண்ணீர் விடத்தான் செய்கின்றனர். அந்நிலை, யாழ்ப்பாணத்தில், கேவலம் ஒரு அரசாங்க காரியாலயமாகிய கச்சேரி முன் அவனுக்கு ஏற்படும் என்று அவன் ஒருபோதும் கருதியிருக்க மாட்டான்.

கண்ணீரைக் கைக் குட்டையால் துடைத்த வண்ணம் மாலினியைப் பார்த்தான். அவளும் அவனைப் பார்த்தாள். பார்த்தவள், பார்த்தும் பார்க்காதது போல, பெண் சத்தியாக்கிரகிகளுக்குத் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவள் கவனமெல்லாம் சக சத்தியாக்கிரகிகளின் மேல், அவன் கவனம் முழுவதும் அவள் மேல். அவள் முகத்தில் கடந்த கால நிகழ்ச்சிகளைத் திரையிட்டுக் கண்டு களிக்கும் பொருட்டு மனக் குரங்கு பின்னோக்கித் தாவியது.

கந்தையா ஐந்தாவது வயதைத் தாண்டி ஆறாவது வயதில் சாலடி எடுத்து வைத்த சமயம். 'அட கந்தையா, உனக்கும் ஒருத்தி இந்த உலகத்தில் பிறந்து விட்டாளடா'' எங்கிருந்தோ வீட்டிற்குத்திரும்பிய அவன் தந்தை தமாஷ் செய்த வண்ணம் தன் சகதர்மிணிக்குச் செய்தியைத் தெரிவிக்க, கந்தையாவைத் தோள் மேல் தூக்கிப் போட்டுக் கொண்டு தன் சகோதரன் வீடு நோக்கி விரைந்தாள். "அடே பயலே, உனக்குப் பெண்டாட்டி பிறந்திருக்காளடா, உனக்குப் பெண் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறோம்'' மாமியார் வீடு போய்ச் சேரும் வரை, அம்மா அவன் கன்னங்களைக் கிள்ளி விளையாட்டுக் கதைகள் சொல்லியதையும், அப்பா 'ஆமாம்' போட்டபடி சிரித்துக் கொண்டே தொடர்ந்ததையும் மனத்திரையில் ஓடவிட்டபோது அவனுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

பத்து வருடங்கள் கழித்து கந்தையா சிரேஷ்ட வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது, மாலினிக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் வேலையும் அவனுடையதாயிற்று. வேறு யார் பாடம் சொல்லித் தந்தாலும் கவனம் செலுத்த மாட்டாள். அதனால், உரியவனிடமே பொறுப்பை விட்டு விடலாமென்று மாலினியின் தந்தை கருதினார் போலும்; கந்தையாவிடம் "மாலினி உன் பொறுப்பு. படித்தாலும் படியாவிட்டாலும், லாபமும் நட்டமும் உன்னோடு தான்'' என்றார். அது புரியாதா அவனுக்கு? கடைக் கண்ணால் பார்த்தான் மாலினியை. ஒன்றும் புரியாத அவள் சிரித்தாள்.

பள்ளிப் படிப்பை விட அவள் கவனம் முழுவதும் இந்திய சுதந்திரப் போராட்டக் கதைகளில் ஈடுபட்டிருந்ததை அவன் கவனிக்கத் தவறவில்லை. "அத்தான், நேதாஜீ இறந்திருப்பார் என்று என்னால் நம்ப முடியவில்லை'' என்பாள். "அகிம்சையில் தான் உண்மையான வீரம் இருக்கிறது'' என்பாள் [illegible]

அமரகவி பாரதியாரின் விடுதலைப் பாடல்களை அவள் பாடும் போது கைகால்கள் வீராவேசத்தோடு ஆட்டம் போடத் தொடங்கிவிடும். 'விடுதலை விடுதலை விடுதலை' என்ற பாடலைப் பாடும் போது முகத்தில் வீர உணர்ச்சிகள் தோன்றி மறையும், கந்தையா அதைக் கவனிப்பதை அறிந்ததும் முகத்தைப் பொத்திக் கொள்வாள். இயற்கையான நாணம் இடம் பெற்றுவிடும்.

கந்தையா அரசாங்க லிகிதர் பரீட்சையில் தேறியதும் மாலினியிடம் ஓடிப்போய்த் தெரிவித்தான். "அரசாங்க அடிமையாகப் போகிறீர்களா? கேவலம் ஒரு அடிமையைப்போய் விவாகம்செய்து கொள்வேன் என்று எதிர் பார்க்கிறீர்களா?" என்றாள் கேலியாக.

ஆனால், உண்மையில் அவள் அப்படிச் செய்வாளென்றோ ஏமாற்றி விடுவாளென்றோ அவன் எதிர்பார்க்கவில்லை, அவன் எதிர்பார்த்தபடியே பெரியோர்களால் திருமணத்திற்கு நாளும் நிச்சயிக்கப்பட்டது. விடிந்தால் திருமணம். வீட்டிலிருக்க வேண்டிய மணமக்கள் தருவோரக் கானில், யாழ்ப்பாணக் கச்சேரி முன்.

"ஐயா, கொஞ்சம் விலகி நிற்கிறீர்களா?" தொண்டர் ஒருவர் புன்முறுவலுடன், பொது மக்களுடன் வரிசையாக நின்ற கந்தையாவிடம் கூறினார். பழைய நினைவுகள் கலையப் பெற்ற கந்தையா மாலினியைப் பார்த்தான். அவள் பாடிக் கொண்டேயிருந்தாள். நேரம் இரவு இரண்டு மணிக்கு மேலாகியிருந்தது. சத்தியாக்கிரகிகள் தூக்கத்தை மறந்தவராக சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தனர். தனக்குரியவளை விட்டுப் பிரிய மனமில்லாத கந்தையா எப்படிப் போவான்? பார்த்துக் கொண்டே நின்றான், இருந்தான், நின்றான். அவள் அவதரித்த நாள்முதலாய்க் காத்திருந்தவனாயிற்றே!


இராணுவத்தினர் ஜீப்களிலும், லொறிகளிலும் எங்கிருந்தோ வந்து குவித்தனர். ஆட்சி எங்கள் கைகளுக்கு மாறி விட்டது என்பது போலிருந்தது அவர்கள் பார்த்த பார்வையும் அவர்களது போக்கும். "வாழ்க தமிழ்'' சத்தியாக்கிரகிகளின் போர் முரசு வானைப் பிளந்தது மிகுந்த சிரமத்தின் பேரில் ராணுவத்தினர் மாதர்களை லொறியில் ஏற்றிக் கொண்டிருந்தனர். அதற்குள் கந்தையாவைத் தெரிந்த ராணுவ வீரன் ஒருவன் "என்ன சேர் நீங்களுமா?''

"வேடிக்கை பார்க்கத் தான்'' சமாளித்துக் கொண்டான் கந்தையா. அவன் காதருகில் மாலினியைப் பற்றி ஏதோ கூறினான் கந்தையா. அவ்வளவு தான் அவளை மாத்திரம் விட்டு மற்றவர்களனைவரையும் ராணுவத்தினர் லொறியில் ஏற்றினர். மாலினியின் கையைப் பற்றி நின்ற கந்தையாவை அவ்விடம் விட்டகலுமாறு கண்சாடை காட்டினான் அவன் நண்பன் ராணுவத் தலைவன். மாலினி நகர மறுத்து விட்டாள். "என்னையும் கொண்டு செல்லுங்கள்'' ஆவேசம் வந்தவளாகக் கத்தினாள். அவள் வாயைப் பொத்தினான் கந்தையா.

திமிறினாள், திமிறிக் கையை விடுவித்துக் கொண்டவள் பெண் புலியானாள், அடுத்த கணம் நகர்ந்து கொண்டிருந்த ராணுவ லொறி ஒன்றின் முன் பாய்ந்தாள். 'மாலினி'! தொண்டை கிழியக்கத்தினான் கந்தையா.

அடிபட்டு வீழ்ந்து கிடந்த மாலினியைத் தூக்கித் தன் மடி மீது கிடத்தினான் கந்தையா. அவள் ஆவி பிரிந்து கொண்டிருந்தது. அவனது நண்பன் ராணுவ வீரன் தான் வைத்திருந்த தண்ணீர்ப் போத்தலைக் கொடுத்துதவுகிறான். தண்ணீர் பருக அவள் மறுத்து விட்டாள். "விடுதலை விடுதலை'' இறுதி மூச்சுடனும் புன்சிரிப்புடன் அவள் வாய் வழியாக வெளியேறிய வார்த்தைகள் அவன் இதயத்தில் அழியா இடம் பெற்றன.

[யாவும் கற்பனை]



ராஜ பீடி ஸ்பெஷல்
இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்
ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.
டெலிபோன் : 2739

## சங்கப் பலகை

### இந்து இளைஞன் வெள்ளி விழா

வெளியீடு: யாழ். இந்துக் கல்லூரி மாணவர்.

பிரசுரம்: சைவப் பிரகாச அச்சியந்திர சாலை.

யாழ். இந்துக் கல்லூரி மாணவர் வெளியீடான 'இந்து இளைஞன்' சஞ்சிகையின் வெள்ளி விழா மலர் கவினுறு அழகுடன், கண்ணுக்குக் கவர்ச்சியாக அமைந்துள்ளது. அழகான அட்டை அந்நூலை அலங்கரித்து, அழகுக்கு அழகூட்டுகிறது.

வெள்ளி விழா மலரை வெளியிடும் சமயத்தில், கல்லூரியின் அதிபரும், கல்லூரியின் தூண்களென விளங்கிய சில ஆசிரியர்களும் ஓய்வு பெற்றிருக்கிறார்களென்பது, ஒரு பக்கத்தில் மாணவர்களுக்கும், சக ஆசிரியர்களுக்கும் வருத்தத்தை அளித்தாலும், மறு பக்கத்தில் அவர்களின் படங்களுடன், அன்னார் கல்லூரிக்கு ஆற்றிய அரிய சேவைகளும் வெள்ளி விழா மலரில் இடம் பெற்று, மலருக்கு விசேஷ மதிப்பையும், சிறப்பையும் அளிக்கின்றன என்பது அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்காமலும் இருக்க முடியாது.

'இந்து இளைஞன்' முதன் முறையாக அச்சில் வெளியிடப்பட்டது, அண்மையில் ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர் திரு. வி. எம். ஆசைப்பிள்ளை அவர்களின் முயற்சியாலேயே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

'இந்து இளைஞ'னின் பழைய ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலையும், அவர்களின் சிலரிடமிருந்து வாழ்த்துப் பத்திரங்களையும் வெளியிட்டிருப்பது போற்றத் தக்க முயற்சி.

கல்லூரியின் சகல துறைகள், நடவடிக்கைகள் பற்றியும் விபரமான குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

மாணவர்களின் கட்டுரைகளும், கவிதைகளும் தரமாக அமைந்துள்ளன.

இந்நூலின் ஆங்கிலப் பகுதித் தலையங்கத்தில், கல்லூரிக்குத் தமது வாழ்நாளையே அர்ப்பணித்த சில ஆசிரியர்கள் ஓய்வு பெற்றமை பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அதனால் தலையங்கம் நிறைவு பெறாமல் நின்று விடுகிறது. இந்தத் தவற்றைத் தமிழ்ப் பகுதித் தலையங்கமும் செய்யாது விட்டது, நூலின் தலையங்கப் பகுதியின் கௌரவத்தை ஓரளவு காப்பாற்றி விட்டதெனலாம்.

இந்த வெள்ளி விழா மலரை வெளியிடுவதில் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் எத்தகைய உற்சாகத்துடனும், சக்தியுடனும் உழைத்துள்ளார்கள் என்பதை, மலரின் இதழ்களினூடே காணப்படும் விடயங்கள் ஒவ்வொன்றும் பறைசாற்றுகின்றன. அவர்களுக்கு எமது பாராட்டுகள்.

—மாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தடுப்புக் காவலில் நாம்' 21.



# அன்பு மகள் அன்பரசிக்கு,

தடுப்புக் காவல் நிலையம்,
பனாகொடை,
ஹோமகம.
*12—6—1961*

மகளே அன்பரசி!

அடிக்கடி மடல் எழுதி வந்த யான், இடையில் பதின்மூன்று நாட்கள் எழுத முடியாததாகி விட்டது. யான் என்ன செய்ய? ஏன், என்ன காரணம் என அறிய விருப்பப்படுவாய் தானே! தினமும் மாலையில் ஒரு மணித்தியாலம் கீழிறங்கி விளையாடலாம் அல்லது உலாவலாம் அல்லவா? யான் தினமும் கைப்பந்தாட்டம் ஆடுவது வழக்கம். ஒரு நாள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பக்கம், மற்றவர்கள் ஒரு பக்கமாகப் பிரிந்து கைப் பந்தாட்டாம் ஆடினோம். ஒரே ஆரவாரத்திடையில் விளையாடிக் கொண்டிருக்கும் போது, உயரே வந்த பந்தைத் துள்ளிக் கையை உயர்த்தி அடித்தேன். படார் என வலக் கைத் தோட்பட்டையுற் பிடித்துக் கொண்டது. அதாவது ஒன்றுமே செய்ய முடியாத உழைவு, நோ. இத் தோட்பட்டையில், சத்தியாக்கிரக ஆரம்ப நாட்களில் பொலிசாரின் குண்டாந்தடி விளையாடியதல்லவா? அந்த நோவை மாற்றியிருந்தும் எலும்பு ஆனதால் திரும்பவும், அதில் ஏதாவது வேக மேற்பட்டதும் இந்த நிலை ஏற்பட்டு விட்டது.

அன்று...! அதாவது மாசி இருபதாம் தேதி...! — நினைவுத் திரையில் வருகின்றத. என் தோள்பட்டையில் அடிபட்ட காட்சி ...... மக்களின் எழுச்சி... யாழ்ப்பாணம் மட்டுமல்ல, முழுஈழத்திலும் ஏற்படுத்தப்பட்ட கொந்தளிப்பு... அன்பு! யாழ்ப்பாணக் கச்சேரி வாயில் இரத்தம் சொரிந்த அன்று, அறப்போரின் அச்சாரம் அம்மா!

அன்று...!

அதிகாலை எழுந்தேன். கச்சேரியடியை அடைந்தேன். எழுச்சிக் குரல் எழுப்பியபடி தமிழ் அரசுத் தொண்டர்கள் ஊர்வலமாக, தந்தை செல்வநாயகம் அவர்கள் தலைமையில்போகின்றார்கள். பொலிஸ் ஜீப் அங்கும் இங்கும் வேக ஓட்டம் செய்கின்றது.

"எங்கள் மொழி தமிழ் மொழி......" "உயிரைக் கொடுத்தும் உரிமை பெறுவோம்..." "போர் போர் அறப்போர்..." "இப் படை தோற்கின் எப்படை வெல்லும்..." இப்படிக் கோஷமிட்டபடி ஊர்வலம் கச்சேரியடியை அடைந்தது. கச்சேரி நிறையப் பொலிசார் குழுமி நின்றனர். தெருவெங்கும் பொலிசார் நடமாட்டம் செய்தனர்.

வாயில்களில் தொண்டர்கள் உட்கார்ந்தனர். கச்சேரி பிரதான வாயிலில் தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம், துரைரத்தினம், பிரான்சிஸ் பெரேரா ஆகியோரும் தொண்டர்களும் குழுமி இருந்தனர். அடுத்த வாயிலில் டாக்டர் நாகநாதன், உடுவில் தர்மலிங்கம் ஆகியோருடன் தொண்டர்கள் குழுமியிருந்தனர். எதிரே மக்கள் கூட்டம். இக்காட்சியைப் பார்த்தபடி உணர்ச்சி வயப்பட்டு நிற்கின்றது. ஒன்பது மணியை நேரம் நெருங்குகின்றது......

கச்சேரி ஊழியர்கள் வருகின்றார்கள்......

அவர்கள் எப்படி உள்ளே நுழைவது? எந்த வாயிலாக போகமுடியும்? வாயில்களில் அவர்களின் சகோதரர்கள்! அறப் போர் வீரர்களை எப்படிக் கடப்பது...?

எனவே, ஊழியர்களில் பலர், மனித நெறி தெரிந்த மனம் கொண்ட பலர் கூட்டமாக எதிரே நிற்கின்றனர்.

### புதுமை லோலன்

ஒரு ஊழியர் உள்ளே போக முயல்கின்றார். அவரா?...... ஈனத்தனமே செய்யும் கம்யூனிஸ்ட் அனுதாபியாம்... உடனே போலீஸ் அதிகாரி வழி கொடுக்க முனைகின்றார். போக ஊழியர் இடம் கேட்டால், வழி கொடுக்க வேண்டியது பொலிசாரின் கடமை தான்—

ஆனால் போக முனையும் உத்தியோகத்தரா? அதோ அவ்வதனம்... தமிழ்ப் பெற்றோர் மறந்து பெற்ற பிள்ளை காட்டிக் கொடுக்கும் துரோகிக் கூட்டத்தில் ஒரு மகன், உத்தியோக உயர்வும் பணமும் போதும் என எண்ணி விட்ட விபச்சாரி போன்றவன்,— தமிழினத்தில் உருவாய கறைகளில் ஒன்று...! —ஐயகோ யாழ்ப்பாணமே! இவனையுமா உன் மண் பெற்றது! இவனையுமா ஒரு தாய் பத்துமாதம் வருந்திப் பெற்றாள்! அவமானம்! அவமானம்!

அந்த ஈனப்பிறவி, அறப் போர் வீரர் முன், நீண்ட காற்சட்டையுள் கையை விட்டபடி உள் நுழையக் காத்திருக்கின்றது.

தொண்டர்களைத் தூக்கிப் பொலிசார் எறிகின்றனர். இரண்டு பொலிசார் சேர்ந்து ஒரு தொண்டனைத் தலையிலும் காலிலும் பிடித்து எறிகின்றனர். பந்தைச் சுவரில் எறிந்தால் எப்படி அதே வேகமுடன் திரும்பிவருமோ அதே போன்று வெகு வேகமாகத் தொண்டர்கள் மெய் வருத்தம் பாராது உரிய இடத்தை அடைகின்றனர். பொலிசாருக்கு அதிக வேலை கொடுத்தவர், நீர்கொழும்பு தந்த உணர்ச்சி வீரன் பிரான்சிஸ் பெரேரர அவர்களே.

பிரான்சிஸ் பெரேராவின் உடைகள் கிழிகின்றன. பொலிசார் ஓயாது தூக்கி வீசுகின்றனர். பெரேராவின் உடல் உடைகிறது, வருத்தமடைகின்றது. ஆனால் பிரான்சிஸ் பெரோரா வெகு வேகமாக உரிய இடத்தை அடைகின்றார். பார்வையாளர் கண்கள் அனல்கக்குகின்றன. ஏ...! பொலிசே! பெரேரா மேல் கை வையாதே... என்ற குரல் ஒலி!

அறப் போர் சூடு பிடிக்கின்றது.

அறப்போர் தொடங்க [illegible] டேன்.

ஆரம்பத்தில் வேண்டாம் நாள் வரும் என்றார்,

ஆகையால் யான் அறப் போர் வீரருக்கு உதவி செய்து கொண்டு நின்றேன். அறப்போர் வீரருக்குத் தேநீர் கொடுத்தபடி, கச்சேரியடிச் சந்தி பிரியும் வாயிலடியில் நிற்கின்றேன். தொண்டர்கள் யான் கொடுக்கும் தேநீர் பருகுகின்றனர்.

உள்ளே பார்த்தேன். பொலிசாரை ஒன்றாக வைத்து, பொலிஸ் அதிபர் ஏதோ கூறுகின்றார். ஒரு ஜீப் வண்டி உள்ளிருந்து புறப்பட்டு, நான் நின்ற-தொண்டர்களிருந்த வாயிலடியை நோக்கி வருகின்றது.

ஜீப்பினுள் தெரிந்த முகம் ஒன்று கண்டேன். அவரா...?

கடவுள் பக்தர்.........மத காவலர்...... தமிழறிஞர்...... மொழியில் நீங்காத பற்றுக் கொண்ட அண்ணல்......... என்று மேடைகளில் இவரை அறிமுகம் செய்ய, அதே மேடையில் நான் இருந்து கேட்டிருக்கிறேன். அதே அவரா......? அறப்போரைக் குலைக்க, மொழிப் போரைக் குலைக்கக் காரண கருத்தா...

அந்த அவரை ஸ்ரீகாந்தா என்பர். அரசாங்க அதிபர் அவர். "நீதிஸ்தலம் போக வேண்டுமாம், அரசாங்க அதிபர் போகாது விடலாமா...? ம் ம்! பொலிசாருக்குச் சந்தர்ப்பம் கொடுக்க ஒரு ஆட்டக்காய் ஆகின்றார் ஸ்ரீகாந்தா அவர்கள். கொஞ்சம் முன்பு அடுத்த வாயிலில், உள் நுழைய முனைந்து முடியாது போனஊழியரின் பண்புக்கு எங்கள் 'தமிழபிமானி' அரசாங்க அதிபருமா......"? என்னாச்சரியம்!

ஜீப் உறுமியபடி தொண்டரின் பின்னே.........!

தொண்டர்களைப் பார்க்கின்றேன். அவர்கள் முகங்களைப் பார்க்கின்றேன். எல்லார் முகங்களிலும் ஒளி...... அச்சம் அற்ற முறுவல்......!!

அதோ இரும்பு மனிசன் நாகநாதன்....... அச்சமற்ற அடலேறு அமிர்தலிங்கம்.... உறுதி கொண்ட தர்மலிங்கம்.... துயர் கண்டு அஞ்சாத துரைரத்தினம்,......ஜீப் உறுமுகின்றது.

'ஜீப் போக விடுங்கள்' பொலிஸ் அதிபர் கூறினார்,

அறப்போர் வீரர் மௌனமாக இருக்கின்றனர். எங்கள் மேல் ஜீப்போனாலும் அசைய மாட்டோம் என்று உறுதியுடன், இன்னும் நெருங்கி உட்கார்ந்து கொண்டனர்

அவ்வயமம்!

படார், சடார், படார், சடார்......குண்டாந்தடியின் ஓசை! தொண்டர்களின் உடல்களில் அடி, குத்து, மிதி ......தொண்டர்கள் படுத்தபடி உள்ளனர் பொலிசா சாரின் சப்பாத்துக் கால்கள், தொண்டர்களை முத்தமிடுகின்றன.

இரத்தம் சிந்துகிறது' தொண்டர்களின் உடைகள் செந்நிறமாகி, புரட்சிக் கொடியாகி விட்டன.

ஜீப் முன்னேறுகின்றது. அதோ ஒருசில்லினுள் பழனி என்ற வாலிபன் அடுத்த சில்லினுள் அமிர்தலிங்கம், துரைரத்தினம்... ஒரு கணம் சென்றால்......!

ஜீப் உறுமுகின்றது. அந்த ஜீப்பின், உள்ளே,... ஆமாம்! 'தமிழபிமானி'.........? இந்த நேரம் தெருவின் அடுத்த கரையில் நின்ற மக்கள் வெள்ளம் குரலிடுகின்றது. "அடியாதே! மிதியாதே" எனக் கோஷமிடுகின்றது....!

பார்வையாளர் அருகே போய், கத்துவதில் பிரயோசனமின்று. "வாருங்கள் நாமும் வாயிலில் படுப்போம் —ஜீப் போவதைப் பார்ப்போம்......" என அழைத்தேன்.

ஓடிப் போய் நானும் ஜீப் முன்னே படுத்தேன்; உணர்ச்சியின் அந்தத்திலிருந்தேன். என்னருகே கைகோர்த்தபடி தமிழன் பாசறை அருணாசலம், அடுத்து டாக்டர் நாகநாதன். நாகநாதன் உடம்பில் பட்ட பொலிஸ் தடி முறிந்து வீழ்கின்றது. இரும்பு மரத்தை உடைத்தது!

கற்கள் பாய்கின்றன. பார்வையாளரை நோக்கிப் பொலிசார் எறிந்த கற்கள் பாய்கின்றன.

படுத்தோமா?......!

பொலிசார் மத்தியில் அளவுக்கதிகமான ஆத்திர உணர்வு. எங்கள் தொண்டரின் உறுதிகண்டு. நெருக்கு கொண்ட ஆத்திரம்......!

அடி...... அடி...... மிதி...... துவையல் நடக்கின்றது.

(12-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் குரல்

## தமிழ்ப் பெரியாருக்கு ஆங்கிலத்திலா அஞ்சலி?

16-12-62 ஞாயிற்றுக் கிழமை சைவப் பெருமகனும், முத்தமிழின் நற்காவலனும், சீர்திருத்தவாதியுமான பெரியார் திரு. க. கனகரத்தினம் அவர்களின் மறைவையொட்டி கொழும்பு விவேகானந்த சபை கொழும்புத் தமிழ்ச் சங்கம், வெள்ளவத்தை சைவமங்கையர்கழகம், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, வெள்ளவத்தை நாடக உடற்பயிற்சிக் கழகம், வெள்ளவத்தை இசைக் கலை மன்றம் ஆகிய போற்றற்கரிய மன்றங்கள் தீந்தமிழிலே விளம்பரத்தாள்களை விநியோகம் செய்து அன்னாருக்கு-சைவப் பெருமகனுக்கு, முத்தமிழின் நற்காவலனுக்கு, சீர்திருத்தவாதிக்கு அஞ்சலி செய்ய பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திற்கு எம்மையெல்லாம் அறைகூவி அழைத்திருந்தார்கள்.

ஆங்கிலம் தெரிந்தவன் தான் அன்னாருக்கு அஞ்சலி செய்யலாம் என அறிவித்தல் கொடுத்திருந்தால் என் போன்றவர்கள் அங்கு சென்றிருக்கமாட்டார்கள். முத்தமிழின் நற்காவலனும், சைவப் பெருமகனுமான பெரியார் திரு. க. கனகரத்தினம் அவர்களுக்கு முத்தமிழிலேயே-அவர் கடைப்பிடித்த மொழியிலேயே-எம் வீட்டிலிருந்தே அஞ்சலி செய்திருப்போம்.

தமிழ் நாமம் கொண்ட-தற்போது நம்மிடையே பெரியார்கள் எனப் போற்றப்படும்—சிலர், அன்னாரின் குணாதிசயங்களைத் தமிழிலேயே எடுத்து வைத்து எங்கள் மனதில் அவரின் அரிய சேவைகளைப் பதியவைப்பர் என்ற நம்பிக்கையுடன் சென்ற எமக்கு-ஆங்கிலப் பேச்சினால்-ஏமாற்றந் தான் கிடைத்தது.

நல்ல சொற்பொழிவாளர்களின் புகழேணியில் நிற்பவர்களின் பேச்சை ஆங்கிலத்தில்தான் கேட்கமுடிந்தது. மேடையில் அமர்ந்திருக்கத் தகுதியற்றவர்கள் என்ற நோக்கத்தோடோ என்னவோ பார்வையாளர்கள் மத்தியில் இருந்து சென்ற-மேடையில் அமராத-ஒரு சிலர் தமிழில் பேசியிராவிடில், எங்கள் சிங்களச் சகோதரர் ஒருவர் சிங்கள மொழியில் பேசியது நினைவுக் கூட்டம் நடத்தியவர்களுக்கு மட்டுமல்ல தமிழுக்காக உழைத்த பெரியார் கனகரத்தினத்துக்குமே அவமரியாதையாக இருந்திருக்கும்.

தமிழுக்காகத் தன்னையே தியாகம் செய்த உத்தமருக்கு ஆங்கிலத்தில் அஞ்சலி செய்கிறார்கள் இவ் அஞ்சலியைக் கேட்டே அன்னாரின் மனம் குமுறும். இன்று அவர் எம்முன் நிலையில் இருந்திருந்தால் நஞ்சு இல்லாத அவர் நெஞ்சம் கொந்தளித்திருக்கும்.

வளர வேண்டிய, வாழ வேண்டிய தமிழ் ஒரு சிலரால் தனது ஸ்தானத்தை இழந்து தேய்ந்து போவதை நினைக்கும் பொழுது-பார்க்கும் போழ்து என் நெஞ்சம் சதறுகிறது.

—[illegible]

வெள்ளவத்தை.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா 174, SEA STREET, COLOMBO

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு


தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



வெஞ்சிறையில் புகுந்து வதைபட நேர்ந்தாலும் நெஞ்சிலே நீயன்றி வேறெவர்க்கும் இட முண்டோ? எதையும் தாங்கும் இதயமிருந்தால்தான் நாம் எத்தகைய துன்பம் வந்தாலும் அவற்றைத் தூள் தூளாக்கி முன்னேறலாம் என்று எஸ் எஸ். ஆர். விஜயகுமாரிக்கு தைரியம் கூறுகிறார் போலும். படம்: எதையும் தாங்கும் இதயம்.

# வெண்திரையில் வேதநாயகன்

சினிமா விமர்சனம்

# ராஜாதி ராஜன்

## (KING OF KINGS)

மானிலத்தை உய்விக்க வந்த மகான் இயேசு பெருமானின் திவ்விய சரிதையை தத்ரூபமாக வெண்திரையிலே காண்பதற்கான வாய்ப்பை அளித்த சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தாருக்கு முதன் முதலில் ரசிகர்களின் சார்பில் பாராட்டுக்களை அளிக்க வேண்டியிருக்கிறது.

இயேசுவின் பெருமையை அறியாதவர்கள் உலகத்தில் இல்லை என்றே சொல்லலாம். சிலுவையின் சிறப்பையும், அதன் சீரிய பாதையையும் உற்று நோக்கி, அதற்கு வணக்கம் செலுத்தாதவர்கள் எவருமே இல்லை எனலாம். கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றாதவர்கள் கூட கிறிஸ்துவிற்குத் தலை வணங்கத்தான் செய்வர்.

ஹாலிவூட்டின் திரைப் படத் துறையில் புதுமைகளைப் புகுத்தும் ஸ்தாபனங்கள் பலவிருப்பினும், எம். ஜி. எம். ஸ்தாபனத்தாரே அதிக பணச்செலவில் தயாராகும் படங்களை உலகின் பல பாகங்களுக்கும் விநியோகிக்கின்றனர்.

சாமுவேல் பிரான்ஸ்டன் என்னும் தயாரிப்பாளரின் அரும்பெரும் முயற்சியினால் உருவாக்கப்பட்டது இப் படம். இப்படத்தின் திரைக் கதையை உருவாக்குவதற்கே பெரும் சங்கடங்கள் ஏற்பட்டனவென்று அறியப்படுகிறது. கதை வசனத்தை உருவாக்கியவர் பிரசித்தி பெற்ற எழுத்தாளரான பிலிப் யோர்டன் என்பவர். உயரிய முறையில் டைரக்ட் செய்தவர் நிக்கலஸ்ரே.

சாந்தம் தவழும் இயேசு பெருமானின் அங்க லெட்சணங்கள் பண்டையக் காலத்திலிருந்து எவ்வாறு சைத்திரீகர்கள் வர்ணித்தார்களோ அந்த இலக்கணங்களுக்கு சற்றும் பிசகு ஏற்படாத வகையில் நடிகர் ஜீப்றி ஹண்டரை இயேசுவின் பாகத்துக்குப் பொறுக்கி எடுத்துள்ளனர். தமது சாந்தம் தவழும் பார்வையினாலும், முக பாவங்களினாலும் பார்ப்பவர்களை மெய்மறக்கச் செய்து விடுகிறார்.

கன்னிமரியாளாகத் தோன்றும் சியோபான் மக்கென்னா என்ற ஐரிஷ்நடிகை உருக்கமாகவும் சிறப்பாகவும் பாத்திரத்தின் புனிதம் கெடாமல் தோன்றுகின்றார்.

ஜோன் த பப்டிஸ்டாகத் தோன்றும் ரொபேட்ரேயான் உள்ளத்தை உருக்கும் வகையில் நடித்துள்ளார். இயேசுவை முதன் முதலில் சந்திக்கும் போதும் இறுதியாகச் சந்திக்கும் போதும் அவருடைய முகத்தில் தோன்றும் பக்தியின் பிரதிபலிப்பு மிகவும் தத்ரூபமாக அமைந்து விட்டது. நடிப்பு என்று சொல்ல முடியாத வகையில் இயற்கையாகவே தோன்றுகின்றது.




ஓரியண்ட பிக்சர்சார் தயாரித்து இப்பொழுது உள்ளூர்த் திரைகளில் விருந்தளிக்கும் பம்பாய் திருடன் (பம்பாய் கா சோர்) படத்தில் அழகாக நடனமாடும் ஹெலன்.

மலைப் பிரசங்கம்படத்தில் முக்கியமானதொரு கட்டம். கதையின் ஜீவனே அந்தக் கட்டத்தில் தான் தங்கியுள்ளது எனலாம். ஆனால் இக் கட்டத்தில் ஜீப்றி ஹண்டர் பேசும் தொனி பக்தியூட்டக் கூடிய வகையில் அமையாதது ஒரு குறையே. கேட்கப்படும் கேள்விகளுக்கு அவர் கொடுக்கும் விளக்கங்கள் அரசியல் மேடைப் பேச்சுக்களைப் போல் அமைந்திருப்பது என்னமோ பொருத்தமாகவில்லை.

'பென்ஹர்' படத்தில் இயேசுவின் பாகத்தை ஏற்றவரின் முகத்தை வெளிக் காட்டாமலே விட்டு விட்டார்கள். அப்படி காண்பிக்காததனாலேயே அப்படத்தைப் பார்த்தபோது மிகுந்த பக்தி ஏற்பட்டது. அந்த அளவு பக்தி ராஜாதி ராஜனைப் பார்த்த போது ஏற்படவில்லை.

ஒவ்வொரு கிறிஸ்தவர் [illegible] த்து ரசிக்க வேண்டிய [illegible] ரியசித்திரம் ராஜாதி ராஜன்.

-நாதன்-



திரை வாழ்வில் மட்டுமல்ல, நிஜ வாழ்விலும் நாங்கள் ஒன்றாக இணைந்தவர்களே! எங்களைப் பிரிக்க இனி எந்த சக்தியாலும் முடியவே முடியாது. என்று சாவித்திரி, கணேஷ் இருவரும் இந்த 'போஸ்' கொடுத்துக் கூறுகிறார்கள். சா[illegible] பிலிம்சாரின் 'பாத காணிக்கை'யில் இருவரும் இப்படி 'டீ' கொடுக்கிறார்கள்.

## மாமியார் பெயர் போய் மருமகளின் பெயர்

சிவாஜி கணேசனின் தாயாரின் பெயரினால் ராஜாமணி பிக்சர்ஸ் நிறுவனத்தில் முக்கிய பாகஸ்தராகவிருந்து, 'பாசமலர்'ரைத் தயாரித்த நடிகர் திரு. எம். ஆர். சந்தானம், சிவாஜியின் மனைவி கமலாவின்பெயரால் வேறொரு கம்பெனியை ஆரம்பித்துள்ளார். ஒரு வங்காள நாவலைதமிழ்த் திரைப் படமாக்க முனைந்துள்ள திரு. சந்தானம் தமது படத்தை ஒரு மாத எல்லைக்குள் முடித்துவிடத் திட்டமிட்டுள்ளனராம்.

இப்படத்தில் சிவாஜி கணேசன் முக்கிய பாகத்தில் தோன்றுவார். அவருக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகவிருக்கும் நட்சத்திரம் யார் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை. பெயரிடப்படாத இச்கதைக்கு ஆரூர்தாஸ் வசனம் அமைக்கிறார். மாயவநாதன் பாடல்களை எழுத விஸ்வநாதன்—ராமமூர்த்தி இசை அமைக்கிறார்கள் மற்றும் எஸ். வி. ரங்கராவ், எம. வி. ராஜம்மா முதலியோரும் இப்படத்தில் நடிப்பர் என்று தெரிகிறது.

### பணத் தோட்டத்தில் பணச் செலவு

'பணத் தோட்டத்தை'த் தயாரிக்கும் சரவணா பிலிம்சார் அதற்காக ஏராளமான பணத்தைச் செலவு செய்கின்றனர்.

ஒரு 'நைட் கிளப்' காட்சியைப் படமாக்குவதற்கான ஒரு மேடை (செட்) அமைக்க ஒரு லட்ச ரூபாய் செலவு செய்துள்ளனராம்.

ஆங்கிலோ இந்தியர்கள் பலர் இக்காட்சியில் நடனமாட ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளனராம். இக் காட்சியில் புரட்சி நடிகர் எம்.ஜி. ஆரும் லட்சுமி ராஜ்யமும் தோன்றுகின்றனர்.

சங்கர் டைரக்ட் செய்யும் இப்படத்தில் எம். ஜி. ஆர்-ச்ரோஜா தேவி, அசோகன், நம்பியார், சுப்பையா, புதுமுகம் ஷீலாதேவி, லட்சுமி ராஜ்யம் ஆகியோர் தோன்றுகின்றனர்.

## அன்பு மகள்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது என் மேல் ஏறிய படி ஒரு பொலிசின் சப்பாத்து, என்னை தோள்பட்டையைக் குறி வைத்து அடிக்கின்றது. அது ஒரு பொலிஸ்—இருதயம் கழற்றப்பட்ட ஒரு கூடு—காக்கியுள் புகுந்த கொண்ட ஒரு 'உருவம்' ...... சாய்ந்தேன்—இரத்தம் பீறிடுகின்றது....... குப்புறப்படுத்தேன் ... கூரிய கல் நெஞ்சைப் பிளந்தது. அதனாலும் இரத்தம் பீறிடுகின்றது......!

பின்புஆஸ்பத்திரிகொண்டு செல்லப்படுகின்றேன்.அதன் பின்பு, இரத்தத்தை கச்சேரி வாயிலில் தோய்ந்த பிற்பாடு...... எங்குமே எழுச்சி, அயர்ச்சியற்ற எழுச்சி, தூங்காத தமிழன் ஆகிவிட்டான். அற போர் எழுச்சிக்கு வித்தூன்றிய அன்று, நீராக எம திரத்தம் பாய்ச்சினோமே! அதிலே உன் அப்பாவின் இரத்தச்சொட்டுகளும் கலந்தன என மகிழடா மகளே!

அந்தத் தோட்பட்டை நோ மாற ஒரு மாதத்திற்கு மேற் சென்றது. ஆனால், பந்தாட்டத்தின்போது, பழைய நோவில் வேதனை...... என்னை றையிலுள்ள வே. கயிலாய பிள்ளை எண்ணெய் இட்டு உரோஞ்சினார்.

இன்று தான் எழுதக்கூடிய அளவுக்குக் கையில் நோ குறைந்திருக்கின்றது......

சென்ற வாரத்தில் வவுனியா கதிரேசு, ஓமந்தை கிராமச் சங்கத் தலைவர் வவுனியா குலசேகரம்பிள்ளை ஆகியோர் விடுதலையடைந்தார்கள். சென்ற சனிக்கிழமை உன் சித்தப்பாவும் எனது சகோதரனுமாய ஜெய ராசசிங்கம், உன்மாமா சிவலிங்கம், எங்கள் கார்ச் சாரதி கனகரத்தினம், ஆசிரியர் அமிர்தலிங்கம், ஆசிரியர் இ. க. தியாகராசா ஆகியோர் காலையும், மற்றச் சித்தப்பாவும் என் சகோதரனுமாய குணராசா (செங்கை ஆழியான்) மாலையும் வந்து பேசிப் போனார்கள்.

அன்புயர் தந்தை,
புதுமைலோலன்.

(தொடரும்)



சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் காண்பிக்கப்படும் 'சைனா டவுண்' என்ற ஹிந்திப் படத்தில் ஷம்மி கப்பூரும், ஷகிலாவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்கள்

# உரிமைபெற உழைப்பதே எமது கடன்

## இடையூறு புரிவோரை இறுதிவரை எதிர்ப்போம்

## இலங்கை தொழிலாளர் கழக அமைப்பில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேச்சு

நாம் இன்று ஒரு புனிதமான வேலையில் ஈடுபட்டிருக்கிறோம். அநீதியான முறையில் சகல உரிமைகளும் பறிக்கப்பட்டு நிர்க்கதியாகஇருக்கும் மலையக மக்களுக்கு, அவ்வுரிமைகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதே நமது தலையாய கடன். இம் முயற்சியில் நாம் ஈடுபடும்போது மாற்றுக் கட்சிகளுடன் முட்டி மோதிக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் மலையக மக்களின் உரிமைகளைப் பறிப்பவர்களையும், உரிமைப் போருக்கு இடையூறு விளைவிப்பவர்களையும் நமது முழுப் பலம் கொண்டு எதிர்ப்போம்.

நமது கட்சியின் மலையகப் பிரவேசம் மாற்றுக் கட்சிகளுக்குச் சிம்ம சொப்பனமாகத் தோன்றுகிறது. ஆனல் உங்கள் கோலம் தாழ்ந்து வருவதைப் பார்த்தே, உங்கள் மத்தியில் வருவது என்ற முடிவிற்கு வந்தோம். மேலும் இரு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று தோட்டத் தொழிலாளரின் வேலைக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய, ஆபத்தான ஒரு மசோதாவை ஆட்சியாளர் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற உள்ளனர். இரண்டாவது மனித சுதந்திரத்திற்கு மாறான முறையில் மலையகச் சிறார்களுக்குச் சிங்கள மொழி மூலமே கல்வி புகட்ட வேண்டுமென்ற கல்விக் கமிஷனின் அறிக்கை. இக் காரணங்களே இலங்கைத் தமிழரசுக் கட்சியை உங்கள் மத்தியில் வரச்செய்துள்ளது.

இவ்வாறு சென்ற 22-ம் திகதி ஹட்டன் 'பிறின்செஸ்' தியேட்டரில் நடைபெற்ற "இலங்கைத் தொழிலாளர் கழக" அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உரை நிகழ்த்துகையில் கூறினர்.

மஸ்கேலிய, லக்சபான குறூப் தோட்டத்தைச் சேர்நத திரு. எஸ். நாராயணசாமி தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் தனது முகவுரையில் கூறியதாவது: மலையக மக்கள் இற்றைவரை பொறுப்பற்ற தலைவர்களை நம்பி ஏமாந்து போனர்கள். அவர்கள் நமக்குப் பெற்றுத் தந்ததெல்லாம் அடிமை வாழ்வே! இன்று உங்கள் மத்தியில் அடி எடுத்துவைத்திருக்கிறது இலங்கைததமிழரசுக் கட்சி. கட்சியின் கடந்த கால வாழ்வு நமக்கு நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. எனவே மலையக மக்களே! தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கு அயராது உழைப்பது உங்கள் கடன்.

### தொழிலுக்கு ஆபத்து

திரு. செல்வநாயகம் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "இலங்கைத் தொழிலாளர்" என்ற ஆட்சியாளரின் திட்டம், இப்பொழுதே மலையகத்தில் தொழில் இன்றித் தவிக்கும் மலையக மக்களை மேலும் மேலும் வேலையின்றித் தவிக்கும் நிலையை ஏற்படுத்தி விடும். மலையக மக்கள் வேறு தொழில் வாய்ப்பு அற்றவர்கள். எனவே ஆட்சியாளர் கொண்டு வரும் இம் மசோதா நடைமுறைக்கு வந்தால் மலையக மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாக நேரிடும். தோட்டங்களில் காலியாகும் இடங்கள் அனைத்தும் சிங்கள மக்களுக்கே கிடைக்கும். வருங்காலத்தில் தொழிலாளரின் பிள்ளைகள் பெரும் கஸ்டங்களை அனுபவிக்க வேண்டி வரும்.

### கல்விப் பிரச்சினை

மலைநாட்டு மக்கள் மத்தியில் வருவதற்குஉரிய இரண்டாவது காரணம்,தேசிய கல்விக் கமிஷன் சிபார்சாகும். தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளுக்குச் சிங்கள மொழி மூலமே கல்விபுகட்ட வேண்டுமென்று இக் கமிஷனின் அறிக்கை கூறுகிறது. தாய்மொழி மூலம் கல்வி பயில வேண்டுமென்பது தனி மனிதனின் பிறப்புரிமையாகும்.பெற்றோர் விரும்பினல் தமது பிள்ளைக்குத் தமிழ் மொழி மூலமே கல்வி புகட்ட வேண்டுமென்று இலங்கையில் சட்டம் ஒன்று உண்டு. ஆனல் இவையனைத்துக்கும் புறம்பாக சிங்கள மொழி மூலமே தோட்டப் பிள்ளைகளுக்குக்கல்விபுகட்ட வேண்டுமென்று கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

### நாம் வரக் காரணம்

ஏற்கனவே மலையக மக்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டுள்ளன. இப்பொழுது உங்களின் தொழில் உரிமையும், உங்கள் குழந்தைகளின் கல்வி உரிமையும் பறிபோகின்றன. மேலும் நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவேதான் நாம் இன்று உங்கள் மத்தியில் வந்துள்ளோம்.

நமது கட்சியின் திட்டங்களில் முதன்மையானது இழந்த உங்கள் வாக்குரிமை, குடியுரிமை, பெற்றுத் தருவதென்பது. அன்று உங்கள் உரிமைகளுக்கு உலை வைக்கும் மசோதா பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பொழுது, உங்கள் மத்தியில் தொழிற் சங்கம் வைத்து நடாத்தும் தலைவர்கள் பலரும் எதிர்த்து வாக்களித்தார்கள். ஆனல் அத்துடன் அவர்கள் போராட்டம் நின்றுவிட்டது.ஆனல் நாம் இதுவரை நடாத்திய போராட்டங்கள் அனைத்திலும் உங்கள் உரிமைகளையும் வலியுறுத்தி வந்துளோம்.

### உரிமை பெற்றுத் தருவது உறுதி

இப்பொழுது உங்களுடன் நெருங்கிய உறவு கொள்வது எப்படி? உங்களுக்கு நேரடியா உதவுவது எப்படி? என்று சிந்தித்தன் [illegible] இன்று நாம் ஆர[illegible] தொழிற் சங்கம்.மலையக மக்களில் ஒருசிறு தொகையினர் தவிர்ந்த ஏனையோர் தொழிலாளர்களே. எனவே மலையக மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு சிறந்த ஒரே வழி தொழிற் சங்கம் அமைப்பதே என்ற முடிவிற்கு வந்துள்ளோம். அதற்கு மாற்றுக் கட்சியினர் நம்மைப் பார்த்துப் பயப்படத் தேவையில்லை. மலையக மக்களின் வாழ்க்கையிலுள்ள குறைகளை, இழந்த அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு நமது முழுப் பலத்தையும் பயன் படுத்தி முயற்சி எடுப்போம். உதவி கெட்டு உரிமை கெட்டுக் கிடக்கும் மனிதர்களை முழு மனிதர்களாக்குவதே எமது கடமை.

### நமது தோற்றத்திற்கு நீங்களே காரணம்

கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் பேசுகையில் கூறியதாவது: நமது கட்சி இதுவரை காலமும் எப்படி வடகிழக்கு மாகாண மக்களின் நலனைப் பேணிவந்துள்ளதோ அதே போல உங்கள் நலனையும் பேணிக் காக்கும் பொறுப்பில் தவற மாட்டாது.

நமது கட்சி உருவானதற்கு முழு முதற் காரணம் மலையக மக்களேதான். உங்கள் உரிமைக்கு உலை வைக்கும் மசோதா அன்று பாராளுமன்றத்தில் வந்த பொழுது, அப்பிரச்சினையில் எழுந்த கருத்து வேறுபாடு காரணமாக, அன்றிருந்த தமிழ் காங்கிரஸ் என்னும் அரசியல் கட்சியில் இருந்து விடுபட்டு, உருவாக்கப்பட்ட இயக்கமே தான் இலங்கைத் தமிழரசுக் கட்சி.

### யார் வகுப்புவாதிகள்?

நம்மைப் பார்த்துப் பலர் வகுப்புவாதிகள் என்கிறார்கள். உண்மையில் யார் வகுப்புவாதிகள்? சிறுபான்மை மக்களின் உரிமையைப் பறிப்பவர்கள், உரிமைக்குப் பங்கம் விளைவிப்பவர்கள் வகுப்புவாதிகளா? அல்லது சிறுபான்மையினரின் உரிமைக்குப் போரிடும் நாம் வகுப்புவாதிகளா? உரிமைக்கொரு இயக்கத்தை ஆரம்பிப்பது வகுப்புவாதம் என்றால் அது வாழட்டும், வளரட்டும்.

இந்நாட்டின் அரியாசனத்தில் தமிழ் மொழி சரியாசனம் பெற்று, தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சகல உரிமைகளும் பெற்று வாழ வேண்டுமென்பதே நமது நோக்கம்.

### எங்கள் திட்டம் அவர்களிடம் உண்டா?

[illegible] அரசியல் பிரச்சினை, பிரஜாவுரிமை, தொழில் உரிமை இவற்றைப் பெறுவதற்கும் போரிட முடியும்.ஆனல் உங்கள் மத்தியில் உள்ள மற்றைய இயக்கங்களிடம், உங்கள் இழந்த அரசியல் உரிமைகளுக்குப் போராட எவ்வித திட்டமும் கிடையாது. இந்த நாட்டின் ஆட்சி பீடத்தை அடிபணிய வைக்கும் ஆற்றல் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உண்டு. நமது கடந்த கால வரலாறு இதைத் தெளிவாகக் காட்டுகிறது.

ஆட்சியாளரை மேலும் அடிபணிய வைக்கவேண்டுமானல் அனைவரும் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட வேண்டும். நம் மத்தியில்உள்ள பாகுபாடுகள், பிரதேச வேறுபாடுகள் நீங்க வேண்டும். நமது உரிமைகளைப் பெறுவதற்கு இப்பாகுபாடுகள் தடையாக இருக்கக் கூடாது. நமது உரிமைகளைப் பெறுவதற்கு அகிம்சை வழிப் போராட்டம் ஒன்றே சிறந்த வழி.

### எமது உழைப்பே எம்மை நசுக்குகிறது

இந் நாட்டின் பொருளாதாரம் உங்கள் கையிலே உள்ளது. இந்த நாட்டின் நெற் களஞ்சியம் கிழக்கு மாகாணம். எங்களுடைய உழைப்பிலேயே இந்த அரசாங்கம் இயங்குகிறது. ஆனல் எங்கள் உழைப்பைக்கொண்டே நம்மை நசுக்க முயலுகிறது இந்த ஆட்சி பீடம். எனவே தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஒற்றுமை அவசியம். மலையக மககளே! உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய தமிழரசுக் கட்சியைத் தவிர, இந்த நாட்டில் உள்ள வேறு எந்தக் கட்சியாலுமோ அன்றி வேறு எந்த இயக்கத்தாலுமோ முடியாது. இதை நீங்கள் நன்ருகத் தெரிந்து கொள்ள வேண்டும்! புரிந்து கொள்ள வேண்டும்!"

### பெயர் சூட்டுதல்

மலையக மக்கள் மத்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தொழிற் சங்கம் அமைக்க வேண்டும் என்று கூறும் பிரேரணையை 'மலை முழக்கம்' ஆசிரியர் திரு. கே. இராமன் முன் மொழிய 'சாமி மலை, தொங்கத் தோட்டத்தைச்' சேர்ந்த திரு. மனுவேல் கங்காணி வழி மொழிய தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொழிற் சங்கத்திற்கு, 'இலங்கை தொழிலாளர் கழகம்' என்னும் பெயரை மெடகான்ட தோட்டத்தை சேர்ந்த திரு. கணபதி முன்மொழிய, 'சாமி மலை தொங்கத் தோட்டத்தை' சேர்ந்த திரு. எஸ். பெரியசாமி வழி மொழிய ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. சட்ட விதிகள் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது.

### நிர்வாக உறுப்பினர்

தலைவர்: டாக்டர் இ. மு. வி. நாகநாதன், எம். பி., செயலாளர்: திரு. பி. எம். கிருஸ்ணசாமி, துணைத் தலைவர்கள்: திருவாளர்கள், கே. இராமன், எஸ். நாராயணசாமி, ஆர். எம். இராமையா, அ. அமிர்தலிங்கம் எம். பி., துணைச் செயலாளர்கள்: திரு. மு. எல்லாளன், திரு. வே. கயிலாயபிள்ளை, இணைப் பொருளாளர்கள்: திரு. எம். திருச்செல்வம் கியூ. சி., திரு. கே. சிவானந்த சுந்தரம். மலையகம் முழுவதும் பரவலாக 21 அங்கத்தவர்கள் கொண்ட செயற் குழு வொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

கூட்ட ஆரம்பத்தில் திரு. அருளானந்தத்தின் தேசிய கீதமும், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் தமிழ் மொழி வணக்கப் பாடலும் இடம் பெற்றன.

திருவாளர்கள் தென்னரசு, வீ. தருமலிங்கம், கே. இராமன், மு. எல்லாளன், அ. அமிர்தலிங்கம் எம். பி. எம்.ஈ.எச். முகம்மதலி எம்.பி. ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள்.

[டன்பார் மைதானக் கூட்டச் செய்தியும் நிர்வாகிகள், செயற் குழுவினர் அறிமுகமும் அடுத்த வாரம் இடம் பெறும்]

### வருமானவரி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யென்றும், பாரத்தைநிரப்ப ஆங்கிலம் தெரிந்தவரின் உதவியை நாடும் படியும் கூறப்பட்டுள்ளதென நான் அறிகிறேன்.

தமிழ் மாத்திரம் தெரிந்த இந்த சுதேச பாடசாலை அதிபரைப் போன்று இன்னும் எத்தனையோ பாடசாலை அதிபர்கள் உள்ளடங்கிய பல்லாயிரக் கணக்கானவர்களுடன் தொடர்புள்ள வருமானவரி இலாகா, தேவையான பாரம் தமிழில் அச்சிடப்பட வேண்டுமெனக் கோரப்பட்டுப் பல மாதங்கள் பின்னரும், அச்சிடாமல் விட்டது, குறைந்த அளவில் சொல்லப்போனற்கூட, அவர்களுடைய வருமானத்துக்கே உகந்தது ஆகாது."

### வேடதாரி ராமமூர்த்தி கைது

இந்திய கொம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கம்மிட்டி உறுப்பினரும், பாராளுமன்ற அங்கத்தவருமான திரு. பி. ராமமூர்த்தி கடந்த வாரம், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இவர் டெல்லியிலிருந்து பங்களூருக்குச் சென்று, அங்கிருந்து சென்னைக்கு மாறுவேடத்தில் வரும் போது கைதானர்.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மழைக் காலம்

(சிந்தனைச் செல்வி, ஏழாலை)

விவசாயிகள் குதூகலத்துடன் வரவேற்கும் பொன்னுள் மழை நாளேயாகும்.

வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்று ணரற்பாற்று

என்னும் குறள் மூலம் வள்ளுவர் மழைக் காலம் மனிதருக்கு மிகமிக அவசியம் என்கிறார். மழையற்ற பூமியில் கொடிய பசிப்பிணி தாண்டவமாடும்.

மழைக் காலங்களில் நிலம் சேறும் சகதியுமாய் இருப்பதுடன் குளிர்ந்த வாடைக் காற்றும் வீசும். மழை நாள் விவசாயிகளுக்கு இன்பத்தை அளித்தாலும் ஜனங்கள் இந்நாட்களில் தத்தம் கருமங்களை நினைத்த உடனே முடிக்க இயலாது திண்டாடுவர். இக் காலங்களில் மரம் செடிகள் புத்துயிர் பெற்று துளிர்ர்த்து செழிப்புடன் காணப்படும். களங்கமற்ற தெள்ளிய நீலவானம் கருமுகில்களால் அலங்கரிக்கப்பட்டு இருட் சுரங்கம் போற் தென்படும். கதிரவனும் கலக்கத்துடன் இடைக்கிடை எட்டிப் பார்த்துத் துன்பச் சிரிப்பை உதிர்த்துவான். கானகங்களில் மயில்கள் களிப்போடு நடமிடும். மிருகங்கள் முழைகளிற் பதுங்கும்.

மலை நாடுகளில் கற்பாறைகள் தகர்ந்து விழுந்து வீடுகளையும் பொருட்களையும் அழித்து உயிர்களையும் உறிஞ்சி விடுகின்றது. மரங்கள் 'படபட' வென்று முறிந்து சாயும். நீர் வற்றிய ஆறு, கடல், குளம், குழிகள் யாவற்றிலும் நீர் ததும்பும். ஆறுகளும் நீர் வீழ்ச்சிகளும் நுங்கும் நுரையுமாகக் கொப்பளித்துக் குமுறிப் பாயும் காட்சி பயப்படும்படியாக இருக்கும். கடல் கொந்தளிப்புற்றுக் கரைகளை அரிக்கும்! மழைக்காலங்களில் 'கட கட'வென அண்டமெல்லாம் அதிரும்படியான இடியும், 'பளீர் பளீர்' எனக் கண்ணைப் பறிக்கும் மின்னலும் தோன்றி மறையும். மழைக் காலங்களில் அட்டைப் பூச்சி முதலிய ஜீவ ஜந்துக்கள் நிலத்திலிருந்து வெளிப்படும். மழையால் வெள்ளப் பெருக்கும் ஏற்படும்.

மழைக் காலத்தினால் பயிர்கள் நன்மையும் செழிப்பும் அடைகின்றன. ஆனால் மனிதர் பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் அடையவேண்டியிருக்கிறது.

## ஊன்றி உணருதற்குரிய உண்மைகள்

— கௌரி செல்லத்தம்பி —

கல்வி குடிக்கக் குடிக்க இன்பந்தரும மது.

தனது மொழியை இழந்தவன், தன் உயிரை இழந்தவனுவான்.

தூய மனமே இறைவனின் இருப்பிடம்.

மனதில் தீய சிந்தனைகள் இருந்தால் உடல் நலம் குன்றும்.

அறியாமை நோயைச் சுகப்படுத்த கல்வியே தக்க மருந்து.

அரசியல் ஒரு கொந்தளிக்கும் ஆழி.

மாணவர் தேசத்துக்கு ஆக்கப்பணி புரிய வேண்டும்.

பூ ஒருமுறை மலர்ந்தால் அத்துடன் அதன் ஆயுள் முடிந்துவிடுகிறது.

மனிதனுள்ளத்தில் வெறுப்புணர்ச்சி இருக்கும் வரை யுத்தத்தைத் தடுக்க முடியாது.

இயற்கையழகு இறையழகன்றோ?

எனது கிராமம்

## உரும்பராய்

(செல்வி எஸ். ஜெகசோதி)

எனது கிராமத்தின் பெயர் உரும்பராய். இக்கிராமம் யாழ்ப்பாணத்தில் இருந்து ஐந்து மைல் வடக்கே அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலிக்குச் செல்லும் தெருவீதி இக் கிராமத்தை ஊடறுத்துச் செல்கிறது. சுமார் நான்கு மைல் விஸ்தாரணமுடைய இக்கிராமத்தை மிகப் பெரிதென்றோ அன்றி மிகச்சிறிதென்றோ கூற முடியாது.

இங்கு இந்து தேவாலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், தபாற் கந்தோர், நூல் நிலையங்கள், கத்தோலிக்க தேவாலயம், பாடசாலைகள், பல வியாபார ஸ்தாபனங்கள், நெசவுசாலைகள், வியாபாரச் சந்தைகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முதலியன அமைந்துள்ளன. சைவத் தேவாலயங்களுள், சிதம்பர சுப்பிரமணியர் ஆலயம் சரித்திரப் பிரசித்திபெற்றதாகும்.

இங்குள்ள மக்கள் விவசாயம், கைத்தொழில், உத்தியோகம் போன்ற தொழில்களைச் செய்கின்றனர். முக்கியமான தொழில் சுருட்டுத் தொழிலாதும். நம் கிராம மக்கள் எவர் எதைக் கேட்டாலும் இல்லையென்று சொல்லாது கொடுக்கும் திறனுடையவர்கள்; அன்புடன் பேசிப் பழகும் திறமை உடையவர்கள்; மற்றும் அறிவு, அழகு, ஒழுக்கம் முதலியவற்றால் சிறந்தவர்கள். ஆகவே இக்கிராமத்தைப் பலரும் போற்றுவார்கள். இப்படியிருந்தும் ஆலயத்தில் பலியிடுதல், 'சாராயம்' வடித்தல் போன்ற இரண்டொரு செயலால் இகழ்ச்சியும் அடைகின்றது. என்றாலும், இகழ்ச்சியை ஒழித்து, புகழ்ச்சியை நிலைநாட்ட நம் கிராம மக்கள் ஊக்கம் எடுக்கின்றனர்.

எமது கிராம மக்கள் தீவிர தமிழரசுவாதிகள். ஆனாலும், பிறகட்சியினரின் கருத்துக்கு உரிய மதிப்பு அளிக்கும் தன்மை வாய்ந்த பெரு மக்கள். ஆகவே, கட்சிப் பூசலுக்கு இங்கு இடமில்லை.

பல பெரியார்களும், மேதைகளும் தோன்றிய எமது கிராமத்தில் ஐக்கியம் வளர்ந்து, விரைவில் கிராமங்களின் முன்னணியில் சிறப்புடன் நின்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு, அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப் பத்திரம்**

இல. 1

பெயர்______________________

பாடசாலை______________________

விலாசம்______________________

______________________

______________________ ______________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

**இவ்வார இதழில் வெளியாக விருந்த ஜி.அன்ரனி ராசையாவின்**

**சிறுவர் கதை**

**அடுத்த வாரம் வெளிவரும்**

## அறிவு

—மு. சடாட்சரன்—

அறிவே எங்கள் உயிராகும்
அதுவே தமிழர் நெறியாகும்
அறிவைப் போலே உயர்செல்வம்
அகிலத் தினிலே வேறில்லை.

★

அறிவுக் கலைக்கு முடிவேது?
அதைக் கொளார்க்கு விடிவேது?
அறிவைக கற்றால் முன்னேற்றம்
அதனை வெறுத்தால் பின்னேற்றம்.

★

அள்ள அள்ளப் பணங்குறையும்
அளிக் கொடுக்கக் கலைஉயரும்
அரிய பொருளின் விலைஉயரும்
அறிவு பெருகினால் மதிப்புயரும்.

★

அறிவே சிறந்த வழிகாட்டி;
அதற்கு நேர்மை ஒளியூட்டி
அறிஞர் வழியில் நடத்திடுவோம்
அல்லல் இன்றி வாழ்ந்திடுவோம்.

## உயிரீந்தும்......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு அங்குள்ள மன்னர்களைக் கை விலங்கிட்டு அழைத்து வந்த காட்சி எண்ணி எண்ணிப்பெருமைப் படும் நிகழ்ச்சியாகும்.

இவ்வாறு மறம், மானம், மாண்டவழிச் செலவு மட்டும் இருந்தால் போதாது. தேற்றமும் வேண்டும். தேற்றம் என்பது என்ன? எடுத்துக் கொண்ட செயலை, அச்செயலுக்கு ஏற்றபடி செய்து முடிப்போம் என்ற நம்பிக்கையாகும்.

எனவே, இத்தகைய, உறுதிகளை, குண நலப் பண்புகளை நாம் பெற்று விட்டால் இப்போது ஏற்பட்டிருக்கும் போரில் நாம் வெல்வது மிக எளிதானதாகும்!

## கிழக்கிலங்கை..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்: திரு. செப. நாதன், துணைத் தலைவர்: திரு. தோ. சிங்கராசா, இணைச் செயலாளர்: திரு. 'சுசீபன்', திரு. அ. அந்தோணிமுத்து, பொருளாளர்: திரு. ஞா. அல்போன்ஸ், துணைப் பொருளாளர்: திரு. சு. செல்வராசா.

செயற்குழு: திருவாளர்கள் செ. தியாகராசா, செ. சூசையப்பு, சி. தாசன், இரா. நிக்லஸ், வெ. அன்ரனி, வ. அந்தோனி, ஞா. இராசதுரை, ஞா. அன்ரூஸ், க. சற்குணம், சி. மரியநேசன், தெ. இராசதுரை, செல்லத்துரை, லூ. வெலிங்டன், தாமோதரம், ஆ. தங்கராசா.

அன்புள்ள மருமக்களே!

## உங்களிடம் ஒரு முக்கிய அறிவிப்பு

அத்தாட்சிப் பத்திரம் அனுப்பவில்லை. அனுப்பவில்லை என்று உங்களிற் பலர் என் மீது கடிதக்கணைகள் தொடுத்த வண்ணமே இருக்கின்றீர்கள்.

ஆயிரக்கணக்கான மருமக்கள் சேர்ந்து வரும் 'வளர்மதி' பகுதியில், எல்லோருக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் அனுபபி வைப்பதென்பது சுலபமான காரியமல்ல.

ஆனாலும், உங்கள் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்ய உத்தேசித்துள்ளேன்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் 'சுதந்திரன்' தடைப்பட்டிருந்த காலத்துக்குப் பின், 'சுதந்திரன்' மீண்டும் மே மாதம் இரண்டாம் வாரத்திலிருந்து வெளியாக ஆரம்பித்ததல்லவா? அந்த வாரந் தொடக்கம் சேர்ந்த மருமக்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்பிவைக்கலாமென்று எண்ணியுள்ளேன்.

அதற்கு உங்கள் உதவியும் தேவைப்படுகின்றது. மே மாதத்திலிருந்து சேர்ந்த மருமக்கள் எல்லோரும் தமது முழுப் பெயர், விலாசம் இவற்றுடன் 'வளர்மதி' அங்கத்துவ எண்ணையும் குறித்து வளர்மதி மாமாவுக்கு நீங்கள் அனுப்பி வைக்க வேண்டும்.

இப்படி அனுப்பி வைக்கிறவர்களுக்கு மட்டுமே அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

அத்தாட்சிப் பத்திரங்கள் பெறுவதில் உங்களுக்கு எவ்வளவு ஆவல் உண்டு என்பதையும், வளர்மதி மீது உங்களுக்கு எவ்வளவு அக்கறை உண்டு என்பதையும் நீங்கள் உங்கள் பெயர், விலாசம், அங்கத்துவர் எண் இவற்றைக் குறித்து அனுப்புவதில் காட்டும் ஆர்வத்திலிருந்து தான் நான் அறிந்து கொள்ளவிருக்கிறேன். ஆகவே, மாமாவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து, உங்கள் அத்தாட்சிப் பத்திரங்களை விரைவில் பெற்றுக் கொள்வீர்களென நம்புகிறேன்.

அத்தாட்சிப் பத்திரம் சம்பந்தமாக, ஒவ்வொரு வாரமும் தான் உங்களுக்கு நினைவூட்டிக் கொண்டே வருவேன்.

மனம் குளிர்ந்ததா, மருமக்களே? அப்படியானால், உடனே செயலில் இறங்குங்கள்!

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## சந்தாதோட்டம் சனசமூக நிலையப் புதுக்கட்டட திறப்பு விழா

"ஒரு கிராமத்தைக் கூறு போடுவதற்கு ஒரு சனசமூக நிலையமோ அல்லது வாசிக சாலையோ அல்லது சங்கக் கடையோ போதுமானது. ஏனென்றால் பணப்புளக்கம், பதவி மோகம், அரசியல் பேதம் ஆதியன இப்படிப் பட்ட கூட்டங்களில் இலகுவில் புகுந்து விடுவதனால் தான். இப்படியான பொது ஸ்தாபனங்கள் பொறுப்பு வாய்ந்த அறிவும் ஆற்றலும் நிறைந்த நிர்வாகிகள் கையில் அவசியம் இருப்பதோடல்லாமல் அவர்கள் சகிப்புத் தன்மையுள்ளவர்களாயும், விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மை படைத்தவர்களாயும் இருந்தாலன்றி உருப்பட மாட்டார்கள்."

இவ்வாறு புலோலி கிராமச் சபைத் தலைவர் திரு. சி. மாணிக்கவாசகர் அவர்கள் புலோலி கிழக்கில் உள்ள சந்தா தோட்டம் சனசமூக நிலையத்தின் வாசிகசாலைப் புதுக் கட்டடத்தை 8-12-62 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் திறந்து வைக்கும் போது கூறினர்.

தொடர்ந்து பேசுகையில் அவர் இந்த ஸ்தாபனம் வளர்ந்து இப்பகுதி மக்களுக்கு நல்ல சேவை நல்க வேண்டுமென ஆசிகள் கூறினர்.

பொதுக் கூட்டத்துக்குப் பருத்தித்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. துரைரத்தினம் அவர்கள் தலைமை தாங்கினர். அவர் தமது தலைமைப் பேருரையில் சேவையில் பேதமிருக்கப்படாது என்றும், தான் அப்பகுதி மக்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்ய எந்த நேரமும் தயாராக இருப்பதாகவும் கூறினர். அப்பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தான் பாடசாலை நிறுவுவதற்கு ரூ. 24,000/- அரசாங்கத்தாரிடம் வாதாடி ஒதுக்கிக் கொடுத்ததே போதிய சான்ருகும் என்றும் கூறினர். இப்பகுதியிலுள்ள மக்கள் எந்த வித வேறுபாடின்றியும் ஒரு தாய் பிள்ளைகளாய், ஐக்கியமாக வாழ்ந்து, தமிழினத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைய வேண்டும்; அதற்கு இதுபோன்ற ஸ்தாபனங்கள் கட்டி வளர்க்கப்பட வேண்டும் என்றும் கூறி வாசிகசாலை, மாணவர்களுக்கு மட்டுமல்ல, வயதில் முதிர்ந்தோர்க்கும் உரியது என்றும், அவர்கள் உற்சாகத்தால் வாலிபர்களும் சிறுவர்களும் ஊக்கமடைவார்களென்றும் கூறி ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு வாழ்த்துகள் வழங்கினர்.

திரு. வி. பொன்னம்பலம் அவர்கள் பொதுச் சேவையில் சுயநலம், குடும்பப்பகை, தற்பெருமை, குறுகிய மனப்பான்மை போன்ற அற்பத் தனங்கள் நுழையப்படாது என்ருர். பிழைகள் ஏற்படுங்கால் நிச்சயம் அவை கண்டிக்கப்பட வேண்டியவை. அதனல் ஸ்தாபனம் குலைக்கப்படவேண்டுமென்ற நியதியல்ல. கண்டனங்களும் அதனதற்குரிய இடத்தில் நல்ல முறையில் கண்டிக்கப் படவேண்டும். இப்படிச் செய்யின் ஸ்தாபனங்கள் நல்ல வளர்ச்சியுறும் என்று அவர் மேலும் கூறினர்.

திருவாளர்கள்: வல்லிபுரம் (சைவப்புலவர்), வி. செல்லையா, வி. கே. தங்கராசா, சி. ஈ. குணரத்தினம், இ. சந்திரராசா, எம். சி. சுப்பிரமணியம், நா. சங்கரப்பிள்ளை அவர்களும் சொற்பொழிவாற்றினர்.

நிலையச் செயலாளர் திரு ஆ. நடராஜன் நன்றி நவிலலுடன் பொதுக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

---

## சம்மாந்துறை கலாபிவிருத்திக் கழகம்

கலைப்பணி, சமூகசேவை ஆகிய அடிப்படை நோக்கங்களைக் கொண்ட இக்கழகம் ஆறு வருடத்திற்கு மேலாக இன்று இயங்கி வருகிறது. பல நாடகங்களையும், கலைப் போட்டிகளையும், கலைவிழாக்களையும் நடாத்தி மக்களிடையே பெரும் மதிப்பைப் பெற்றுள்ளது. அண்மையில் எம். ஐ. எல். பக்கீர்த்தம்பி அவர்களின் 'உரை மலர்' எனும் நூலை அரங்கேற்றம் செய்து வைத்தது. 'புரட்சி மாறன்' அவர்களை ஆசிரியராகக் கொண்டு நடாத்தப்படும் 'கலைக்குரல்' மாத சஞ்சிகையும் இதன் வெளியீடேயாகும். இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடக நடனக் குழுவில் இக்கழகம் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

9-12-62ல் நடைபெற்ற இக்கழகத்தின் நிர்வாக சபை மாற்றத்தின்போது பின்வருவோர் இவ்வருட புது உத்தியோகத்தர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்:

தலைவர்: ஏ. எச். எம். அப்துல்லா (ஆசிரியர்), உபதலைவர்: எம். இலட். கமால்காரியப்பர், செயலாளர்: யூ. உம். முஸ்தபா (ஆசிரியர்), துணைச் செயலாளர்: எம். ஐ. எம். அலியார், பொருளாளர்: ஐ. உதுமா லெவ்வை. மற்றும் எம். வை. எம். உசைன் (ஆசிரியர்), ஏ. எல். எம். யாசிம் (ஆசிரியர்), எம். எம். இஸ்மாயில் (ஆசிரியர்), எம். ஏ. எம். அமானில்ல ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

---

## தேன் தமிழ் மன்றத் தீர்மானம்

தேன் தமிழ் மன்றத்தின் உறுப்பினர் கூட்டம் 16-12-62ல் கொடிகாமம் கட்டப்பறிச்சான் சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

அவ்வமயம், அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டத்திற்கும், கோப்பாய் பெண்கள் பயிற்சிக் கல்லூரியை மூடுவதென்ற திட்டத்துக்கும் கண்டனம்தெரிவிக்கும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

---

## பாரதி விழா

சாரனியா குரூப், தங்கமலைத் தோட்டத்து காந்தி வாசகசாலையின் சார்பாக கடந்த 11-12-62 அன்று பாரதி விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

விழாவை திரு. திருக்குறளார் அவர்கள் துவக்கிவைத்தார்கள். திருவாளர்கள் ஆர். சண்முகம், எஸ் கோவிந்தன், எஸ். தளமன் ஆகியோர் விழாவில் உரை நிகழ்த்திஞர்கள்.

# இந்தியக் கொம்யூனிஸ்டுகள் சீன ஏஜெண்டுகளே

## ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி கருத்து

சீனப் பூகோளப் படங்களை வைத்துக் கொண்டு சீனுவின் நிலைக்கு ஆதரவாகக் கொம்யூனிஸ்டுகள் பிரச்சாரம் செய்கிருர்கள் என்று தகவல் கிடைத்திருக்கிறது. பாதுகாப்பு நிதிக்குப் பணம் கொடுக்க வேண்டாம், இரத்த தானம் வழங்க வேண்டாம் என்றும கொம்யூனிஸ்டுகள் பிரச்சாரம் செய்கிருர்கள் அக் கட்சியின் விசுவாசமுள்ள தலைவர்கள் இந்த நடவடிக்கைகளைத் தடுக்காவிடில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் நேரிடும்.

இவ்வாறு ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சஞ்சீவி ரெட்டி ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது: கொம்யூனிஸ்டுகள் இன்னமும் நாட்டுப் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கக் கூடிய கொள்கைகளைப் பின்பற்றுகிருர்கள்.

சில கொம்யூனிஸ்டுகள் தலைமறைவாகப் போகத் திட்டமிட்டுள்ளதாக சில செய்திகள் கிடைத்துள்ளன. அப்படி அவர்கள் செய்வார்கள் என்ருல் பகிரங்கமாகத் தங்களை கொம்யூனிஸ்டு சீன ஏஜெண்டுகள் என்று அறிவித்துக் கொள்வதாகவே அர்த்தம். இனியாவது கொம்யூனிஸ்டு கட்சியிலுள்ள பொறுப்புள்ள தலைவர்கள் சீனுவுக்குப் பரிந்து பேசுவோரை அகற்ற வேண்டும்.

சுதந்திர இயக்க காலத்திலும் கொம்யூனிஸ்டுகள் அந்நியன் பக்கமே இருந்தார்கள். 1942-ல் ஆயிரக்கணக்கான தேச பக்தர்களுக்கு எதிராக பிரிட்டிஷ் ஏஜெண்டுகளாக சேவை செய்தவர்கள் தான் இந்தக் கொம்யூனிஸ்டுகள். இது இந்திய வரலாற்றில் உள்ள அவமானகரமான பகுதி. இதை இன்னும் மக்கள் மறக்கவில்லை என்பதைக் கொம்யூனிஸ்டுகள் தெரிந்துகொள்ள வேண்டும், என்று கூறினர்.

## உள்வத்தை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பாலைக் கலி பிரிவுக்கு உரியது என்ருல், குறிஞ்சிக்கலி புணர்தலும், புணர்தல் நிமித்தமுமாகும்.

அப்படியாயின்?

இளைஞன் ஒருவன் கட்டழகி ஒருத்தியைக் கண்டு ஏங்குவது; இரவு பகலாக அதே நினைவாக இருப்பது; ஈற்றில் அவளது தோழி மூலம் அவள் அன்பைப் பெறுவது: திருட்டுத் தனமாகச் சந்திப்பது; இவை அனைத்தும்.

இன்றைய கல்லூரிக் காதல் போல் அல்ல.

தலைவி தனது உள்ளம், உடல் அனைத்தையும் தலைவனிடம் ஒப்படைக்கிருள்.

அவற்றைச் சரியான முறையில் கண்காணிப்பது தலைவனின் கடமை.

எனவே காதலர் உள்ளத்தைக் கண்ணுடி போல் காட்டுவது குறிஞ்சிக் கலி.

அடுத்து மருது மணத்தைக் காண்போம்.

(தொடரும்

---

## அண்ணு பேச்சு ஒத்திவைப்பு

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் கடந்த 19ம் திகதி ஆங்கிலத்தில் பேசுவதாக இருந்த நிகழ்ச்சி தற்காகலிமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

## போர்முரசு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கிருன். அப்படியான பேடிகளுக்கு இவ்வேளத்தின் வீர வாக்கு வீறுகலந்த மாத்திரை! களங்களைக் கட்டில் அறையாக்கிக் குருதி வெள்ளத்திற் குளிக்கும் மறக்குல மாணிக்கங்களுக்கும், கால் தூக்கிக் களம் செல்லத்துடிக்கும் சோழச் செம்மலின் வேளத்திற்கும் என்ன வேற்றுமை? தமிழன் வீரமே வீரம்! அவன் வளர்த்த வேளமே வேளம்! அதன் வீரப்பண்பே பண்பு!

புலவன் கண்ட அந்த வேளத்தை நாமும் காண வேண்டாமா? முத்தொள்ளாயிர முக்கனிக் கவிச் சோலையில் அது நிற்கிறது:

கச்சி ஒருகால் மிதியா,
ஒருகாலால்
தத்துநீர்த் தண் தஞ்சை தான்
மிதியாப்—பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியா வருமே
நம்
கோழியர்கோக் கிள்ளி களிறு.

பெண் கல்வி:

# தாயையே குழந்தை பின்பற்றுகிறது

## அறிவுள்ள அன்னையே உலகுக்கு அவசியம்

—செல்வி மனேரஞ்சிதம் தேவி, நீர்கொழும்பு—

[பெண்ணுக்கு கல்வி அவசியம் என்று சென்ற வாரம் செல்வி நஹீமா பஷீர் எழுதியிருந்ததைத் தொடர்ந்து, இக் கட்டுரையை அனுப்பியிருக்கிருர் செல்வி மனேரஞ்சிதம் தேவி. முன்னவர் சொன்னதையே பின்னவரும் வற்புறுத்துகிருர்.]

தன்னைப் படைத்த இறைவனை அறிந்து தானும் பிறரும் சித்தியை அடைய அருள் புரியும் உத்தமனையும்; தரும நெறி பிறழாது அரசாளும் அரசனையும்; கற்பனையிற் புகா அதிசயங்களை விஞ்ஞானத்தாற் கண்டு அம்பலப்படுத்தும் விஞ்ஞானியையும்; மற்றும் வெவ்வேறு துறைகளிற் பண்டிதராகிப் பூாரில் வாழ் மாந்தருக்கு உதவியருளும் சிரோன்மணிகளையும் பெற்று வளர்க்கப் பெண்களுக்குக் கட்டாயம் கல்வி இருக்க வேண்டுவது அத்தியாவசியமாகும்.

ஓர் குழந்தையின் வாழ்க்கையில் காணப்படும் நடவடிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பொதுவாக அக் குழந்தையினது சுற்றுடலையும், தாயையும், பொறுத்திருக்கும் என்பது உளசாஸ்திர நூல் வல்லாரின் முடிவு.

"நூலைப் போல சீலை" என்பதற்கியைய முக்கியமாகத் தமது தாயைப் போன்ற குண சுபாவ பழக்க வழக்கங்களை உடையராகக் குழந்தைகள் காணப்படுகின்றன. தந்தையானவன், குழந்தை காலையிற் துயிலெழு முன் வேலைக்குப் போய் மாலையிற் குழந்தை தூங்கிய பின் வீடு வருகிருன். ஆனல் தாயோ நாள் பூராவும் அக்குழந்தையோடே நெருங்கிப் பழக வேண்டி இருப்பதால், எதையும் பின பற்றும் குணம் உடைய குழந்தை உள்ளம் தனது தாயின் குண சுபாவங்களை அப்படியே பிரதி செய்கின்றது.

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ருற் போல், குழந்தைப் பருவத்தில் தாயைப் பிரதி செய்த பிள்ளை, தாய் படிப்பித்த அப் பழக்க வழக்கங்களும், குண சுபாவங்களும், நடவடிக்கைகளும் உள்ளவனுகவே கடைசிவரை ஒழுகின்றது. உதாரணமாக இன்று நமது மகாத்மாவை மாந்தருக்குள் தெய்வமெனப் போற்ற வழி பண்ணியவர் அவரின் தாய் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

எனவே ஓர் ஆண் மகன் வீரம் நிறைந்த ஓர் தைரியவானுய், நல்லொழுக்கம் மிக்க குண சீலனுய், உலகம் போற்றும் உத்தமனுய், தன்னலம் கருதாப் பெருந்தகையாய், மக்கள் விரும்பும் ஓர் பேரறிவாளனுய்த் திகழ வேண்டுமாயின் — அவனை வளர்க்கும் தாய் உயர்தரக் கல்வி பயின்ற ஓர் உத்தமியாய் இருக்க வேண்டும். 'கற்க கசடற... நிற்க அதற்குத் தக' என்ருற் போல கற்றதைக் கடைப்பிடிப்பவளுய் அவனைப் பின்பற்றும் அவளது குழந்தையும் கற்புடையவளாய், அடக்கமுடையவளாய், விருந்தினரை ஆதரிப்பவளாய்த் திகழ்வாள் என்பதற்குக் கேட்கவும் வேண்டுமா?

நாளை உலகம் இன்றைய குழந்தையின் கையிலிருப்பதால், அப்பொறுப்பை அவன் திடமுடன் ஏற்றுத் திறமையுடன் நடத்த வேண்டிய ஆற்றலையும் மனே தைரியத்தையும் தன் தாயிடமிருந்து பெற வேண்டியிருப்பதால், கட்டாயமாகத் தாயானவள் பூரண அறிவுள்ளவளாய், மூடக்கொள்கைகளில் நம்பிக்கையற்றவளாய்த் திகழ வேண்டுவது அவசியமாகும். அப்படியாயின் வருங்கால உலகம் பலவந்தமும் பலாத்காரமும், தடித்த பேச்சும், முரட்டுச் செய்கையும், பேராசையும், சுயநலமும், பட்டினியும், பயங்கரமுமின்றி அமைதியாக நிம்மதியுடன் சந்தோஷமாய் வாழுமென்பதை யாரும் ஒத்துக் கொள்ளாது போவார்களா?

தங்கள் குழந்தைகளைக் குறையற வளர்த்து. வருங்கால உலகில் தருமமும், சமாதானமும், நீதியும் சந்தோஷமும், சகோதர ஒற்றுமையும் நிலவப் பண்ணி உலகில் நடக்கும் அட்டூழிய ஊழல்களை நீக்கி உலகை உய்யப் பண்ணக் கட்டாயமாய்ப் பெண்களுக்கு உயர்தரக் கல்வி அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

வெம்பிளி (கண்டி)
ராஜ் (நீர்கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு)
மொடேர்ன் (பண்டாரவளை)

காமினி திரையில்
வார நாட்களில் தினசரி
பிற்பகல் 2-00 மணி



டி. ஆர். மகாலிங்கம்
அஞ்சலிதேவி
இ. வி. சரோஜா
மற்றும் பலர் நடித்த

இந்திரா பிலிம்ஸ் அளிக்கும்

# ஆடவந்த தெய்வம்



விரைவில் எதிர்பாருங்கள் சினிமாஸ் திரைகளில்

நடிப்பாலும், திகைப்பூட்டும், சம்பவங்களாலும்
இணையற்ற திரை விருந்து!

எம். ஜி.
ராமச்சந்திரன்,
பத்மினி, ராகினி,
எம். என்.
நம்பியார்,
எம்.என். ராஜம்,
எம். ஜி.
சக்கரபாணி,
எம். சரோஜா,
கே. ஏ.
தங்கவேலு,
மோகனா,
சகஸ்ரநாமம்
மற்றும்
பலர் நடித்த



# ராணி சம்யுக்தா

டைரக்ஷன்: யோகானந்

இசை: கே. வி. மகாதேவன்



குளிர்சாதனம் பொருத்தப்பட்ட மெஜஸ்டிக் திரையில்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

# கிங் ஓப் கிங்க்ஸ்

டெக்னிக் கலர்
டெக்னிராமா

## (ராஜாதி ராஜன்)

அதிக பணச் செலவில் உருவாக்கப்பட்ட உயர்தரமானதும்,
இதுவரை தயாரிக்கப்படாததுமான கிறிஸ்துவின் சரிதம்.



எல்பின்ஸ்டன் (மருதானை) றெக்ஸி (வெள்ளவத்தை)

மகத்தான ஐந்தாவது வாரம்!

எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—எம். ஆர். ராதா—எஸ். வி. ரங்கராவ்
நடித்த

# சாரதா



சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு விரைவில் வருகிறது!

திலிப்குமார்
மதுபாலா
பிருதிவிராஜ்
நடிக்கும்

# அக்பர்


(பம்பாயில் 2 வருடங்கள் தொடர்ந்து ஓடிய மொகல் இ அஸாம் என்ற உன்னத ஹிந்திப் படத்தின் தமிழ்ப் பிரதி)



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) றீகல் (நுவரெலியா)
றீகல் (கம்பளை) குமரன் (மன்னார்)

எம். ஆர். ராதா — எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
பி. எஸ். சரோஜா—சந்திரகாந்தா—கே. ஆர். ராமசாமி
ஓ. ஏ. கே. தேவர்—மனோரமா நடிக்கும்



# எதையும் தாங்கும் இதயம்

சங்கீதம்:
டி. ஆர். பாப்பா

பின்னணி: பி. லீலா, பி. சுசிலா, டி. எம். சௌந்தரராஜன், ஜானகி, ராகவன்



4-வது வாரம்!

செண்ட்ரல் (மருதானை)

பம்பாயில் 25 வாரங்களுக்கு மேல் ஓடியது!

*மாலா சின்ஹா *ராஜேந்திர குமார்
*அஷோக்குமார் *நந்தா

ஆகியோர் நடித்த

# தூல்-கா-பூல்

கதையாலும், இன்னிசையாலும் இதயத்தைக்
கவர்ந்திழுக்கும் உணர்ச்சிமிக்க ஒப்பற்ற
ஓவியம்.



எதிர்பாருங்கள்!

இலங்கை திரைவானிலே ஒரு புதுமை!

சிலோன் என்டர்டெயின்மன்ட்ஸ் சர்க்கியூட்டில்

சிவாஜி கணேசன்-கே. சாரங்கபாணி
மாஸ்டர் கோபி-எம். வி. ராஜம்மா

ஆகியோர் நடித்த

பத்மினி பிக்சர்ஸின்

# குழந்தைகள் கண்ட குடியரசு

இசை: டி. ஜி. லிங்கப்பா

பின்னணி: சீர்காழி கோவிந்தராஜன்,
திருச்சி லோகநாதன், பி. சுசீலா, ஜிக்கி



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில்
1962-ம் வருடம் டிசம்பர் மாதம் ... திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org